# திரு-தமிழக மக்களுக்கு

## கம்யூனிஸ்ட் கட்சி வேண்டுகோள்!

விலை 3 அணா

ஜனசக்தி

(கம்யூனிஸ்ட் கட்சி வா...

மலர் 10] ஞாயிறு 31—1—54

திரு-கொச்சியில் பிப்ரவரி 15-ம் தேதி ஆரம்பமாகும் பொதுத்தேர்தல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த போராட்டமாகும். இந்தத் தேர்தலில் என்னென்ன பிரச்சினைகள் அடங்கியிருக்கின்றன என்பதுபற்றி திரு-தமிழகப் பெருங்குடிமக்கள் பரிபூரணமாக ஆராய்ந்து பார்க்கவேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாகாண கமிட்டி விரும்புகிறது.

காங்கிரஸ்காரர்கள் 5 வருஷ காலமாக நடத்திய ஜனவிரோத ஆட்சி சம்பந்தமாக தங்கள் தீர்ப்பு என்ன என்பதை திரு-கொச்சி மக்கள் கடந்த பொதுத்தேர்தல் மூலம் தெளிவாக எடுத்துக்காட்டினர். 1948 தேர்தலில் மிகப்பெரிய மெஜாரிட்டியாக இருந்த காங்கிரஸ் கடந்த தேர்தலிலே ஒரு மைனாரிட்டியாக முறியடிக்கப்பட்டது. ஆனால், காங்கிரஸை முறியடித்து நின்ற எதிர்க் கட்சியினரிடையே அபிப்பிராய வித்தியாசங்கள் இருந்தமையாலும், எதிர்க்கட்சிகள் ஒன்றாக இணைந்து ஒரு சர்க்கார் நிறுவுவது தடைப்பட்டமையாலும் மைனாரிட்டி காங்கிரஸுக்கு மீண்டும் ஆட்சி பீடத்தில் ஏற முடிந்தது. இவ்வாறு ஆட்சிபீடத்தில் ஏறிய காங்கிரஸ்காரர்கள் தொடர்ந்து இரண்டு வருட காலமாக நடத்திய ஜனவிரோத ஆட்சியின் விளைவாக பெரியதோர் நெருக்கடி நிலைமை ஏற்பட்டது. காங்கிரஸ் மந்திரி சபைமீது நம்பிக்கையில்லை என்று திரு-கொச்சி சட்டசபை தீர்ப்புக் கூறிற்று. எனினும், ஆட்சிபீடத்திலிருந்து வெளியேற மனமில்லாத காங்கிரஸ்காரர்கள் அங்கேயே ஒட்டி இருந்துகொண்டு, திரு-கொச்சி மக்களின் இறுதித் தீர்ப்பு என்ன என்பதை அறிய விரும்புகிறோம் என்று கூறி மற்றொரு பொதுத்தேர்தலை கொண்டு வந்திருக்கின்றனர். காங்கிரஸ்காரர்கள் ஆட்சி நடத்திய இரு வருஷங்களில் மக்கள் சொல்லொணா இன்னல்கள் அனுபவிக்க நேர்ந்தது. வேலையில்லாத் திண்டாட்டத்தினால் ஜனங்கள் அடைந்துவரும் வேதனைக்கு எல்லையே இல்லை.

### காங்கிரஸ் ஆட்சியிலே

மக்களின் பிரஜா - உரிமைகள் பறிக்கப்பட்டன. பசுமலை, மட்டாஞ்சேரி முதலிய இடங்களிலே பாட்டாளிகள் பதைக்க பதைக்க சுட்டுச் கொல்லப்பட்டனர். எங்கெங்கே தொழிலாளர்கள் ஸ்தாபனரீதியாக ஒன்றுபட்டுப் போராடினார்களோ அங்கெல்லாம் காங்கிரஸ்காரர்கள் ஐ. என். டி. யூ. சி.யைக் கொண்டுவந்து தொழிலாளர்களுடைய ஐக்கியத்தை சிதைவுபடுத்தி அவர்களுடைய பலத்தை சின்னாபின்னமாக்க முயன்றனர். நிலச்சீர்திருத்தத்தை அமுல்நடத்தப்போவதாக 1948-லேயே தங்கள் தேர்தல் விஞ்ஞாபனம்மூலம் பறைசாற்றிய வாக்குறுதியை காங்கிரஸ்காரர்கள் காற்றிலே பறக்கவிட்டுவிட்டு பல்லாயிரம் இடங்களில் ஏழை விவசாயிகளை அவர்கள், பயிரிட்ட நிலங்களிலிருந்து வெளியேற்றி அகதிகளாகத் துரத்தினர். திரு-தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்கு பட்டணங்கள் விளாத்துறை, லிப்ட் இரிகேஷன், நெய்யாறு இடதுகரை கால்வாய், சம்பங்குளம் கால், மாம்பழத்துறை அணை முதலிய நீர்பாசன வசதிகள் மறுக்கப்பட்டன. பனையேறும் தொழிலாளருக்கு மலிவு விலையில் விறகும், கருப்புக்கட்டி உற்பத்தி உபகரணங்களும் கொடுக்கப்படவில்லை. கைத்தறி நெசவாளர்கள் கண்ணீரும் கம்பலையுமாக அலைந்து திரியும்படியான நிலையில் கைவிடப்பட்டனர். நெல்குத்திப் பிழைக்கும் ஏழைத் தாய்மார்களின் வயிற்றிலே மண்ணடிக்கப்பட்டது. 5 வருஷத் திட்டத்தின்போல் மக்கள் ஏமாற்றப்பட்டனர். தொழில்கள் தகர்ந்தன. தொழிற்சாலைகள் மூடப்பட்டன. மொழிவழி மாகாண அமைப்பு வாக்குறுதிகள் மீறப்பட்டன.

### ஜனநாயக சர்க்கார்

எனவே காங்கிரஸ்காரர்களை ஆட்சி பீடத்திலிருந்து அகல விரட்டிவிட்டு எதிர்க்கட்சிகளடங்கிய ஜனநாயக சர்க்கார்—மக்களுடைய இன்னல்கள் இடுக்கண்களுக்கு உடனடி நிவாரணம் அளிக்கும் சர்க்கார்—திரு-கொச்சியில் நிறுவப்படவேண்டுமென்று திரு-கொச்சி பொது மக்களும் அரசியல் கட்சிகளை சார்ந்தவர்களும் தங்களுடைய சொந்த அனுபவத்தின்மூலம் முடிவுகட்டிவிட்டனர். ஐக்கிய முன்னணிக்கும் பிரஜா சோஷியலிஸ்ட் கட்சிக்கும் இடையே ஏற்பட்டிருக்கும் உறவும், பொது மக்களிடையே வளர்ந்துவரும் ஒற்றுமையும், திரு-கொச்சி மக்களின் மேற்கூறிய உறுதிப்பாட்டிற்கு உற்ற சான்றுகளாகும்.

### மக்களே! யாருக்கு உங்கள் ஓட்!

எனவே திரு-தமிழகத்திலுள்ள வாக்காளர்கள் முன்னிலையில் நிற்கும் முக்கியமான கேள்வி இதுதான் :—

காங்கிரஸ்காரர்களின் ஜனவிரோத ஆட்சி திரு-கொச்சியில் தொடர்ந்து நடப்பதற்காக நீங்கள் வோட்டளிக்கப் போகிறீர்களா? அல்லது திரு-கொச்சி பொதுமக்களின் இன்னல்க

(கடைசி பக்கம் பார்க்க)

### குடியரசு தின படுகொலை

பம்பாய் மொரார்ஜி தேசாய் சர்க்கார் போனஸ் கோரிய கமலா மில் தொழிலாளர்மீது தடியடி, கண்ணீர் வெடி, துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. ஒருவர் படுகொலை!

இரத்த வெறி பிடித்த இந்தப் பேயாட்சியைக் கண்டித்து ஒரு லட்சம் தொழிலாளர்கள் கண்டன வேலைநிறுத்தம் செய்தார்கள்.

விபரங்கள் அடுத்தவாரம்.

## எழுந்தது ஐக்கிய முன்னணி! எடுத்தன...

# சர்வதேச தொழிலாளி வர்க்கம்

## என் உயிரைக் காப்பாற்றியது

### ரஷ்யா சென்று திரும்பிய தோழர் கல்யாணத்தின் புகழுரை

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாகாண கமிட்டி அங்கத்தினரும், தென் பிராந்திய ரயில்வே லேபர் யூனியன் தலைவருமான தோழர் எம். கல்யாணசுந்தரம் எம்.எல்.ஏ. சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் 27-1-54 காலை 11-45 மணிக்கு வந்திறங்கினார்.

தோழர் கல்யாணம் ஏறிவந்த விமானத்தைக் கண்டவுடன், அங்கு கூடியிருந்த ஏராளமான தொழிலாளர்கள் பலத்த கரகோஷம் செய்தார்கள்.

விமானத்தை விட்டு அவர் இறங்கியவுடன் தொழிலாளர்கள் பொங்கிவரும் ஆர்வத்தோடு ஓடோடியும் சென்று அவருடைய கைகளைப் பிடித்து முத்தமிட்டார்கள், கண்களில் ஒற்றிக்கொண்டார்கள்! மாலைகள் போட்டு வாழ்த்தொலிகள் கிளப்பினார்கள். அவர் உடல் நிலை நன்றாயிருப்பதைக் கண்டு, தொழிலாளர்கள் பூரித்த முகத்தோடு தங்களுக்குள்ளேயே 'நம்ம தலைவர் நல்லாயிருக்கிறார்' என்று மகிழ்ச்சி ததும்ப பேசிக்கொண்டார்கள்.

### 3 மாதங்களுக்குப் பின்

தோழர் கல்யாணசுந்தரம் காங்கிரஸ் ஆட்சியின் அடக்குமுறைக்கு ஆளாகி இதய நோயின் காரணமாக, பிழைப்பது அரிது என்ற முறையில் வெகுவாகக் கஷ்டப்பட்டு வந்தார்.

சிகிச்சையின் பொருட்டு 1953 செப்டம்பர் மாத வாக்கில், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில் ரஷ்யாவுக்கு சென்றார். போகும் வழியில் வியன்னாவில் நடைபெற்ற உலக தொழிற்சங்கக் காங்கிரஸில் கலந்துகொண்டு, சர்வதேசத் தொழிற்சங்கத் தலைவர்களுடன் விவாதித்து தொழிலாளர் பிரச்சினைகளைப் பற்றி அறிந்துகொண்டு, மக்கள் ஜனநாயக நாடாகிய ஹங்கேரி சென்று, அந்த நாட்டின் மந்திரிமார்களும், தொழிலாளர்களும் அளித்த மகத்தான உபசாரத்தைப் பெற்றுக்கொண்டு, நவம்பர் புரட்சி தின விழாவின் போது மாஸ்கோ சென்றார்.

விழாவில் கலந்துகொண்ட பிறகு, காகஸஸ் மலையடிவாரத்திலுள்ள கிஸ்லோவாட்ஸ் ஆரோக்கிய நிலையத்திலும், மாஸ்கோ அருகிலுள்ள ஓர் ஆரோக்கிய நிலையத்திலும் மதிப்பிடற்கரிய சிகிச்சைகள் பெற்றார். 3 மாதங்கள் கழித்து 'உயிருக்கு அபாயமில்லை' என்ற அளவுக்கு உடல்நிலை தேறிய பிறகு, சோவியத் நாட்டாரின் அளவிட முடியாத அன்பாதரவுக்கு நன்றி தெரிவித்துவிட்டு, ஜனவரி 20-ம்தேதி மாஸ்கோவை விட்டு விமானமூலம் புறப்பட்டார். ஆஸ்திரிய நாட்டின் தலைநகராகிய வியன்னாமூலமாக இந்தியாவுக்கு வரவேண்டியிருந்ததாலும், வியன்னாவில் தூள் பனி அளவு கடந்து கொட்டிக்கொண்டிருந்ததாலும், ஹங்கேரிய தலைநகர் பூடாபெஸ்டில் இறங்கினார். அங்கிருந்து 160 மைல் தொலைவிலுள்ள வியன்னாவுக்குக் காரில் சென்று, 24-ம் தேதி சுவிட்ஜர்லாந்து நகரின் அழகிய நகரான ஜூரிச் பட்டணம் வந்து, விமானம் மாற்றிக்கொண்டு, 25-ம் தேதி கராச்சிக்கும், 26-ம் தேதி பம்பாய்க்கும் வந்து சேர்ந்தார். 27-ம் தேதி காலை 7-45க்குப் புறப்பட்டு மத்தியானம் 11-45 மணிக்கு சென்னை வந்து சேர்ந்தார்.

### சர்வதேச தொழிலாளரின் சகோதர மரியாதை

தோழர் கல்யாணத்தை தாம்பரம் முதல் பெரம்பூர் வரையுள்ள ரயில்வே தொழிலாளர்களும், என். ஜி. ஓ. (கிளர்க்கு)களும், தத்தம் டிபார்ட்மெண்ட் வாரியாக மாலையிட்டு வாழ்த்தினார்கள். கட்சியின் சார்பில் தோழர்கள் என். கிருஷ்ணசாமியும், கே. டி. ராஜுவும் வரவேற்றனர். தமிழ்நாடு உழைப்பாளி கட்சித் தலைவர் திரு. ராமசாமி படையாச்சி, ஐக்கிய முன்னணி செயலாளர் திரு. எஸ். பி. ஆதித்தன், ஜனசக்தி ஆசிரியர் குழுவினர், லேபர் யூனியன் உபதலைவர் தோழர் பார்த்தசாரதி முதலியவர்கள் வரவேற்றார்கள்.

தோழர் கல்யாணம் பேசுகையில், "என்னுடைய உயிரை உலகத் தொழிலாளி வர்க்கம் காப்பாற்றியது. ஹங்கேரியிலும் மாஸ்கோவிலும் எனக்கு ராஜோபசாரம் செய்தார்கள். நல்ல உணவு, எப்பொழுதும் சிரத்தை, உயர்ந்த மருந்து, ஆனந்த மயமான சூழ்நிலை ஆகியவற்றின் மூலம் என்னைக் குணப்படுத்தினார்கள். ஆயுர்வேத முறைப்படி பவள பஸ்பம் கலந்த நீரிலே விஞ்ஞான முறையில் எனக்கு ஸ்நான சிகிச்சை அளித்தார்கள். இந்தியாவிலிருந்து போகும்போது என்னுடைய எடை 112 பவுண்டுதான்! இப்போது 148 ...ண்டு இருக்கிறேன். 36 ...ண்டு 2½ மாத காலத்தில் அதி... த்திருக்கிறேன்.

சிறிதுநேரம் பேசினாலும் முன்பு

(12-ம் பக்கம் பார்க்க)

வியன்னாவில் நடைபெற்ற உலகத் தொழிற்சங்க காங்கிரசில் கலந்துகொள்ள தோழர்கள் கல்யாணமும், அருணா அசப் அலியும் பிரதிநிதிகள் ஜாகையிலிருந்து செல்கின்றனர்

...ஜனசக்தி

...க்கிழமை 31–1–'54

# ...தந்திரத்தை நோக்கி ...ன்னேறுவோம்

...குடியாசு தினம் கொண்டாடியாகிவிட் ...யாளரின் அபார சாதனைகளைப்பற்றி ...பத்திபத்தியாகத் தீட் டிவிட்டன. இந்திய ...சுகவாழ்க்கையைப்பற்றி ஜனாதிபதி முதல் ...ர்னர்கள், முதலமைச்சர்கள் வரை அனை ...மே போற்றிப் புகழ்ந்துகொண்டார்கள். ...ன்று உபதேச வார்த்தைகளைக் கொப் ...விட்டார்கள்.

...ம நிலைமை என்ன? அரசியல் சுதந்திரம் ...ஏழு மறைந்துவிட்டன. எனினும் மக்க ...நிலைமை மட்டும், எவ்விதத்திலும் அபி ...ல்லை. தொழிலாளர், விவசாயி, நடுத்தர ...றிய தொழிற்சாலை முதலாளிகள் முதலிய ...ளும் நலிந்து நாசமாகி வருகின்றனர். அன் ...பின் காரணமாக இந்தியப் பெருமுதலாளி ...க பாதிக்கப்பட்டுள்ளனர்

...ாற்றத்திற்குப் பின்னர் காங்கிரஸ் ஆட்சியா ...கொண்ட ஒவ்வொரு நடவடிக்கையும், மக்க ...வகளைத்தான் அதிகரித்திருக்கிறது, பிரமாத ...பர தடபுடல்களுடன் ஆரம்பிக்கப்பட்ட ஐந் ...ட்டமும் தோல்வியடைந்துவிட்டது. அரசியல் ...ம பெற்றிருந்தும், மக்களைப் பாதிக்கும் எந்தப்பிரச் ...யையும் தீர்ப்பதற்கு காங்கிரஸ் சர்க்காரால் முடியவில்லை. ...ஆட்சியாளரின் கையாலாகாத்தனம் பொதுமக்களின் முன்னே நன்கு அம்பலமாகிவிட்டது.

தேசம் பூராவிலும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருகி வருகிறது. பல்லாயிரக் கணக்கான தொழிலாளர்கள், விவசாயிகள், கைத்தறி நெசவாளர்கள், மத்தியதர வர்க்கத்தினர் முதலியோர் வேலையின்றி, உண்ண உணவின்றி நாடு நகரெங்கும் அலைந்து திரிந்துகொண்டிருக்கிறார்கள்.

உலகுக்கு உணவளிக்கும் உழவர் பெரு மக்களின் நிலைமை சொல்லத் தரமன்று. தேசத்தின் எல்லா பாகங்களிலும், லட்சோப லட்சக் கணக்கான விவசாய மக்கள், நிலப் பிரபுக்களால் நிலங்களிலிருந்து வெளியேற்றப் படுகின்றனர்.

இந்திய மக்களின் சகல பகுதியினரும் நெருக்கடியில் சிக்கி அவதிப்படுகிறார்கள். பெருவாரியான ஜனங்கள் ஓட்டாண்டிகளாகி வருகின்றனர். இதன் காரணமாக, இன்றுள்ள அளவில்கூட நம் தொழிற்சாலைகளில் தொடர்ந்து உற்பத்தி நடைபெறுவதற்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இத்தகைய மிகக் கொடிய நெருக்கடியில் நம் தேசம் சிக்கித் தவிக்கும்போது, உண்ண உணவும் வேலையும் கிடைக்காமல் கோடிக்கணக்கான நம் மக்கள் திண்டாடித் தெருவில் நிற்கும்போது, நம்முடைய பொருளாதாரத்தின்மீது மேலாதிக்கம் வகிக்கும் பிரிட்டிஷ் ஏகபோகங்களின் கொள்ளைச் சுரண்டல் மட்டும் குறையவில்லை. இதற்குமுன் இரு நூறு ஆண்டுகளாகக் கிடைத்துவந்த லாபத்தைக் காட்டிலும், காங்கிரஸ் ஆட்சியின்கீழ் வெள்ளை முதலாளிகளுக்கு அதிக லாபம் கிடைத்திருக்கிறது.

இந்த பிரிட்டிஷ் பொருளாதாரப் பிடிப்பை நொறுக்கி யெறிந்து, பிரிட்டிஷ் மூலதனத்தைப் பறிமுதல் செய்யவேண்டும்; ஏகாதிபத்தியத்தின் சிருஷ்டியான நிலப் பிரபுத்துவ முறையைப் பூண்டோடு ஒழிக்கவேண்டும்; அப்பொழுதுதான் வறுமையையும், வேலையில்லாத் திண்டாட்டத்தையும் அறவே ஒழித்து தங்களை எதிர்நோக்கியுள்ள சகல பிரச்னைகளையும் வெற்றிகரமாக நம் மக்கள் தீர்க்க முடியும். லட்சக் கணக்கான இந்திய தேச பக்தர்கள் சர்வ சங்கப்பரித் தியாகம் செய்து பெற்ற சுதந்திரத்தை மேலும் பலப்படுத்திப் பூரணமாக்க முடியும்.

பரிபூரண சுதந்திரம் அடைவதற்காக இந்திய மக்கள் போராடிக் கொண்டிருக்கும் இந்த சமயத்தில், நம் நாட்டின் சுதந்திரத்திற்கும் அரசுரிமைக்கும் புதிய பேராபத்து உருவாகி யிருக்கிறது. அமெரிக்கா–பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தத்தின் காரணமாக, நம் நாட்டின் எல்லைகளுக்கே கெடுபிடி யுத்தம் பரவிவிட்டது. பாகிஸ்தானுக்கு ராணுவ உதவி யளிப்பதன்மூலம், இந்திய சர்க்காரை பயமுறுத்தி, தன்னுடைய யுத்த திட்டங்களுடன் ஒத்துழைக்கும்படி வற்புறுத்த அமெரிக்க ஏகாதிபத்தியம் விரும்புகிறது. ஆனால் ஏகாதிபத்தியவாதிகளின் திட்டம் ஒருக்காலும் வெற்றியடையப் போவதில்லை. இந்த அமெரிக்கப் பேராபத்தை எதிர்த்து நம் மக்களின் சகல பகுதியினரும் கண்டனப் பெருங்குரல் எழுப்பியுள்ளார்கள். இந்த ஆபத்தை எதிர்த்து முறியடிக்க சகல கட்சிகளுடனும், சகல ஜனநாயக சக்திகளுடனும் கம்யூனிஸ்ட் கட்சி ஒன்றுபட்டு போராடும்.

தொழிலாளர்கள், விவசாயிகள், மத்தியதர வர்க்கத்தினர், தொழில் அதிபர்கள் முதலிய சகலபகுதி மக்களும் நடத்திவரும் போராட்டங்களுக்குத் தலைமை தாங்கி, சகல ஜனநாயகக் கட்சிகளையும், வர்க்கங்களையும் கொண்ட மிக விரிவான ஐக்கிய முன்னணியைக் கட்டியமைக்க கம்யூனிஸ்ட் கட்சி இடைவிடாது பாடுபடுகிறது. இதன்மூலம் தான், காங்கிரஸ் கட்சியை அதிகார பீடத்திலிருந்து அகற்ற முடியும்! ஐக்கிய ஜனநாயக சர்க்கார் ஆட்சிப் பொறுப்பை ஏற்பதும் சாத்தியமாகும்.

ஐக்கிய ஜனநாயக சர்க்கார் ஏற்பட்டால், அல்லலுற்று அவதிப்படும் மக்களின் துன்ப துயரங்களைப் போக்க அத்தகைய சர்க்காரால்தான் உடனடியாக சகல நடவடிக்கைகளையும் எடுக்கமுடியும். நம் பொருளாதாரத்தில் ஆதிக்கம் செலுத்தி வரும் ஏகாதிபத்தியவாதிகளுக்கு எதிராக உறுதியான நடவடிக்கையும் எடுக்கமுடியும். நம் சுதந்திரத்திற்கும், அரசுரிமைக்கும் ஏற்பட்டிருக்கும் புதிய ஏகாதிபத்திய ஆபத்தை எ...த்து உறுதியாகப் போராடுவதும் சாத்தியமாகும். சமா...ன, ஜனநாயக, சுபீட்சவாழ்க்கையை நோக்கி இந்திய மக்கள் வெற்றி முரசு கொட்டி முன்னேறுவதற்கு வேண்டிய பக்குவமான சூழ்நிலைமையை சிருஷ்டிக்கவும் முடியும்.

# நிதி வசூல் துரிதமாகட்டும்!

## காங்கிரஸ் தோற்கட்டும்! மக்கள் ஜெயிக்கட்டும்!

திரு-கொச்சியில் எல்லா இடங்களிலும் தேர்தல் வேலைகள் மும்முரமாக நடக்கின்றன. காங்கிரஸ் அபேட்சகர்களை ஆதரித்து ராஜகோபாலாச்சாரியார், மத்திய சட்ட சபை உதவி சபாநாயகர் அனந்தசயனம் ஐயங்கார், பம்பாய் முதலமைச்சர் மொரார்ஜிதேசாய் ஆகியோர் பேசி சென்றிருக்கிறார்கள். இந்திய பிரதமர் நேருவும் காங்கிரஸ் பிரச்சாரத்துக்காக வரப் போகிறார். ஐக்கிய முன்னணி அபேட்சகர்களை ஆதரித்து கம்யூனிஸ்ட் தலைவர் ரேணுகாசக்கரவர்த்தி, அருணா ஆசப்அலி, ஜோதிபாசு பல பொதுக்கூட்டங்களிலும் பேசிவருகிறார்கள். பி. எஸ். பி. அபேட்சகர்களை ஆதரித்து கிருபாளனி பேசிவருகிறார். அனேகமாக எல்லா இடங்களிலும் இருமுனைப் போட்டியே காணப்படுகிறது. ஒன்று காங்கிரஸ், மற்றது காங்கிரஸ் அல்லாத கட்சி தமிழர்கள் பெருவாரியாக வாழும் தென் திருவிதாங்கூரில் மட்டும் நிலைமை வேறு. இங்கு அநேகமாக எல்லா இடங்களிலும் மும்முனைப் போட்டியிருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சி எவ்வளவோ முயன்றும் திருவிதாங்கூர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர்கள் எவ்வித உடன்பாட்டுக்கும் வராததே இந்நிலைமைக்கு காரணம். தி. த. நா. காங்கிரஸின் இரண்டு அபேட்சைப் பத்திரங்கள் நிராகரிக்கப் பட்டதால் அது தென் திருவிதாங்கூரில் 15 ஸ்தானங்களிலும் கொச்சியில் சித்தூர் தொகுதியில் ஒரு ஸ்தானத்திலும் போட்டியிடுகிறது. ஐக்கிய முன்னணி 8 ஸ்தானங்களுக்கு போட்டியிடுகிறது. அதில் கம்யூனிஸ்ட் கட்சி 4 ஸ்தானங்களிலும், கேரளா சோஷலிஸ்ட் கட்சி ஒரு ஸ்தானத்திலும், முற்போக்கு சுயேச்சைகள் 2 ஸ்தானங்களிலும் போட்டியிடுகின்றனர். ஐ. மு. ஆதரவுடன் பிரஜா சோஷலிஸ்டுகள் 6 தொகுதிகளில் போட்டியிடுகிறார்கள். இந்த 14 தொகுதிகள் நீங்கலாக இதர தொகுதிகளில் தி. ட. நா. காங்கிரஸை கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது.

திரு-தமிழகத்தில் ஐக்கிய முன்னணி தேர்தல் வேலைகளை கவனிக்க கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ்நாடு மாகாண கமிட்டி நாகர்கோவிலில் ஒரு காரியாலயத்தை திறந்துள்ளது. நாகர்கோவில் தொகுதியில் போட்டியிடும் ஐ. மு. அபேட்சகரை ஆதரித்து தேர்தல் பிரச்சார துவக்கவிழாவை தோழர் ஜீவா ஆரம்பித்து வைத்தார். பத்மனாபபுரம், விளவங்கோடு தொகுதிகளில் போட்டியிடும் ஐ. மு. அபேட்சகர்களை ஆதரித்து எல்லா இடங்களிலும் ஐ. மு. தேர்தல் கமிட்டிகள் நிறுவப்பட்டுள்ளன.

திரு-கொச்சி முழுவதும் 117 ஸ்தானங்கள். அதில் 98 ஸ்தானங்களுக்கு ஐ. மு. போட்டியிடுகிறது.

### இந்தியா எதிர்பார்க்கிறது

பிரிட்டிஷ் தோட்ட முதலாளிகள், நிலப்பிரபுக்கள், பிற்போக்குப் பிண்டங்கள் ஆகியவற்றின் ஆதரவு பெற்ற காங்கிரசை முறியடிக்க வேண்டுமென்று திரு-கொச்சி மக்கள் மட்டுமல்ல, இந்தியா முழுவதுமே கச்சை வரிந்து கட்டிக் கொண்டிருக்கிறது.

தோழர் ஏ.கே. கோபாலன் பல மாகாணங்களிலும் சுற்றுப் பிரயாணம் செய்து தேர்தல் நிதிக்கு கை யேந்தியபோது, ஏழை மக்களும், நடுத்தர வர்க்கத்தாரும் ஆவலோடு நிதி தந்தார்கள்; தருகிறார்கள். சென்னைத் தோழர்கள் தேர்தல் கமிட்டி அமைத்து 216 ரூபாய் தந்தார்கள். ஜனவரி கடைசியில் கோவையிலும், நீலகிரியிலும் பண முடிப்பு கொடுக்க மாலையும் கையுமாக தமிழர்களும் கேரள மக்களும் தயாராயிருக்கிறார்கள்.

தோழர் ஜீவாவிடம் விருதுநகர் மக்கள் 200 ரூபாய் கொடுத்தார்கள். இன்னும் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள் என்று ஜீவா நமக்கு கடிதம் போட்டிருக்கிறார்.

காரைக்குடியிலே தோழர் டி. ஆர்.எஸ்.டி. கண்ணப்பர் ஜீவாவிடம் ஒரு மைக் கொடுத்தார். காரை கலாமன்றத்தைச் சேர்ந்த தோழர் கனகசபாபதி ஒரு மைக் தந்ததோடு, அதை இயக்க அவரே ஜீவாவுடன் திரு-கொச்சிக்கு சென்றுவிட்டார். அமராவதி புதூர் ஸ்ரீ நாச்சியப்பன் என்ற ஒரு காங்கிரஸ் விவசாயி, 'கம்யூனிஸ்டு கட்சிதான் விவசாயிகளுக்குப் பாடுபடுகிறது' என்று வாழ்த்துக்கூறி 15 ரூபாய் தந்தார் வெற்றியூர் கதிரேசன் செட்டியார் 25 ரூபாயும், நடராஜபுரத்திலிருந்து ஒரு அன்பர் 30 ரூபாயும், காரைக்குடி சுப்பையா அம்பலம் 25 ரூபாயும், பாகனேரியில் ஒரு அன்பர் 25 ரூபாயும், கோட்டையூர் அன்பர் 35 ரூபாயும், திருப்பத்தூர் அன்பர் 20 ரூபாயும், ஸ்ரீவைகுண்டம் தோழர் முத்தையா 20 ரூபாயும் தந்தனர்!

காரைக்குடியிலிருந்து மொத்தம் 2 மைக்குகளும், ஒரு காரும் தேர்தல் வேலைகளுக்குக் கிடைத்திருக்கிறது. சாத்தூர் கலைஞர் பிச்சைக்குட்டி குழுவினரும் வில்லேந்தி புறப்பட்டுவிட்டதாகத் தெரிகிறது.

சாத்தூர் தோழர்கள், நெல்லை பீடி தொழிலாளர்கள், நிதிகொடுப்பதாக வாக்களித்திருக்கிறார்கள். எல்லா ஜில்லாக்களிலும் உண்டியல் வசூல், நன்கொடைகள் வசூலிக்கப்படுகின்றன. தேர்தல் கமிட்டிகள் ஏற்படுத்தியிருக்கிறதாக செய்திகள் வருகின்றன.

தமிழ் மக்களே! காங்கிரஸ்காரர்களுக்கு அமெரிக்கப் பணமும் வெள்ளை முதலாளிகள் ஆதரவும், பண மூட்டைகளின் ஆதரவும் இருக்கிறது அடக்குமுறை ஆயுதமும் அவர்களிடமிருக்கிறது.

இதை எதிர்த்து நமது தரப்பில் உழைப்பாளிகளின் தலைவர்கள் நிற்கிறார்கள். நாம் ஜெயிக்கவேண்டும்.

சம்பளம் வாங்கின உடனே தொழிலாளர்கள் நிதி தந்துவிட வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் பணத்தால் பயனில்லை. தேர்தல் பிப்ரவரி 15-ல் தொடங்குகிறது. தோழர்களே! கச்சை கட்டுங்கள்!

## காட்டெருமைச் சவாரி




# திரு-தமிழக தேர்தலிலே

## நமது அபேட்சகர்கள்

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாகாணக் கமிட்டி தனது அபேட்சகர்களாக திரு-கொச்சி, தமிழகத்தில் 3 பேரை நிறுத்தியுள்ளது. சி. சங்கர் நாகர்கோவில் நகரத் தொகுதியிலும், எம். எம். அலி பத்மனாபுரம் தொகுதியிலும் ஜி. எஸ். மணி விளவங்கோடு தொகுதியிலும் ஐக்கிய முன்னணி (கம்யூனிஸ்ட்) அபேட்சகர்களாகப் போட்டி போடுகிறார்கள்.

### சங்கர்

சி. சங்கர்: இவர் காங்கிரஸ் சர்வாதிகார வெறியால், ஜனநாயக விரோதமாகக் கலைக்கப்பட்ட சென்ற சட்ட சபையில் நாகர்கோவில் தொகுதியின் பிரதிநிதியாக விளங்கியவர். ஐக்ய முன்னணி சட்டசபை அங்கத்தினராக இருந்தவர்.

சங்கருக்கு ஓர் சிறந்த தேசீய பாரம்பரை உண்டு. காங்கிரஸ்காரராகப் போராடி, ஸி. பி. ராமசாமி அய்யரின் கொடிய அடக்குமுறைக்கு இரையாகி, திருவனந்தபுரம் பூஜைப்புரை சிறைச் சாலையை தவச்சாலையாக அணி செய்தவர். சோஷலிஸ்ட் கட்சியிலிருந்து அருந்தொண்டாற்றியவர். அவருடைய அரசியல் நேர்மையும், கொள்கைப் பிடிப்பும், மக்கள் ஊழிய ஆர்வமும் கம்யூனிஸ்ட் கட்சியைத் தழுவும்படி செய்தன.

இன்று இவர் நாகர்கோவில் நகர சகல பகுதி நன் மக்களின் மதிப்புக்குரிய ஐக்ய முன்னணி வீரர். தீவிர தொழிற்சங்கவாதி, கட்சி பேதம் பாராட்டாது நாகர்கோவில் இளைஞர்களால் நேசிக்கப் படும் தோழர்.

நெடுகலும் ஐக்ய தமிழகத்திற்காக போராடி வந்திருப்பவர்.

### எம். எம். அலி

எம். எம். அலி: இவர் தொழிலாளித் தோழர். தேசியப் போராட்டத்திலும், தொழிலாளர் போராட்டங்களிலும் மக்கள் நல்வாழ்வுப் போராட்டங்களிலும் புடம் போட்டெடுக்கப்பட்ட வீரர். ஐக்ய முன்னணி தோழர். நீண்ட நாட்களாக கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழியர். நல்ல எழுத்தாளர்; பேச்சாளர்.

இன்றைய தக்கலை நகர சபையின் உறுப்பினர்.

### ஜி. எஸ். மணி

ஜி. எஸ். மணி: திரு-தமிழகம் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர். திருவிதாங்கூர் தமிழகத்திலுள்ள கம்யூனிஸ்ட் கட்சியின் ஸ்தாபகர்களுள் ஒருவர்.

திருவிதாங்கூரின் சிறந்த தேசிய பாரம்பரையில் புடம் போட்டெடுக்கப்பட்டவர். ஸி. பி. ராமசாமி அய்யரின் அடக்குமுறைப் பேயை 'பூ பூ' வென்ற தேசபக்த காங்கிரஸ் பரம்பரையைச் சேர்ந்தவர்.

1944ல் திருவிதாங்கூர் தமிழர்களைத் தட்டியெழுப்பிய அகில திருவிதாங்கூர் தமிழர் மகாநாட்டில் ஜீவாவோடு அரும்பெரும் பணியாற்றிய ஒரு சிலரில் மணியும் ஒருவர்.

திரு–தமிழக மக்களின் வாழ்வுப் போராட்டத்திலும் சரி, தேசீயப் போராட்டத்திலும் சரி இடையறாது பங்கெடுத்து, பற்பல தியாகத் தழும்புகள்பெற்ற மக்களின் புதல்வர்-மக்களின் தலைவர்.

விளவங்கோடு-கல்குளம் தாலுகாக்களில் 'ஐக்ய தமிழக' கோஷம் ஸ்தாபன ரீதியாக மக்களிடையில் பரவுவதற்கு நேர் தலைமை வகித்தவர்–வகிக்கிறவர்.

மேற்படி மூன்று தொகுதிகளிலும், சங்கர், அலி, மணி ஆகிய மூவர்களை விட, தேசீய காங்கிரஸ் அபேட்சகர்களோ, தமிழ்நாடு காங்கிரஸ் அபேட்சகர்களோ, சுயேச்சை அபேட்சகர்களோ மக்கள் பிரதிநிதிகளாகப் பொறுக்கி எடுக்கத் தக்க சிறந்த அபேட்சகர்களில்லை என்பதை திரு–தமிழக மக்கள் நன்கறிவர். ஓட்டுச் சாவடியிலும் தீர்ப்புக் கூறுவர் என்பதில் நமக்குச் சந்தேகமில்லை.

**திரு-கொச்சி தேர்தலில்**

# கிருஸ்துவ பாதிரிகள் தலையீடு

## காங்கிரசுக்கு ஓட்டளிக்காவிடில்

### மதப்பிரஷ்டம் செய்வதாக பயமுறுத்தல்

### பிரதமர் நேருவுக்கு ஏ. கே. கோபாலன் பகிரங்கக் கடிதம்

"காங்கிரசுக்குப் போடாத ஓட்டுகளெல்லாம், சாத்தானுக்குப் போட்ட ஓட்டுகளாகும். எதிர்க் கட்சிகளுக்கு ஓட்டுப் போட்டால் இகலோகத்தில் தெய்வ சாபத்திற்கும், பரலோகத்தில் நரகப் படுகுழிக்கும்தான் ஆளாவீர்கள்" என்று கிருஸ்துவப் பாதிரிகள் திருவாங்கூர்-கொச்சி ராஜ்யத்தில் தீவிரமாகப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். அடுத்த மாதம் நடைபெறப் போகும் பொதுத்தேர்தலில் காங்கிரசுக்கு ஓட்டளிக்காத கிருஸ்துவர்களை மதப் பிரஷ்டம் செய்வதாக அவர்கள் பயமுறுத்துகின்றனர்.

கிருஸ்துவப் பாதிரிகள் இவ்விதம் பகிரங்கமாக அரசியலில் பங்கெடுத்துக் கொள்வதைக் கண்டித்தும், இத்தகைய பிரச்சாரத்திற்கு உடனடியாக முற்றுப் புள்ளிவைக்க வேண்டுமெனக் கோரியும் பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு பார்லிமென்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும், உபதலைவருமான தோழர்கள் ஏ. கே. கோபலன், ஹிரேன்முக்கர்ஜி ஜனவரி 18ம் தேதியன்று ஒரு பகிரங்கக் கடிதம் எழுதியுள்ளார்கள்.

கடிதத்தின் வாசகம் வருமாறு:

அன்புமிக்க பிரதம மந்திரி அவர்களே,

வரப்போகும் தேர்தல் சம்பந்தமாக திரு-கொச்சியில் பலமுக்கியமான சம்பவங்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இந்த சம்பவங்களின் அபாயத் தன்மையை தங்களுக்கும், பொதுமக்களுக்கும் அறிவிப்பதற்காகவே, நாங்கள் இந்த பகிரங்கக் கடிதத்தை எழுதியுள்ளோம்.

#### "காங்கிரசுக்கு ஓட்டுப்போடு—இல்லையேல் நரகம்தான் கிடைக்கும்!"

திரு[illegible]வாங்கூர் – கொச்சியிலுள்ள அனேகமாக எல்லா சர்ச்சுகளும் இன்று காங்கிரஸ் [illegible]ட்சியின் தேர்தல் ஆபீஸ்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. தேர்தலில் மக்கள் அளிக்கப்போகும் தீர்ப்பைக்கண்டு குலைநடுக்கம் கொண்ட உங்கள் கட்சி, பிற்போக்கு மதவாதிகளைக் கட்டித் தழுவிக் கொண்டிருக்கிறது. கிருஸ்துவ வாக்காளர்களை மாதா கோவிலுக்கு அழைத்து, காங்கிரசுக்குத்தான் ஓட்டளிப்போமென கடவுள் சன்னிதானத்தில் சத்தியம் செய்யும்படி, கிருஸ்துவப் பாதிரிகள் வற்புறுத்துவதாக ராஜ்யத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் செய்திகள் வந்து குவிந்த வண்ணமிருக்கின்றன.

அரசியலில் கலக்காமல் ஒதுங்கியிருக்கவேண்டிய பாதிரிகள்தான் இன்று ஆளும் கட்சியின் பிரதான தேர்தல் ஏஜண்டுகளாக விளங்குகிறார்கள். காங்கிரசுக்கு எதிராக ஓட்டுப்போடும், மக்களுக்கு இகலோகத்திலும், பரலோகத்திலும் தெய்வ சாபம் கிடைக்குமென்றும் இறுதியில் நரகப் படுகுழியில் கிடந்து உழல வேண்டி நேரிடுமென்றும் கிருஸ்துவப் பாதிரிகள் ஊர் ஊராகப் பிரச்சாரம் செய்கிறார்கள். காங்கிரசுக்குப் போடாத ஓட்டுகளெல்லாம், சாத்தானுக்குப் போட்ட ஓட்டுகளாகும் என்று கூரை உச்சிகளிலிருந்து கூவுகிறார்கள். பெருவாரியான கிருஸ்துவர்கள், அதுவும் குறிப்பாக ரோமன் கதோலிக் கிருஸ்துவர்கள் வசிக்கும் ஒரு ராஜ்யத்தில், பாதிரிகளின் இத்தகைய தேர்தல் பிரச்சாரத்திற்கு எவ்வளவு சக்தியிருக்குமென்பதை நீங்களே நன்கு ஊகித்துக்கொள்ளலாம்.

#### பாதிரிகள் ஆட்சியாளரின் தேர்தல் ஏஜெண்டுகள்

ஆனால் இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் தங்களுக்குத் திடுக்கிடும் சம்பவங்களாக இராதென்றே நாங்கள் நம்புகிறோம். [illegible] அரசியல் ஆதிக்கத்தை வலுப்படுத்திக்கொள்வதற்காக உங்கள் கட்சி திரு-கொச்சி ராஜ்யத்தில் அடிக்கடி சர்ச்சுகளின் ஆதரவை நாடியே வந்திருக்கிறது. அரசியல் ஆசைகளைப் பூர்த்திசெய்துகொள்வதற்காக, மத்தியகாலப் பிற்போக்கை ஒத்த மதவாதிகளுடன் உங்கள் கட்சி இணைந்து பிணைந்தேவந்துள்ளது.

திரு-கொச்சி ராஜ்யத்தில் சில



மாதங்களுக்குமுன் பஞ்சாயத்துத் தேர்தல்கள் நடைபெற்றன. காங்கிரஸ் அபேட்சகர்களுக்கு பஞ்சாயத் தேர்தலில் ஓட்டளிக்காத கிருஸ்துவர்கள் அனைவரையும் மதப்பிரஷ்டம்செய்யப்போவதாக பயமுறுத்தி கிருஸ்துவப் பாதிரிகள் வெளியிட்ட துண்டுப் பிரசுரத்தை உங்களுக்கு ஏ. கே. கோபாலன் அனுப்பியிருந்ததையும் நீங்கள் படித்திருப்பீர்கள். ஆனால், கோபாலன் அனுப்பிய கடிதத்திற்கும், அந்தத் துண்டுப்பிரசுரத்திற்கும் தாங்கள் எத்தகைய பதிலும் அனுப்பாதது குறிப்பிடத்தக்கது.

#### பதில் ஏன் இல்லை?

இன்னொரு விஷயத்தையும் தங்களுக்கு ஞாபகப்படுத்த விரும்புகிறோம். பார்லிமென்ட் மக்கள் சபைக்கு சமீபத்தில் மீஞ்சில் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர் கட்டுகாபல்லி வெற்றியடைந்ததை நீங்கள் அறிவீர்கள். ஆனால், இத்தேர்தலில் எப்படி கிருஸ்துவப் பாதிரிகள் தீவிரமாகப் பிரச்சாரத்தில் இறங்கினார்கள் என்றும், காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதவர்களை மதப்பிரஷ்டம் செய்வதாக பயமுறுத்தினார்கள் என்றும் தக்க ஆதாரங்களுடன் எடுத்துக்காட்டி பல பொதுஜனத் தலைவர்கள் கையெழுத்திட்டு தங்களுக்கு ஒரு மகஜர் அனுப்பினார்கள். அது தங்களுக்குக் கிடைத்திருந்தும், அதைப்பற்றி தாங்கள் எத்தகைய நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதிலும் அனுப்பவில்லை.

#### ராஜாஜி பிரச்சாரம்

காங்கிரஸ் தேர்தல் பிர[illegible]திற்காக சென்னை முதல[illegible] ராஜகோபாலாச்சாரியார் [illegible]தில் திரு-கொச்சியில் சுற்றுப்[illegible]யாணம் செய்தார். அவருடை[illegible] கூட்டங்களில் கும்பல் சேர்ப்பத[illegible]காக எல்லா பள்ளிக்கூடங்களுக்கும், கல்லூரிகளுக்கும் விடுமுறை அளிக்கப்பட்டன. தொழிலாள[illegible]களுக்கும் சம்பளத்துடன் ஒரு நாள் விடுமுறை அளிக்கப்பட்டது. இந்த முறைகளால்தான் காங்கிரஸ் கூட்டங்களுக்கு ஆட்களைச் சேர்க்கவேண்டியிருக்கிறது! கடவுள் பேரைச்சொல்லி ராஜாஜி காங்கிரசுக்கு ஓட்டு கேட்டார். "காங்கிரசுக்கே ஓட்டுப்போடுங்கள். சாத்தானுக்கு ஓட்டுப்போடாதீர்கள்" என்று கிருஸ்துவப் பாதிரிகள் கோஷித்ததையே ராஜாஜியும் எதிரொலித்தார். "காங்கிரசுக்குப் போடும் ஓட்டு ஒவ்வொன்றும் கடவுளுக்குப் போடும் ஓட்டாகும்" என்று அவர் பஜனை செய்தார்.

"தெய்வம் சபித்து விடும்" என்று மக்களை ஏமாற்றி பயமுறுத்தியாகிலும் திரு-கொச்சி தேர்தலில் ஜெயித்துவிட வேண்டு

(10-ம் பக்கம் பார்க்க)

# காங்கிரசை முறியடிப்போம்!

## திரு-கொச்சி மக்களின் உற்சாகப் பெருக்கு

### ரேணு சக்கிரவர்த்தியின் தேர்தல் பிரச்சாரம்

"இந்த ராஜ்யத்திலுள்ள காங்கிரஸ் தலைவர்களும், மந்திரிகளும் மிக நெருங்கிய ஏகாதிபத்திய தாசர்களாக விளங்குகிறார்கள். காஷ்மீர் சம்பவத்தையும், அமெரிக்க-பாகிஸ்தான் ராணுவ ஒப்பந்தத்தையும் மனதிற்கொண்டு நாம் நோக்கினால், இத்தகைய பேர்வழிகள் ஆட்சிப் பொறுப்பில் இருப்பதே நம்முடைய தேசிய நலன்களுக்கும், நாட்டின் சுதந்திரத் [illegible] தீங்கு விளைவிப்பதாகும்" என்று திருவாங்கூர் [illegible] தேர்தல் பிரச்சாரம் செய்துவிட்டு வங்காளத்திற்குச் செல்வதற்கு முன் தோழர் ரேணு சக்கிரவர்த்தி கூறினார்கள்.

திரு-கொச்சி ராஜ்யத்தில் பத்து தினங்கள் தோழர் ரேணு சுற்றுப் பிரயாணம் செய்தார்கள். பிரம்மாண்டமான 14 பொதுக்கூட்டங்களிலும், அநேக ஏரியா கூட்டங்களிலும், மூன்று மாணவர் கூட்டங்களிலும் சொற்பொழிவாற்றினார்கள். மொத்தம் சுமார் மூன்று லட்சம் மக்கள் தோழர் ரேணுவின் கூட்டங்களுக்கு வந்திருந்தார்கள்.

#### மக்களின் உற்சாகம்

ரேணுவின் சுற்றுப்பிரயாணம் வடக்கே திருச்சூரிலிருந்து ஆரம்பமாயிற்று. அப்பொழுதுதான் அபேட்சா பத்திரங்கள் தாக்கல் செய்வது முடிந்திருந்தது. எல்லா இடங்களிலும் ஐக்கிய தேர்தல் கமிட்டிகள் அமைக்கப்பட்டு வந்தன. தோழர் ரேணு சுற்றுப் பிரயாணம் செய்த பத்து தினங்களுக்குள்ளேயே வெகுஜன உற்சாகம் பெருவெள்ளமாகக் கரைபுரண்டோடத் தொடங்கிவிட்டது.

"மக்களின் உற்சாகப் பெருக்கு இன்னும் மிக அதிகமாக வளர்ந்தே தீரும். பிரம்மாண்டமான வெகுஜன ஒற்றுமைஇயக்கமாக இது மலரும். கடல்மடை திறந்தாற்போல, கொந்தளித்துப் பொங்கிவரும் ஜனவெள்ளம் பிற்போக்குக் காங்கிரஸ் சக்திகளை வேரோடு பெயர்த்தெறிவது நிச்சயம்" என்று தோழர் ரேணு கூறினார்கள்.

பொருளாதார நெருக்கடியின் சொரூபத்தைக் கண்டு அவர்கள் திடுக்கிட்டார்கள். கயிறு தொழிலையே ஜீவனோபாயமாகக் கொண்டிருக்கும் 11 லட்சம் மக்கள் இன்று பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். கணக்கற்ற சின்னஞ்சிறு தொழிற்சாலைகள் மூடப்பட்டுவருகின்றன. மொத்த ஜனத்தொகையில் மூன்றில் ஒரு பங்கு மக்கள் வேலையில்லாது திண்டாடுகிறார்கள் அல்லது அரைவேலை குறைவேலை செய்து வயிற்றைக் கழுவுகிறார்கள்.

#### பொருளாதார நெருக்கடி

விவசாய வர்த்தகப் பொருள்களின் விலையும் [illegible] குறைந்துவிட்டது. இதன் விளைவாக விவசாய மக்களும் வெகுவாக பாதிக்கப்பட்டிருக்கின்றனர். நெருக்கடியில் சிக்கி, வறுமையில் உழன்று திரு-கொச்சி மக்கள் சித்திரவதை அனுபவித்துக்கொண்டிருக்கும்போது, பிரிட்டிஷ் ஏகபோகங்களும், கம்பெனிகளும் கொள்ளைச் சுரண்டலில் ஈடுபட்டிருக்கின்றன. ஆனால் மக்களின் துன்ப துயரங்களைத் துடைப்பதற்காகக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் தங்கள் சுண்டுவிரலைக்கூட அசைக்கவில்லை. அதற்குமாறாக மக்கள்மீது இன்னும் அதிக வரிச்சுமைகளை ஆட்சியாளர்கள் சுமத்தினார்கள். இதன் விளைவாக, காங்கிரசுக்கு எதிராக மக்களின் பல்வேறு பகுதிகளும் உறுதியாக ஒன்றுபட்டு வருகிறார்கள். மட்டாஞ்சேரி, ஆலப்புழை, கொல்லம், பரவூர் முதலிய இடங்களில் நடைபெற்ற பொதுக்கூட்டங்கள், மக்களிடையே வளர்ந்து வரும் இந்த ஒற்றுமைக்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாக விளங்கின.

கோட்டயத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டமும், ஆர்ப்பாட்ட ஊர்வலமும் மிகவும் குறிப்பிடத்தக்கவை. கூட்டத்திற்கு ஒரு லட்சம்பேர்கள் வந்திருந்ததாக காங்கிரஸ் பத்திரிகைகளே ஒப்புக்கொள்ளவேண்டி நேரிட்டது. கோட்டயம் சரித்திரத்திலேயே இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்ட ஊர்வலம் இதற்குமுன் நடைபெற்றதில்லை. பிற்போக்குக் கத்தோலிக்க கும்பலின் தலைமைப் பீடமாக விளங்கும் கோட்டயத்தில் பெரும் பெரும் பணக்காரர்கள், வியாபாரிகள், தொழிலதிபர்களும் வசிக்கிறார்கள்.



#### உள்ளத்தைத் தொடும் சம்பவங்கள்

பொதுக்கூட்டத்தில் தோழர் ரேணு நிகழ்த்திய பிரசங்கத்தைத் தாக்கி எந்த வியாபாரியும், தேசிய முதலாளியும் ஒன்றுங்கூற முடியவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் அடிப்படையான வேலைத்திட்டத்தைத் தாக்கி அவர்களால் வாயைத் திறக்கவே முடியவில்லை. இங்கு மட்டுமல்ல; தான் சொற்பொழிவாற்றிய சகல இடங்களிலும் கட்சியின் அடிப்படையான திட்டத்தைத் தாக்கி எந்த தேசிய முதலாளியும், வியாபாரியும் ஒன்றும் பேசமுடியவில்லை என்பது தான் தோழர் ரேணுவின் அனுபவம். இதர கட்சிகளுடன் சேர்ந்து கம்யூனிஸ்டுகள் அதிகாரத்திற்கு வந்துவிட்டால் மதசுதந்திரமும், ஜனநாயக உரிமைகளும் பறிபோய்விடும் என்றுதான் இவர்கள் பயப்படுகிறார்களாம்! இதைப் பற்றி அவதூறுகளும், பொய்யும் புனைசுருட்டும் கிளப்பி விடப்படுகின்றன.

திருச்சூரில் கூட்டம் முடிந்த பின்னர் தோழர் ரேணு மோட்டார் வண்டியில் அமர்ந்துவிட்டார்கள். அப்பொழுது உள்ளத்தை உருக்கும் சம்பவம் ஒன்று நிகழ்ந்தது. வயது முதிர்ந்த தொண்டு கிழவர். மோட்டாரை நோக்கி ஓடோடியும் வந்தார். "அம்மா அம்மா நீங்கள் அவசியம் மீண்டும் வரவேண்டும். நாங்கள் சபதம் எடுத்துவிட்டோம். காங்கிரசை முறியடிக்கப் போகிறோம். மக்கள் சர்க்கார் ஏற்படப் போகிறது. அப்பொழுது நீங்கள் அவசியம் வரவேண்டும்," என்று வணங்கியவாறே வேண்டினார். சுருக்கல் விழுந்த அவருடைய முகத்தில் உறுதியும், திட வைராக்கியமும் பிரதிபலித்தன.

நெஞ்சையள்ளும் மற்றொரு நிகழ்ச்சி. கோட்டயத்தில் சொற்பொழிவாற்றிய பின்னர், படகு மூலமாக ரேணு ஆலப்புழைக்கு சென்றுகொண்டிருந்தார்கள். படகில் பெரிய செங்கொடி பறப்பதைக் கண்டு, உப்பங் கழியின் இரு பக்கங்களிலும் கூட்டம் கூட்டமாக மக்கள் ஒன்று திரள ஆரம்பித்துவிட்டார்கள். 'ஐக்கிய முன்னணி வாழ்க", "கம்யூனிஸ்ட் கட்சி வாழ்க" என்ற கோஷங்கள் எழுந்தன. முஷ்டி உயர்த்தி வணக்கம் செலுத்தியவாறு ஏராளமான சிறுவர் சிறுமிகளும் கோஷங்கள [illegible]த்ததைக் கண்டு, தோழர் ரேணு பரவச[illegible]க்தார்கள்.

#### காங்கிரசை முறியடிப்பது உறுதி

ஆட்சிப் பொறுப்பிலிருந்து காங்கிரஸ் கட்சியை அப்புறப்படுத்த வேண்டிய அவசியத்தை தோழர் ரேணு சக்கிரவர்த்தி தான் சொற்பொழிவாற்றிய ஒவ்வொரு கூட்டத்திலும் வற்புறுத்தினார்கள். "ராஜ்யத்திலுள்ள காங்கிரஸ் தலைவர்களும், மந்திரிகளும் ஏகாதிபத்திய வாதிகளுடன் மிக நெருங்கிய தொடர்புகொண்டு அதன் தாசர்களாக விளங்குகிறார்கள். திரு-கொச்சியில் பிரிட்டிஷ் மூலதனம் பெரிய அளவில் இருக்கிறது. அமெரிக்க மூலதனமும் இங்கே நுழைந்து கொண்டிருக்கிறது. ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்கள் குறிப்பாக அமெரிக்க மூலதனத்திற்கு சலுகை யளித்துக்கொண்டிருக்கிறார்கள்" என்று தோழர் ரேணு எச்சரித்தார்கள்.

"ஆனால் காங்கிரஸ் மீண்டும் ஆட்சி பீடத்தில் அமர முடியாது என்றே நான் திடமாக நம்புகிறேன். ஏனெனில் ஐக்கிய முன்னணிதான் தேர்தலில் வெற்றி பெற்று சர்க்காரை அமைக்கப் போகிறது என்று பெருவாரியான பொது மக்கள் [illegible]யாக நம்புகிறார்கள்" என்[illegible] [illegible]தாழர் ரேணு சக்கிரவர்த்தி தன் சுற்றுப் பிரயாணத்தின் இறுதியில் அறிவித்தார்கள்.

...ரிக்கப் போர் வெறியர்களின்

# மிரட்டலுக்குப் பணிந்தது!

## ...காரியக் கைதிகள் பிரச்சினையில்

## ...ந்தியாவின் விபரீத நடவடிக்கை

### அஜாய் கோஷ் கண்டனம்

"கொரியா யுத்தக் கைதிகள் பிரச்னையைத் தீர்ப்பதற்காக இதுவரை தான் கடைப்பிடித்து வந்த வழிமுறைகளையே இந்திய சர்க்கார் காற்றில் விட்டு விட்டு, அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் பயமுறுத்தல், நிர்ப்பந்தத்திற்கு இரையாகி, அதற்குப் பணிந்திருக்கிறது. இதன் விளைவாக கொரியாவிலும், ஆசியாவின் இதர பகுதிகளிலும் சமாதானத்திற்கு பங்கம் நேரிட்டால், இதற்கான பொறுப்புகளிலிருந்து இந்திய சர்க்கார் தப்பித்துக்கொள்ள முடியாது" என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி தோழர் அஜாய் குமார் கோஷ் எச்சரித்துள்ளார்.

கொரிய யுத்தக் கைதிகளை அமெரிக்கா வசம் இந்தியா ஒப்படைத்ததைக் கண்டித்து தோழர் அஜாய் கோஷ் விடுத்திருக்கும் அறிக்கையில் அவர் மேலும் கூறுவதாவது:

"வடகொரியா, மக்கள் சீனாவின் கடுமையான ஆட்சேபங்களையும், எதிர்ப்புகளையும் புறக்கணித்துவிட்டு, நடுநிலைமைக் கமிஷனின் தலைவரான ஜெனரல் திம்மையா 22,000 யுத்தக் கைதிகளை அமெரிக்கா வசம் ஒப்படைத்துவிட்டார். அவருடைய இந்தச் செயல் மிகவும் அபாயகரமானது. ஜெனரல் திம்மையாவின் இந்த நடவடிக்கையின் விளைவாக ஆசியாவில் பல ஆபத்தான சம்பவங்களும் இனிமேல் நிகழக்கூடும்.

#### யுத்த நிறுத்த ஒப்பந்தம்

ஒருவருடத்திற்கு மேலாக விடாப்பிடியாக பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து நடத்தியதின் விளைவாக, கொரியாவில் யுத்தநிறுத்த ஒப்பந்தம் ஏற்பட்டது. கொரியாவில் இருதரப்பிலுமுள்ள யுத்தக் கைதிகள் அனைவரையும் நடுநிலைமைக் கமிஷன்வசம் ஒப்படைக்க வேண்டுமென இந்த ஒப்பந்தம் வரையறுத்தது. 90 தினங்கள் வரை யுத்தக் கைதிகளுக்குவிளக்கவுரை அளிக்க வேண்டுமென்றும், இந்த 90 தினங்களில் யுத்தக் கைதிகள் தம்மிஷ்டப் பிரகாரம் தங்கள் எதிர்காலத்தை நிர்ணயித்துக்கொள்ளலாமென்றும், விளக்கவுரை அளிக்கும் காலம் முடிந்த பின்னரும் மிஞ்சியிருக்கும் யுத்தக் கைதிகள் பிரச்னையை அரசியல் மகாநாடு பரிசீலிக்க வேண்டுமென்றும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தில் ஒப்புக்கொள்ளப்பட்டது. யுத்த நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான பின்னர், கைதிகள் பரிவர்த்தனை விஷயத்தில் நடைபெற்ற தில்லுமுல்லுகள் அனைத்தும், யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை உடைத்தெறியவே அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் பெரு முயற்சி செய்கிறார்கள் எனும் விஷயத்தை உலகம் பூராவிற்கும் பகிரங்கப்படுத்தின.

#### குண்டர்கள் அட்டாபிடி

யுத்தக்கைதிகள் முகாமிலிருந்த குண்டர்களின் அடிபிடி பயமுறுத்தலின் விளைவாக, விளக்கவுரை அளிப்பதே சாத்தியமில்லாமல் போய்விட்டதாக ஜெனரல் திம்மையாவே பல தடவை கூறியிருக்கிறார். கைதிகள் முகாமிலிருந்த குண்டர்களுக்கு, அமெரிக்க ராணுவத் தலைமை பல்வேறு வழிகளின் மூலமாக சகல உதவிகளும் அளித்து வந்தது என்ற விஷயமும் ஏற்கனவே பத்திரிகைகளில் வெளியாகியுள்ளன. இந்த குண்டர்களுக்கு எத்தகைய உதவியும் அளிக்கக்கூடாது என்ற கோரிக்கை[illegible] அமெரிக்கப் படைத் தலை[illegible] நிராகரித்துவிட்டது. கொரிய யுத்தக் கைதிகள் தத்தம் தாய்நாட்டிற்குத் திரும்பும் உரிமையை அளிக்க அமெரிக்கா மறுத்து வந்தது. இப்பொழுது திம்மையா தன்னுடைய செய்கையின் மூலமாக இந்த அமெரிக்கப் போக்கிற்கு உதவியளித்துள்ளார்.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் மிக முக்கியமான ஷரத்துக்களை அமுல் நடத்த விடாதபடி அமெரிக்கா முட்டுக்கட்டை போட்டது. கைதிகள் முகாமிலிருந்த கொலைகார ஏஜெண்டுகளை உபயோகப்படுத்தி, தத்தம் தாயகங்களுக்கு யுத்தக் கைதிகள் திரும்பமுடியாதபடி தடைமதில் எழுப்பியது. கொரியாவில் இன்னும் அரசியல் மகாநாடு கூட்டப்படவில்லை. இந்த சூழ்நிலைமையில்தான், நடுநிலைமைக் கமிஷன் தலைவரான திம்மையா யுத்தக் கைதிகளை அமெரிக்காவசம் ஒப்படைத்திருக்கிறார். யுத்தக் கைதிகள் விஷயத்தில் கொரிய அரசியல் மகாநாடு ஒரு நிர்ணயத்திற்கு வரும் வரையில், அவர்களை விடுதலை செய்ய முடியாதென ஜெனரல் திம்மையாவே இதற்கு முன் அமெரிக்காவை எச்சரித்திருக்கிறார். திம்மையாவின் இந்த எச்சரிக்கையை அமெரிக்க ராணுவத் தலைமை பகிரங்கமாக நிராகரித்துவிட்டது. இவ்வளவெல்லாம் நடந்த பின்னரும், ஜெனரல் திம்மையா யுத்தக் கைதிகளை அமெரிக்கா வசம் ஒப்படைத்துவிட்டார்.

#### விபரீதம் நேரிட்டால் இந்தியாதான் ஜவாப்தாரி

இதுமட்டுமல்ல; நடுநிலைமைக் கமிஷனில் அங்கம் வகிக்கும் மெஜாரிட்டி தேசங்களின் எதிர்ப்பையும் புறக்கணித்துவிட்டு, கமிஷனின் தலைவரான திம்மையா இத்தகைய செயலில் இறங்கியது கவனிக்க வேண்டிய விஷயம்.

அமெரிக்க ராணுவத் தலைமையிடம் கைதிகள் ஒப்படைக்கப்படும் கடைசி நிமிஷம் வரையிலும் கூட, கொலைகார குண்டர்களின் ஆதிக்கம்தான் கைதிகள் முகாமில் மேலோங்கி யிருந்ததாகப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகியுள்ளன. கடைசி நிமிஷத்தில் கூட, யுத்தக் கைதிகள் தங்கள் தாயகம் திரும்பிவிடாமல் குண்டர்கள் தடுத்து நிறுத்தி யிருக்கிறார்கள்.

யுத்தக் கைதிகள் பிரச்னையைத் தீர்ப்பதின் மீதுதான் கொரிய யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஆதாரப்பட்டிருக்கிறது. இத்தகைய பிரச்சினை விஷயத்தில், யுத்தக் கைதிகள் பரிவர்த்தனை சம்பந்தமாக இதுகாறும் தான் கூறிவந்த வழிமுறைகளையே, தன்னுடைய நடவடிக்கை மூலம் சின்னாபின்னமாக இந்தியா சிதறடித்துவிட்டது. இது மிகவும் வருந்தத் தக்கது. அமெரிக்காவின் உருட்டல் மிரட்டலுக்கு இந்திய சர்க்கார் பணிந்துவிட்டது. யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை உடைத்தெறிய அமெரிக்க ஏகாதிபத்தியம் செய்துவந்த முயற்சிகளுக்கு இது உதவியளித்திருக்கிறது. இதன் விளைவாக கொரியாவிலும், ஆசியாவின் இதர பகுதிகளிலும் சமாதானத்திற்குப் பங்கம்நேரிட்டால், இதற்கான பொறுப்புகளிலிருந்து இந்திய சர்க்கார் தப்பித்துக் கொள்ள முடியாது.

# திரு - கொச்சி தேர்தலும் ஐக்கிய முன்னணியும்

## தோழர் நம்பூதிரிபாதின் விளக்கம்

இம்மாதம் 10ம் தேதியிலிருந்து தோழர் நம்பூதிரிபாட் திரு-கொச்சியில் சுற்றுப்பிரயாணத்தை மேற்கொண்டிருக்கிறார். முதலில் வடக்கேயுள்ள திருச்சூரிலிருந்து தொடங்கினார். தேதி 21 ஆகிவிட்டபோதிலும்கூட, கோட்டையம் வரையில்தான் அடைய முடிந்தது. இதற்கிடையே, பொலிட் பீரோ கூட்டத்தில் கலந்து கொள்ளவேண்டிய அவசியத்தை முன்னிட்டு டில்லி செல்ல நேரிட்டதால், சுற்றுப்பிரயாண திட்டத்தைத் தற்காலிகமாக ஒத்தி வைக்கவேண்டியதாயிற்று. சீக்கிரமே திரும்பிவந்து, மிகுதியையும் பூர்த்தி செய்வாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த 12 தினங்களாக, நகரத்திற்கு நகரம் சென்று, ராஜ்யத்தின் பல்வேறு இடங்களில் ஏராளமான விவாதமன்ற கூட்டங்களில் பேசினார். நானாவித அரசியல் கட்சிகளையும் சேர்ந்த படிப்பாளிகளும், தொழிலாளிகளும், விவசாயிகளும் இந்தக் கூட்டங்களில் பிரசன்னமா யிருந்தனர். அவர் எடுத்துக்கொண்ட தலைப்பு, 'ஐக்கிய அணியும் கட்சியும்' என்பது.

இந்தக்கூட்டங்கள் காரியார்த்த பூர்வமான அரசியல் விவாதங்களின் மையமாக விளங்கின. கேட்கப்பட்ட கேள்விகள் சிலவும், அவற்றுக்கு அளிக்கப்பட்ட பதில்களும் இங்கே தரப்படுகின்றன:

● கே: மும்முனைப் போட்டிகளைத் தவிர்ப்பதைத் தவிர, அந்த எல்லைக்கு அப்பாற் சென்று, கம்யூனிஸ்ட்களுடன் மேற்கொண்டு எந்தவிதமான ஒத்துழைப்பும் வைத்துக்கொள்ள இயலாதென்று பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி தெரிவிக்கிறது. அப்படியானால், பிறகு இடதுசாரி ஐக்கிய அணியோடு சேர்ந்து ஒரு சர்க்காரை அமைக்க விரும்புவார்களா? அதற்கென்ன உத்தரவாதம்?

ப: பி.சோ.க. வின் தற்போதைய போக்கைக் கவனிக்குமிடத்து, அவர்கள் ஒரு கூட்டுசர்க்கார் நிறுவத் தயாராயிருப்பார்களென்று எதிர்பார்க்கலாம். எல்லா கட்சிகளையும் போலவே, பி. சோ. க. வும்கூட ஒரு குறிப்பிட்ட மாறு நிலையையே விடாப்பிடியாகப் பற்றிக் கொண்டிருக்க முடியாது.

● கே: காங்கிரஸ் ஆதிக்கத்திற்கு வருவதைத் தடுப்பது, கம்யூனிஸ்டுகளை அழிப்பது, பி. சோ. க. வை பலப்படுத்துவது ஆகியவைதான் தன் கட்சியின் கொள்கை என்று லோகியா பிரகடனப்படுத்தவில்லையா?

ப: இந்த மூன்றையும் திரு-கொச்சியில் நிறைவேற்ற இயலாது. காங்கிரஸ் அதிகாரத்திற்கு வருவதைத் தடுக்க வேண்டுமேயானால், கூட்டு சர்க்கார் அமைக்க இ. ஐ. மு. வுடன் ஒத்துழைக்க பி. சோ. க. தயாராக இருந்தாக வேண்டும். கம்யூனிஸ்டுகளை அழிக்க அவர்கள் [illegible] காங்கிரஸோடு ஒத்துழைக்க வேண்டிவரும். பி. சோ. க. காங்கிரஸோடு ஒத்துழைத்தால், மக்களால் நிராகரிக்கப்படும். இந்த விதத்தில் பி. சோ. க. தன்னை வலுப்படுத்திக் கொள்ள முடியாது.

● கே: பி. சோ. க. வும், இ.ஐ.மு. வும் சேர்ந்து அமைக்கும் சர்க்காரை, ஜனாதிபதியின் அதிகாரத்தை உபயோகித்து, மத்திய அரசாங்கம் கலைத்துவிடாதா? அப்படி நேர்ந்தால், பின்னர் நீங்கள் என்ன செய்வீர்கள்?

ப: எப்படி, எவ்விதத்தில் கலைக்கப்பட்டது என்ற அடிப்படையில் ஐக்கிய அணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அதைப் பரிசீலிக்கும்.

● கே: வித்தியாசப்பட்ட வெவ்வேறு சித்தாந்தங்களை அஸ்திவாரமாகக் கொண்ட கட்சிகள் இ. ஐ. மு. – பி. சோ. க. ஏற்பாட்டில் இடம் பெறுவதால், ஒரு சர்க்காரை அவற்றால் எப்படி நடத்த முடியும்?

ப: சித்தாந்த வேற்றுமைகள் [illegible]திலும் மக்களுக்கு உடனடி நிவாரணம் அளிப்பது சம்பந்தப் பட்டமட்டில் அபிப்பிராய வித்தியாசம் கிடையாது. சட்டசபைக்கு உள்ளேயானாலும் சரி, மந்திரி சபைக்குள்ளேயானாலும் சரி மோதல் ஏற்படுவதற்கான இடமில்லை.

● கே: ஒரு பொதுவான வேலைத் திட்டம் இருந்தாகவேண்டுமா?

ப: இ.ஐ.மு., பி.சோ.கா.வின் ஐக்கிய சர்க்காருக்கு ஒரு வேலைத் திட்டம் அவசியமாகும். அது தேர்தலுக்குப் பிறகும் கூட வரலாம். ஒரு பொதுவான வேலைத் திட்டம் பிரசுரிக்கப்படாத போதிலும், சில பொதுவான கண்ணோட்டங்களுண்டு.

● கே: மத பாதிரிகள் அரசியலில் பங்கெடுக்கக் கூடாதென்று சொல்வது சரியா?

ப: பிரஜைகள் என்ற முறையில் அவர்கள் கலந்துகொள்ளலாம் ஆனால் ஆண்டவன் பேராலும் நரகத்தைக் காட்டியும் கூடா[illegible]து.

● கே: அதிகா[illegible]த்திற்கு வருமேயானால், இ.ஐ.மு. சர்க்கார் மதத்தின் பால் எத்தகைய கொள்கையைக் கடைப்பிடிக்கும்?

ப: தாம் நேசிக்கும் எந்த மதத்தையும் யாரும் அனுஷ்டிப்பதற்கும், எம் மதத்திலும் நம்பிக்கையில்லாதவர் தன் கருத்தைக் கைக்கொள்வதற்கும் பூரண சுதந்திரம் வழங்கப்படும். தொழும் உரிமை பரிபூரணமாக உண்டு. ஆனால் மதம் அரசியலில் தலையிட அனுமதிக்கப்படமாட்டாது.

# ரெட்ஹில்ஸில் படுகொலை!

## நிரபராதிகளின்மேல் துப்பாக்கிப் பிரயோகம்

### குற்றத்தை மூடிமறைக்க முயற்சி

18உ திங்கட்கிழமை இரவு போலீசார் சாராய கேசு சம்பந்தமாக 8 பேரை ரெட்ஹில்ஸ் சமீபமுள்ள தற்காசு என்ற கிராமத்தில் பிடித்து 7 பேரை ரெட்ஹில்ஸ் ஸ்டேஷன் லாக்-அப்பில் வைத்தனர். ஒருவர் கூச்சலிடும் சப்தம் மட்டும் கேட்டது.

மறுநாள் அதிகாலையில் (இரவு அடிபட்டதால்) இறந்த 45 வயதுள்ள அப்பாத்துரை (ஹரிஜன்) ரெட்ஹில்ஸ் டிராங்க் ரோட் பக்கம் கிடந்தார் லாக்-அப்பிலிருந்து அவருடைய தம்பி மச்சனனை கூப்பிட்டு இறந்தவரை அப்புறப்படுத்தச்சொன்னார் சப்-இன்ஸ்பெக்டர் பால். ஆனால் பக்கத்து ஜனங்கள் கூடிவிட்டார்கள். அக்கூட்டத்திலிருந்தவர்கள் இளைஞர் காங்கிரஸ் காரியதரிசி கதிர்வேலு, காங்கிரஸ் தலைவர் ஆர்.எம். நாராயணசாமி, காமராஜ் தேசீய வாலிபர் சங்கத்தைச் சேர்ந்தவர்கள், பீடி தொழிலாளர்கள், தி.மு.க. கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவர்கள், சிறு கடைக்காரர்கள், வியாபாரிகள் முதலியோர் இன்ஸ்பெக்டரை பெரிய அதிகாரியிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதே மக்கள் கோஷம்.

இன்ஸ்பெக்டர் ஸ்டேஷனுக்குள் சென்றுவிட்டார். ஜனங்கள் நகரவில்லை. சுடுவேன் என பயமுறுத்தி ஸ்டேஷன் பின் பக்கம் ஆகாயத்தை நோக்கி இருமுறை சுட்டார். பின் ஜனங்களைப் பார்த்து சுட்டார். ஜனங்கள் எந்தவித பலாத்கார நடவடிக்கையும் எடுக்கவில்லை. செய்திருந்தால் சப்-இன்ஸ்பெக்டர் பிழைத்திருக்கமுடியாது. ஊரே ஒன்றுபட்டிருந்தது.

சுட்டதில் ஹைவேஸ் டிப்பார்ட்மெண்ட் ரோடு காங்கி ·தொழிலாளி அப்புக்குட்டி மூத்த மனைவி முருகம்மாள் கையில் வைத்திருந்த இளைய மனைவி தேவகியின் 1½ வயதுக் குழந்தைக்கு மண்டையில் பட்டு அந்த இடத்தில் உயிர்நீத்தது. முருகம்மாளுக்கு கையில் படுகாயம். ஸ்டான்லி ஆஸ்பத்திரியில் படுக்கையில் இருக்கிறார்கள். குழந்தை பிரேத விசாரணை செய்யப்பட்டு இன்று கொடுக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது. (இது விபரம் அப்புக்குட்டியே சொன்னார்) இறந்த அப்பாத்துரை உடம்பு பிரேத விசாரணை செய்யப்பட்டு இன்னும் கிடைக்கவில்லை உறவினர்கட்கு.

நேற்று பகல் 1–30 மணிக்கு S.A.P. வந்து சப்-இன்ஸ்பெக்டர் அவர் குடும்பம் சாமான்களை அப்புறப்படுத்தியுள்ளனர். போலீஸ் ஸ்டேஷனை சுற்றி கற்களை குவித்து போலீசாரே இப்பொழுது வைத்திருக்கிறார்கள்.

# மாக்னிசைட் குவாரியிலே குடியரசு

## 316 தொழிலாளர் ஆட்குறைப்பு!

### எதிர்த்து ஸ்ட்ரைக் நோட்டீஸ்

இந்திய குடியரசு தினத்தை வாண வேடிக்கையோடு, தாள மேளத்தோடு கொண்டாடுகிறார்கள் காங்கிரஸ் தலைவர்களும், அவர்களால் ஆதாயம் பெற்ற சீமான் சீமாட்டிகளும்! குடியரசின் அபார சாதனைகளைப் பற்றி பக்கம் பக்கமாய்த் தீட்டுகின்றன காங்கிரஸ் ஏடுகள்! புது வருஷம் உங்கள் எல்லோருக்கும் இன்னும் அதிக சந்தோஷத்தையும், சுபீட்சத்தையும் அளிக்கவேண்டும் என்று நான் பிரார்த்திக்கிறேன் என்று தேச மக்களுக்கு செய்தி விடுக்கிறார் ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத்! நாம் எப்பொழுதும் நமது கடமைகளையும் பொறுப்புகளையும் மறவாமல் இதற்கு முன்பு இருந்ததைவிட தனி மனிதனாகவும் கூட்டமாகவும் வேலைகள் செய்வோமாக! என்கிறார் கவர்னர் பிரகாசா! வறுமையிலிருந்து நல்வாழ்வுக்கு மாற இடைவிடாமல் உழைக்கவேண்டும் என்கிறார் முதலமைச்சர் ராஜாஜி! பிரதமர் நேருவோ "உழை! உழை!! உழை!!!" என்று ஓயாமல் வார்த்தைகளைக் கொப்பளித்துக்கொண்டேயிருக்கிறார்.

#### ஆனால் நடப்பதென்ன?

உழைத்தால் நல்வாழ்வு பெறலாம் என்று ஆளும் கட்சியினர் படாடோபமாகப் பேசிக்கொண்டிருக்கும்போதே நாட்டிலே என்ன நடக்கிறது.

சேலம் மாக்னிசைட் குவாரியிலே புது வருட முதல் மாதம் 13-ந் தேதியிலே, உழைக்கிறோம் உழைக்கிறோமென்று கூறிய 316 தொழிலாளர்களை வேலைக்கு வேண்டாம், வேலைக்கு வேண்டாம் என்று ஆள்குறைப்பு செய்துவிட்டான் வெள்ளை முதலாளி! இதைக்கண்டித்து அன்றே ஒரு நாள் கண்டன வேலை நிறுத்தம் செய்தார்கள், 1500 குவாரி தொழிலாளர்களும்! வாரத்தில் 5 நாள் வேலையாவது செய்யலாம் என்று தொழிற்சங்கம் கலெக்டர் முன்னால் கூறியது. அதே சமயத்தில் தமிழ்நாடு தொழிற்சங்கம் சார்பில் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி, ரீஜனல் லேபர் கமிஷனரிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்கும் போதே 316 பேரை ஆள்குறைப்பு செய்துவிட்டது நிர்வாகம்.

சேலத்தில் மாத்திரமென்ன? சென்னையிலுள்ள வெள்ளைக்கார பெஸ்ட் அண்ட் கம்பெனியிலும் 2 மாதங்களுக்கு முன்னால் 93 தொழிலாளர்கள் வேலையைவிட்டு நீக்கப்பட்டார்கள்.

புது வருஷம் உங்களுக்கு சுபீட்சத்தையும் சந்தோஷத்தையும் கொடுக்கும் என்றாரே ஜனாதிபதி! யாருக்கு சுபீட்சத்தையும் சந்தோஷத்தையும் கொடுத்திருக்கிறது இந்தப் புதுவருடம்!

வேலையிழந்து, பட்டினித் தீயால் கருக்கப்பட்டுக்கொண்டிருக்கும் 400க்கு மேற்பட்ட...மாக்னிசைட், பெஸ்ட் தொழிலாளருக்கும், மற்றும் ஆயிரக் கணக்கான டிராம், ஹார்வி மில் தொழிலாளர்களுக்கும், இது போன்று வேலையின்றித் தவிக்கும் ஆயிரமாயிரம் வாலிபர்களுக்கும் இந்த தலைவர் பெருமான்களின் பேச்சு எப்படி யிருக்குமென்று நாம் சொல்லித் தெரியவேண்டியதில்லை.

#### கண்டனக்குரல் எழுப்புக!

இந்த தாக்குதலின் முன்னே தொழிற்சங்க இயக்கம் தலை குனிந்து கிடக்காது. "இந்தப் பிரச்னையை பாரபட்சமற்ற ஒரு விசாரணை கோர்ட்டுதான் தீர்மானிக்கவேண்டும். முதலாளியே தன் இஷ்டம்போல் ஆள்குறைப்பு செய்வதை ஒருக்காலும் அனுமதிக்க முடியாது" என்று தமிழ்நாடு தொழிற்சங்க உபதலைவர் கே. டி. கே. தங்கமணி அறிக்கை விட்டிருக்கிறார். இது விஷயத்தை தொழில்மந்திரி வி. வி. கிரிக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இப்பிரச்னையை அட்ஜுடிகேஷனுக்கு விடுமாறு அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் சார்பாக தோழர் கே. பி. பணிக்கர் டில்லியிலுள்ள பிரதம லேபர் கமிஷனரிடம் வற்புறுத்தியுள்ளார். தொழிற் சங்கம் வேலைநிறுத்த நோட்டீஸ் கொடுத்திருக்கிறது.

இது விஷயத்தில் உடனே தலையிடுமாறு, சென்னையிலுள்ள மத்திய சர்க்காரின் ரீஜனல் லேபர் கமிஷனருக்கும், இந்திய சர்க்காரின் தொழில் மந்திரி வி.வி. கிரிக்கும் சகல தொழிற்சங்கங்களும் கடிதமெழுதவேண்டும்.

## சென்னையில் சோவியத் ... காரியாலயம் ஏற்படு...

திண்டுக்கல் தோல் பதனிடும் தொழிலாளர் சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டம் 8-1-54ல் சங்க உப தலைவர் N. வரதராஜன் தலைமையில் கூடியது. சங்க பொதுக் காரியதரிசி தோழர் எஸ். ஏ. தங்கராஜ் கொண்டுவந்த கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:

இந்திய சோவியத் வர்த்தக ஒப்பந்தத்தை இக் கூட்டம் மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது. இந்திய தோல் வர்த்தகம் லண்டன் மார்க்கெட்டை நம்பி நிற்பதால், வெள்ளை முதலாளிகளின் வர்த்தக சூதாட்டத்துக்குத் தக்கபடி தோல்விலை நிர்ணயிக்கப் படுகிறது. அதனால் இந்த தொழிலை நம்பி நிற்கும் 1 லக்ஷம் தோல் பதனிடும் தொழிலாளர்களின் வாழ்வும் பாதிக்கப்படுகிறது. மற்றும் தினசரி இந்த தொழில் நசித்துவரும் கட்டத்தில், ஏற்பட்டுள்ள இந்திய-சோவியத் வர்த்தக ஒப்பந்தத்தை இக் கூட்டம் வரவேற்பதுடன், மேற்படி ஒப்... பிட்டுள்ள தோ... யிலை, மிளகு ... பெரும்பாலும் ... விருந்துதான் ... வேண்டியிருப்பத... திய வியாபாரிகள், ... தத்தை பூரணமாக... திக் கொள்ளும் மு... யத் வர்த்தக காரியா... சென்னையில் ஏற்படு... திய சர்க்காரை இக்கூ... டுக்கொள்ளுகிறது.

★ சட்ட பூர்வமா... களுக்காகப் போராடும் திருச்சி தோல்பதனிடு... லாளர்களுக்கு பூரண ... அளிப்பதுடன், சம்ப... அதிகாரிகள் இதில் ... தீர்க்கும்படி இக்கூட்ட... களைக் கேட்டுக்கொ... மற்றும் திண்டுக்கல் ... கைத்தறி நெசவாளர்களு... படுத்திய கஞ்சித் தொட்டி... மூடியதைக் கண்டித்தும், அதை மீண்டும் திறக்கவேண்டுமென்றும், மயில் மார்க் சுருட்டுக் கம்பெனியில் போடப்பட்டுள்ள ஆட்குறைப்பு நோட்டீஸை வாபஸ் வாங்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

## காஞ்சிபுரம் பட்டு ஜவுளி

### உற்பத்தியாளர் கோரிக்கைகள்

### ரிஜிஸ்ட்ரார் ஒப்புக்கொண்டார்

காஞ்சீபுரம் பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள் கூட்டம் 17-1-54 தேதி மாகாண கூட்டுறவு சொஸைட்டி ரிஜிஸ்டிரார் தலைமையில் நடைபெற்றது. மேற்படி சங்கத்தின் சார்பில் கீழ்கண்ட கோரிக்கைகள் அடங்கிய யாதாஸ்து ஒன்று மாகாண கோவாப்பரேடிவ் சொஸைட்டி ரிஜிஸ்டிராரிடம் சமர்ப்பிக்கப்பட்டது தோழர் கே. எஸ். பார்த்தசாரதி யாதாஸ்தைப்பற்றி விளக்கி பேசினார்.

#### கோரிக்கைகள்

(1) வாங்கி விற்கும் கூட்டுறவு சொஸைட்டி ஏற்படுத்தல்.

(2) ஷெ சொஸைட்டியின் மூலம் கோராவை வாங்கிக்கொடுப்பது.

(3) உற்பத்தி செய்யப்பட்ட துணிகளை இந்த சொஸைட்டியின்மூலம் விற்பனைசெய்ய ஏற்பாடு செய்வது.

(4) இந்த சொஸைட்டியில் பங்கொன்றுக்கு ரூ. 50 வீதம் நிர்ணயித்து பங்குதாரர்களைச் சேர்ப்பது.

(5) இதற்கான பண உதவிகள் கூட்டுறவு பாங்குகள்மூலம் செய்து தரவேண்டும்.

(6) இந்த சொஸைட்டியில் உற்பத்தியாகும் பட்டு ஜவுளிகளுக்கு "காஞ்சீபுரம் பட்டு" என்ற முத்திரையிட்டு விற்பனைசெய்ய உதவி அளிக்கவேண்டும்.

(7) அந்நிய நாடுகளிலிருந்து இந்த சொஸைட்டியின் மூலம் கோரா இறக்குமதி செய்ய உதவியளிக்கவேண்டும்.

(8) அப்படி இறக்குமதிசெய்யும் கோராவிற்கு இறக்குமதி வரியிலிருந்து விலக்களித்து (செஸ் பண்டின்மூலம்) உதவியளிக்கவேண்டும்.

(9) இந்த ஊரில் டிசைனிங் செண்டர் ஒன்று அமைத்துதரவேண்டும். அதற்கான செலவை செஸ் பண்டிலிருந்து ஈடுசெய்யவேண்டும்.

(10) விஞ்ஞானரீதியான சாய தொழிற்சாலையை இந்த சொஸைட்டியின்மூலம் அமைத்துத்தர வேண்டும். அதற்கான செலவை செஸ்பண்டிலிருந்து கொடுக்கவேண்டும்.

மேற்கண்ட இந்த கோரிக்கைகளை மாகாண கூட்டுறவு ரிஜிஸ்டிரார் ஏற்றுக்கொண்டு உடனடியாக பர்சேசிங் சேல்ஸ் சொஸைட்டி அமைத்து தருவதாகவும் சாய தொழிற்சாலை ஒன்று அமைத்து தருவதாகவும் உறுதி அளித்து ஷெ சொஸைட்டிக்கு தற்காலிகமாக ஆர்கனைசிங் பண்ண கீழ் கண்டவர்களை முக்கியஸ்தர்களாக மாகாண கூட்டுறவு ரிஜிஸ்டிரார் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்டது.

1. எம். சி. கோவிந்தசாமி
2. ஆர். வேணுகோபால்
3. ஏ. கே. ஆள்வார், M. C.
4. ரகுபதி
5. சிங்காரவேலு முதலியார்

26 நபர்கள் 50 ரூ. சேர் கட்டுவதாக மாகாண கூட்டுறவு ரிஜிஸ்டிராரிடம் உறுதி அளித்தார்கள்.



## ஆமதாபாத்திலே!

ஆமதாபாத் முற்போக்கு வாலிபர் சங்கத்தின் 3 பகுதி பொது நிர்வாக கமிட்டி கூட்டம் 14-1-54ல் மணிநகர் சங்க இல்லத்தில் தோழர் ஆர். ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது.

சங்கத்தின் இரண்டாவது ஆண்டு விழாவை சிறப்பாகக் கொண்டாடுவதென்றும், நிர்வாக கமிட்டி அங்கத்தினர்கள் தலா 10 ரூபாய் நன்கொடையளிப்பதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

பிறகு, கீழ்க்கண்ட 10 பேர்கள் கொண்ட விழா கமிட்டி அமைக்கப்பட்டது. ஜமால்பூர் வி. சுப்ரமணி (செயலாளர்), எம். ஆர். ஆறுமுகம் (பொருளாளர்) நா. முருகேசன், வி. பாலு, பி. புருஷோத்தமன், மணிநகர் ஆர். பெருமாள், வை. விநாயகம், சுந்தரராசு, வெங்கடேசன், நரோடா, எம். எஸ். ஜெயக்கண்ணு.

## செங்கோட்டை பஞ்சாலை தொழிலாளர் சங்கம்

செங்கோட்டை பஞ்சாலை தொழிலாளர் சங்க நிர்வாகக் கமிட்டி கூட்டம், சங்கத் தலைவர் என். ஷண்முகம் பி. ஏ. பி. எல். தலைமையில் 10-1-54ல் நடைபெற்றது. அப்போது:

1. பொதுத் தேர்தலில் சுயேச்சையாக நிற்கும் சங்க ஆலோசகர் சட்டநாதனை ஆதரிப்பதென்றும்;

2. பாளையங்கோட்டையிலிருந்து செங்கோட்டைக்கு வரும் பஸ்கள், ஊருக்கு வெளியே நிற்பதால், அதை ஊருக்குள் வருவதற்கு திரு-கொச்சி சர்க்கார் அனுமதிக்க வேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேறின.

## ஷண்முகர் மில் தொழிலாளர் மாபெரும் வெற்றி!

### சஸ்பெண்ட் காலத்துக்கு சம்பளம்!

ராஜபாளையம் ஷண்முகர் மில் தொழிலாளர்கள் மெதுவாக வேலை செய்தார்கள் என்று காரணம் காட்டி 6 தொழிலாளர்களை மில் நிர்வாகம் சஸ்பெண்ட் செய்ததும்-அதையெதிர்த்து எல்லா தொழிலாளர்களும் பலத்த கிளர்ச்சி செய்ததினால் திரும்பி வேலைக் கெடுத்துக் கொள்ளப்பட்டதும் ஏற்கெனவே ஜனசக்தியில் வெளியாகியிருக்கிறது.

அந்த 6 பேர்களையும் வேலையை விட்டு நீக்குவதற்கு அனுமதி கொடுக்க வேண்டுமென்று முதலாளி விசேஷ தொழில்கோர்ட்டில் மனு செய்திருந்தார். ஆனால் தொழிலாளிகள் கையைக் கட்டிக் கொண்டு சும்மாயிருக்கவில்லை. சஸ்பெண்டு காலத்துக்கு சம்பளம் கொடுக்க வேண்டுமென்று தொழிலாளிகளும்மனுசெய்திருந்தார்கள்.

தொழிலாளர்களுக்காக வக்கீல் திரு. எஸ். கிருஷ்ணமூர்த்தி ஆஜரானார். தொழிற்சங்கம் சார்பில், சங்கக் காரியதரிசி எ. சீனிவாசன் விசாரிக்கப்பட்டார். விசாரணை முடிந்த பின்:

★ தொழிலாளர்களை டிஸ்மிஸ் செய்ய உத்திரவு கொடுக்க முடியாது என்றும்—

★ சஸ்பெண்ட் செய்யப்பட்ட காலத்துக்கு சம்பளம் கொடுத்துவிட வேண்டுமென்றும் கோர்ட்டார் தீர்ப்பளித்துவிட்டார்கள். 22-1-54 கெஜட்டில் தீர்ப்பு வெளியாகியிருக்கிறது.

தொழிலாளர்களுடைய ஒற்றுமையும் நியாயமும் வெற்றிபெற்றது. முதலாளியின் அக்கிரமப் போக்குக்கு அடி கிடைத்தது.

## கார்ப்பரேஷன் தொழிலாளர் வெற்றி

சென்னை கார்ப்பரேஷன் தொழிலாளர்கள் 2000 பேர் சென்ற மாதம் கமிஷனரின் முன்பாக, டிரஸ் வேண்டுமென்று ஆர்ப்பாட்டம் செய்தார்கள். தொழிலாளர்களின் ஒற்றுமையையும் உணர்ச்சியையும் கண்ட அதிகாரிகள், தொழிலாளர்களுக்கு உடை சப்ளை செய்தார்கள். 100 தொழிலாளர்களை வேலையை விட்டு நீக்கும் பிரச்னையையும் கைவிட்டார்கள்.

உற்சாகமுற்ற தொழிலாளர்கள் தங்களது சங்கத்தைப் பலப்படுத்துவதில் தீவிரமாக முனைந்திருக்கிறார்கள்

22-1-54ல் சங்கத்தின் மகா சபைக்கூட்டம் வடசென்னை பென்ஷனர்ஸ் லைன் மைதானத்தில் நடைபெற்றது. தோழர்கள் பி. கருப்பண்ணன், கே. முருகேசன், ஆறுமுகம் முதலியவர்கள் தொழிலாளர்களின் ஒற்றுமையை போற்றி பேசினார்கள்.

# ..ல்யாணி காங்கிரஸ் க..

# ..மரிக்க சதிகளை முறியடிக்க காங்கிரஸ..

## ..ள் முன்னேற வழி உண்டா?

..ட்டு மேளத்துடன், ஆடம்பர விளம்பரங்களுடன் கல்யாணி காங் ..முடிந்தது. ஆளும் கட்சிக்கு ஆதரவாக நிற்கும் முதலாளித்துவப் ..கள் ஆதியோடந்தமாய் செய்திகளை ஒலிபரப்பின. சமுத்திரம்போல் ..ரண்ட கம்யூனிஸ்டுக்கட்சி மகாநாட்டுச் செய்திகளை இருட்டடிப்புச் .. இதே கோயங்கா-சீனிவாசன் பத்திரிகைகள் காங்கிரஸ் தலைவர் ..லும் அச்செய்தியையும்கூட விடாமல் காங்கிரஸ் நடவடிக்கைகளைப் ..துள்ளன.

..ரியக்கமிட்டித் தீர்மானங்கள், விஷயாலோசகமிட்டி விவாதங்கள், காங்கிரஸ் தலைவர் ..ர, மற்ற சிறிய பெரிய தலைவர்கள் ஆதர..ள் எல்லாம் மாமூலாக முறையாக நடந்து..ன. கல்கத்தா சென்றவர்கள் ஊர் திரும்பி.. எந்த நிலையில்? அவர்களுக்குக் கல்யாணி ..ஸ் காட்டிய வழி எது?

..மரிக்கக் கோட்டான்கள் .. நம்மை நோக்கிக் கொக்கரிக்..ன்றன. சுதந்திர இந்தியனின் வீட்டிலே பிரிட்டிஷ் கருநாகம் குடி இருக்கிறது. தாய்நாட்டை எதிர்நோக்கியுள்ள பேரபாயத்தினின்று விடுவித்துக்கொண்டு கண்ணியமாக வாழ வழி உண்டா என்று கேட்கின்றனர், கண்ணியமான காங்கிரஸ்காரர்கள் உட்பட அனைவரும். கல்யாணி காங்கிரஸ் அவர்களுக்குக் காட்டிய வழி எது?

பாக்கிஸ்தானுக்கு அமெரிக்கா செய்ய இருக்கும் ராணுவ உதவியைக் கேட்டு, பீதியும் குழப்பமும் அடைந்திருந்த காங்கிரஸ்காரர்கள் கல்யாணி காங்கிரஸ் முடிந்த பின் தன்னம்பிக்கையும் தைரியமும் பெற்று ஊர் திரும்பினர்கள் என்று பி.டி.ஐ. நிருபர் எழுதுகிறார்.

ஆனால் கல்யாணி காங்கிரஸ் எடுத்த எந்த முடிவினால் இந்த அசட்டு தைரியமும் தன்னம்பிக்கையும் வந்தது என்பது பற்றி அந்த நிருபர் விளக்கத் தவறிவிட்டார்.

### அமெரிக்க ஆபத்து

வாஸ்தவம்! அமெரிக்க ஆக்கிரமிப்பு அபாயத்தை, சூழ்ச்சிகளை, இந்த நாட்டின் சுதந்திரத்தை கொள்ளை கொள்ள அது புரியும் சதிகார சாகசங்களை கம்யூனிஸ்டு கட்சி எடுத்துச்சொல்லி எச்சரிக்க முன் வந்தது. ஆனால் நேரு முதற்கொண்டு காங்கிரஸ் தலைவர்கள் அனைவரும், எள்ளி நகையாடினர்; நம்மை ஏளனம் செய்தனர் 'அமெரிக்கக் கிலிபிடித்துவிட்டது கம்யூனிஸ்டுகளுக்கு' என்றனர். அதுமட்டுமல்ல.

'சென்னையிலுள்ள அமெரிக்க ஸ்தானிகருக்கு நம் ஜெயில்களிலுள்ள கைதிகளின் விபரங்களைக் கொடுப்பது நமது சுதந்திர அந்தஸ்திற்கு விரோதமல்ல என்று வாதாடினர் 'தேசபக்தர்' ராஜகோபாலாச்சாரியார். அமெரிக்கத் 'தூண்டில் முள்' உதவியில் தயாள குணத்தையும் மருவற்ற பேரன்பையுமே கண்டனர் காங்கிரஸ் காரர்கள். அமெரிக்க உளவாளிகளை 'என்ஜினியர்கள்', 'தொழில் நுட்ப நிபுணர்கள்' என்ற போர்வையில் இறக்குமதி செய்து நம் திட்டங்களை நிறைவேற்றுவதில் கேந்திரமான பொறுப்புக்களை அளித்துள்ளது காங்கிரஸ் சர்க்கார். ஆசியாக்காரர்களைக் கொண்டே ஆசியாக்காரர்களை அடிமைப்படுத்துவோம் என்ற ஐஸன்ஹோவர் திட்டத்தை நிறைவேற்ற இந்த அமெரிக்க உளவாளிகள் இங்கு ஐந்தாம்படையைத் திரட்டுகின்றனர் என்பதை எந்தக் காங்கிரஸ்காரராயினும் மறுக்கமுடியுமா? கோடிக்கணக்கில் இதற்காக அமெரிக்க டாலர் இங்கு செலவிடப்படுகிறது என்பதை மறுக்கமுடியுமா? முடியாது.

### அதிருஷ்ட்வசம்!

அதிருஷ்டவசமாக, இந்திய மக்களின் நீண்டநெடும் சமாதான பரம்பரையும், இன்று அவர்களிடையே உருவாகிவரும் ஆழ்ந்த சமாதான விருப்பமும், இந்திய சர்க்காரை அமெரிக்காவின் 'கைதூக்கி பொம்மை'யாக மாற்றுவதற்குக் குறுக்கே நிற்கின்றன. உலக ஆதிக்க ஆக்கிரமிப்புச் செயல் அனைத்திற்கும் இந்திய ஆதரவை அடைவதில் முற்றும் வெற்றி அடையாத அமெரிக்க ஏகாபத்தியம் பாக்கிஸ்தானை ஆயுதபாணியாக்கி இந்தியாவை மிரட்டி மீன்பிடிக்கலாம் எனத் திட்டமிடுகின்றது. இவ்வித சூழ்நிலையில்தான் கல்யாணி காங்கிரஸ் கூடியது.

அமெரிக்க 'தயாளகுண'த்திலும், 'ஜனநாயக பண்பாட்டி'லும் மதிமயங்கிக் கிடந்த காங்கிரஸ் தலைமை கல்யாணி காங்கிரஸில் அதன் ஆக்கிரமிப்பு அபாயத்தை ஓரளவு உணர ஆரம்பித்திருப்பது யாவரும் வரவேற்கக்கூடியதே! காங்கிரஸ் தலைவர் பண்டித நேருவின் தலைமையுரையிலும், மற்றவர்கள், குறிப்பாக பிரதிநிதிகளின் விவாதிதிலும், தீர்மானத்திலும் இது பிரதிபலித்தது. எனினும் உலக ஆதிக்க வெறிபிடித்த அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் ஜனநாயகப் பண்பாட்டில் காங்கிரஸ் தலைமை வைத்திருக்கும் நம்பிக்கை இன்னும் குறையவில்லை. பாக்கிஸ்தானுக்கு அமெரிக்க ராணுவ உதவி அளிப்பது பற்றிய காங்கிரஸ் தீர்மானத்தின் முதல் பகுதியே இந்தப் பேருண்மையைப் பறை சாற்றுகிறது.

"ஜனநாயகத்திற்காகவும், சுதந்திரத்திற்காகவும் போராடிய நீண்ட நெடும் பாரம்பரை அமெரிக்காவிற்கு உண்டு. அமெரிக்காவின் இன்றைய பலமும், செல்வாக்கும் அதற்கு மிகப்பெரும் பொறுப்பை சுமத்தியிருக்கின்றன. ஆசியாவின் சரித்திரப் போக்கை பின்னோக்கி இழுக்க அமெரிக்கா எவ்வித நடவடிக்கையும் எடுக்காது என்று காங்கிரஸ் நம்புகிறது."

### எவ்வளவு நம்பிக்கை

இதுதான் தீர்மானத்தின் ஆரம்பம்! அமெரிக்காவின் நன்னடத்தையில் காங்கிரஸ் தலைமைக்கு எவ்வளவு நம்பிக்கை பாருங்கள்! மூன்று வருஷ கொரிய யுத்தம், மக்களால் வெறுத்து தூரத்தப்பட்ட சியாங்கிற்கு உயிர் பிச்சை, இந்தோ சீன மக்களைக் கொன்று குவிக்க பிரஞ்சு நரவெறியர்களுக்கு நப்பாம் குண்டு சப்ளை—பாண்டி, காரை, கோவா போன்ற திட்டுகளை அமெரிக்கத் தளமாக்கி வருதல்—இத்தனையும் காங்கிரஸ் தலைமையின் கண்களில் ஆசியாவின் சரித்திரப் போக்கை பின்னோக்கி இழுக்கும் நீசச் செயல்களாக இன்னும் படவில்லை. அதனாலேயேதான் அமெரிக்காவின் 'சுதந்திர' உணர்ச்சியில் நம்பிக்கை வைக்கிறது. முழங்காலை மண்டியிட்டு கை கூப்பி அமெரிக்காவைப் பார்த்து வேண்டிக் கொள்ளும் அடிமைப்புத்தி இன்னும் போகவில்லை என்பதையே தீர்மானத்தின் இப்பகுதி தெளிவாக்குகிறது. அமெரிக்க மிரட்டலைக் கண்டு காங்கிரஸ் தலைமை தொடை நடுங்கும் நிலைமையின் பிரதிபலிப்பு இது. நம் நாட்டில் அமெரிக்க ஊடுருவலை திட்டவட்டமாக எதிர்க்கத் தைரியமில்லாத காங்கிரஸ் தலைமை கொரியாவில் யுத்தக் கைதிகளை, தனது மகத்தான, புனிதமான பொறுப்பையும் தட்டிக் கழித்துவிட்டு கொலை வெறியர்கள் சியாங்கிடமும், சிங்மன் ரீயிடமும் ஒப்படைத்ததில் ஆச்சர்யமென்ன? நேரடியாக யுத்த அணியில் அந்தக் கைதிகளை கொண்டு சென்று நிறுத்த அந்த அமெரிக்கக் கைக்கூலிகள் பிரகடனப்படுத்தியது இந்தியாவிற்குத் தெரிந்திருந்தும் கைதிகளை அவர்களிடம் ஒப்படைத்ததின் காரணமென்ன? அமெரிக்க மிரட்டலுக்கு அடிபணியும் கேவலம் அல்லாது வேறு என்ன?

### அமெரிக்க மேலாதிக்கம்

கல்யாணி காங்கிரஸில் மேற்கூறிய தீர்மானத்தை பம்பாய் முதல் மந்திரி மொரார்ஜி தேசாய் பிரேபித்து பேசும்பொழுது சியாங்கிற்கு சென்ற காலத்தில் அமெரிக்கா கொடுத்த உதவியை அமெரிக்காவின் தயாள குணத்திற்கு உதாரணமாக எடுத்துச் சொன்னார். [illegible]ங்கிரஸின் தலைமையில் மொரார்ஜி தேசாய் போன்ற 'அமெரிக்க மோஹி'கள் இருப்ப[illegible]தப் பார்க்க பல பிரதிநிதி[illegible]களுக்கே சகிக்கவில்லை. மத்[illegible] பிரதேசத்திலிருந்துவந்த [illegible]காஷ் சந்திரசேதி என்பவர் தன் [illegible]லைவர்கள் கொண்டுள்ள அமெரிக்க அபிமானத்தின் மீது அணுகுண்[illegible] வீசினர்.

"உலகச் [illegible]த்திரம் கூறும் கதைவேறு. [illegible]தியாவின் காஷ்மீர் கொள்கை[illegible]ய ஐக்கிய நாட்டில் எதிர்த்[illegible]து அமெரிக்கா! ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் உள்ள காலனி[illegible]க்களின் சுதந்திர அபிலாஷைகளை எதிர்ப்பது அமெரிக்கா! அங்கெல்லாம் பிரெஞ்சு ஏகாதிபத்திய[illegible] போன்ற ஏகாதிபத்திய அரக்கர்களை ஆதரிப்பது அமெரிக்கா! [illegible]ஹிரோஷிமாவிலும் நாகசாக்கியிலும் அணுகுண்டுகளை வீசி அக்கிரமம் புரிந்தது அமெரிக்கா! சீனாவின் ஜனநாயக இயக்கத்தைத் தகர்த்தெறிய சியாங்கே ஷேக்கிற்கு ராணுவ உதவி அளித்தது அமெரிக்கா! இன்றும்கூட சீனாவை ஐ. நா.வில் சேர்ப்பதற்கு பெரும் முட்டுக்கட்டை போடுவது அமெரிக்கா! இன்றும்கூட ஏகாதிபத்திய வல்லரசுகள் ஆதிக்கம் நீடிக்க உதவுவ[illegible] அமெரிக்கா!" இப்படிப்பட்ட [illegible]மெரிக்கா, சுதந்திரப் பாரம்பரை[illegible]டையது என்று காங்கிரஸ் தீர்மானம் பறைசாற்ற வருவது பே[illegible]மை" என்றார் பிரகாஷ்சந்திர [illegible]சேத்தி. பிரதிநிதிகளின் ஆவே[illegible]க்கனல் முன்பு மொரார்ஜி தேசாயின் வாயடைத்தது. ஆனால் பண்டிதநேரு குறுக்கிட்டு 'வெறும் [illegible]த்திரப்படும் தீர்மானத்தை [illegible]டுவதில் பிரயோஜனமில்லை. [illegible]ரியத்தில் காட்ட வேண்டு'மென்று [illegible]றி காங்


கே. முத்தையா


---

# சமாதான இயக்கம் வெகுஜன ரூபம் கொள்ளட்டும்

## தாமதம் வேண்டாம்! செயலில் இறங்குக!

### நாகபுரி சமாதான கூட்டத்தில்

### டாக்டர் கிச்சிலு முழக்கம்

இந்தியாவால், தனது பாதுகாப்பில் வைப்பதற்காக திருப்பியனுப்பப்பட விருக்கும் யுத்தக் கைதிகளை "விடுவிக்க"ப் போவதாக கொரியாவிலுள்ள அமெரிக்க ராணுவத் தலைமை பிரகடனப் படுத்தியிருப்பதானது, உலக சமாதானத்திற்கு பேரபாயமாக உள்ளது. இத்தகைய ஒரு நடவடிக்கை, நிறைவேற அனுமதிக்கப்படுமேயானால், சர்வதேச சட்ட சம்பிரதாயங்கள் அனைத்தையும் பகிரங்கமாக மீறுவதாகும்; அமெரிக்க அரசாங்கத்தால் விசுவாசப் பிரமாணத்தின்பேரில் கையெழுத்திடப்பட்ட யுத்தக் கைதிகள் உடன்படிக்கையையே காற்றில் பறக்க விடுவதாகும். இதன் விளைவாக, அரசியல் மகாநாட்டைக் கூட்டுவதின் மூலம் கொரியாவில் சமாதானத்தைக் கொண்டு வருவதற்கான முயற்சிகள் உருவாகாமல் சிதறடிக்கப்படும்.

யுத்தக் கைதிகளுக்கு விளக்கம் கூறுவது பூர்த்தியாகாததற்கும், அரசியல் மகாநாடு இன்னும் கூடாததற்கும் கொரியாவிலுள்ள அமெரிக்க ராணுவத் தலைமையே பொறுப்பாளியாக இருந்து வருகிறது. யுத்தக் கைதிகளின் முகாம்களில் ஆத்திரமூட்டும் காரியங்களைத் தூண்டி விடுபவர்களும், கையாட்களும் இருப்பதற்கும், அவர்களால், திரும்ப தமக்கு வழங்கப்பட்டுள்ள உரிமையைப் பிரயோகிக்க விரும்பும் யுத்தக் கைதிகளுக்கு எதிராக பயங்கர அட்டூழியம் புரியப்படுவதற்கும், மிரட்டல் உருட்டல் தந்திரம் கையாளப்படுவதற்கும் ஜவாப்தாரி அமெரிக்க ராணுவத் தலைமையே என்பதை நடுநிலைமைக் கமிஷனே சுட்டிக்காட்டியுள்ளது.

### • தீய முயற்சியின் சிகரம்

யுத்தக் கைதிகளை தன்வசம் இந்தியா ஒப்படைத்த உடனேயே, அவர்களை விடுதலை செய்வதன்மூலம், இதுகாறும் அது தொடர்ந்து கடைப்பிடித்து வரும் கொரிய போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கு உலையிடும் தீய முயற்சிகளுக்கு சிகரம் வைக்க, தெட்டத் தெளிவாக வெளியிடப்பட்டுள்ள இந்தியாவின் ஆட்சேபத்தையும் துச்சமாக மதித்து, இப்பொழுது ஆயத்தமாகிக் கொண்டிருக்கிறது இதே அமெரிக்க ராணுவத் தலைமை.

அமெரிக்க சர்க்காரினுடைய இந்த நாடறிந்த நோக்கத்தைக் கவனிக்கும்போது, இந்தியாமீது மகத்தான பொறுப்பு சுமந்துள்ளதாக சமாதானக் கவுன்ஸில் கருதுகிறது. சமாதானத்தின் நலனை உத்தேசித்து இந்தியா தைரியமாகச் செயலில் இறங்கவேண்டுமென்று உலக முழுவதுமே எதிர்பார்க்கிறது.

அமெரிக்க திட்டத்தின் வெளிச்சத்தில், தற்போது எழுந்துள்ள நிலைமையை புனராலோசனை செய்ய வேண்டியும், கொரிய யுத்த ஒப்பந்தத்தை அழிப்பதினின்றும் அமெரிக்க சர்க்கார் தடுக்கப்படுவதற்கும், இந்தியாவும் இதர நடுநிலைமை தேசங்களும் பங்கெடுத்துக்கொள்ளும்படியான அரசியல் மகாநாடு சீக்கிரமே கூடவும், யுத்த நிறுத்த ஒப்பந்தப் பிரகாரம் தக்க விளக்கம்பெற கைதிகளுக்கு வாய்ப்பு கிடைக்கவும் உத்திரவாதம் தரும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கோரி பிரதமருக்கு கவுன்ஸில் தந்தியடித்திருக்கிறது. அமெரிக்காவால் தீவிர நடவடிக்கை எதுவும் மேற்கொள்ளப்படுவதற்கு முன்னால், காலதாமதமின்றி ஐ. நா. பொதுச் சபை கூட்டப்பட வேண்டும்.

இந்த நெருக்கடியான தருணத்தில் இந்த வேண்டுகோளை விடுப்பதில் என்னையும், சமாதான கவுன்ஸிலையும் சமாதான பிரேமிகளான சகலரும் ஆதரிப்பார்கள் என நம்புகிறேன்.

நமது கவுன்ஸில் உறுப்பினர்கள், நாகபுரியில் விவாதங்களில் பங்கெடுத்துக்கொண்ட பிறகு, தமது மாகாணங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கிறார்கள். அமெரிக்க-பாக். ஒப்பந்தத்திற்கு எதிராகவும், கொரியாவில் உண்மையான சமாதானத்திற்காகவும், வியத்நாம் யுத்தம், மலேயா, பிரிட்டிஷ் கயானா, கென்யா, இன்னும் உலகின் இதர பாகங்களிலும் நீடிக்கும் கலோனியல் ஒடுக்குமுறை முதலியவற்றிற்கு முடிவு கட்டுவதற்காகவும், நமது மண்ணில் அந்நியத் திட்டுப் பிரதேசங்களை ஒழித்துக் கட்டவும், ஏராளமான மக்களை ஏககாலத்தில் பூண்டற்றுப் போகடிக்கும் நாசகர ஆயுதங்களுக்குத் தடைவிதிக்கவும், ஐந்து வல்லரசுகள் கூடுவதற்குமான தேசவியாபகமான வெகுஜன இயக்கத்தை அவர்கள் நடத்துவார்கள்.

அமெரிக்க-பாக். ஒப்பந்தத்தை கண்டிக்கும் ஸ்தாபனங்கள், தனி நபர்களுடன் சேர்ந்து, பிப்ரவரி 14ஐ எதிர்ப்பு தினமாக நாடு பூராவும் நடத்த நாங்கள் தீர்மானித்திருக்கிறோம்.

சர்வதேச நெடுபிடி தளரவும், ஆசிய பூமியில் யுத்த தளங்கள் நிறுவப்படுவதையும் கலோனியல் ஒடுக்குமுறையையும் எதிர்க்கவும் தொடர்ச்சியாக மாகாண மகாநாடுகள் நடப்பதை அடுத்து இவ்வாண்டு மே மாதத்தில் சென்னையில் தேசிய மகாநாடு கூடும்.

பிரபல மராத்தி இலக்கிய மேதையும் எழுத்தாளருமாகிய ஸ்ரீ. நத்தையா, மத்திய பிரதேஷ் மாஜி மந்திரி ஸ்ரீ. பருச்சா, அதே மாகாணத்தைச் சேர்ந்த இன்னொரு மாஜி மந்திரியான டாக்டர் ஹாஸன், மத்யபிரதேஷ் மாஜி பிரதம நீதிபதி ஸ்ரீ. பவானி சங்கர் நியோகி, பிரஞ்சிந்திய விடுதலை இயக்கத் தலைவர் திரு. வி. சுப்பையா, மத்யப்பிரதேஷ் ஹரிஜன சேவா சங்கத் தலைவர் ஸ்ரீ. தத்யாஜி வஜாலவர், மத்யபிரதேஷ் காங்கிரஸ் கமிட்டி மாஜி தலைவர் ஸ்ரீ. புனர்சந்த் ரங்கா, பிரஜா சோஷலிஸ்டகட்சியின் எம்.எல்.ஏ. ஸ்ரீ. பிரேம் வாஸ்னிக், விவசாயத் தொழிலாளர் கட்சி எம். எல். ஏ. ஸ்ரீ. கே. ஆர். படில், பிரபல வங்காளி எழுத்தாளர் டாக்டர் பவானி பட்டாசார்ஜி முதலியோர் விவாதத்தில் பங்கெடுத்துக்கொண்டனர். காந்திஜியின் சிஷ்யரான பேராசிரியர் பான்சலி சமாதான இயக்கத்திற்கு இதயபூர்வமான ஆதரவளிப்பதாகத் தெரிவித்தார்.

கவுன்ஸில் கூட்டம் முடிந்ததும், எடுக்கப்பட்ட முடிவுகளை விளக்கிப் பொதுக்கூட்டத்தில் பேசப்பட்டது. டாக்டர் ஜே. ஸி. குமரப்பா, டாக்டர் கிச்லு, பொதுக் காரியதரிசி திரு. ரமேஷ் சந்திரா, புகழ்பெற்ற புரட்சிக்காரர் சர்தார் பிரிதிவி சிங் ஆகி[illegible]யோர் சொற்பொழிவாற்றினர்.

சமாதான இயக்கத்திற்கு ஆதரவாக நாட்டில் ஏற்பட்டுவரும் தன்மை மாறுதலையும், சர்வதேச நெருக்கடியைத் தளர்த்துவதற்கும், உலக சமாதானத்திற்கும் ஆதரவாக சகல பகுதி மக்களையும் ஒரு பொதுவான மேடையில் திரட்டுவதற்கான சாத்தியப்பாடுகள் தோன்றியிருப்பதையும் கவுன்ஸில் [illegible] குறிப்பிட்டது.

இந்தியாவின் [illegible] பாகங்களிலிருந்தும் பிர[illegible]கள் விஜயம் செய்திருந்தனர். [illegible] உலக சமாதான கவுன்ஸிலின் [illegible]யை சர்வஜனப் பகுதி[illegible]ரிடையேயும் பரப்புவதென்[illegible] ஏப்ரலில் நடத்த உத்[illegible]சிக்கப்பட்டுள்ள மகாநாட்டில் எ[illegible]ப் பகுதி மக்களும் கலந்து[illegible]ள்ளச் செய்வதென்றும் உ[illegible]ண்டு உற்சாகமுடன் [illegible]யுள்ளனர்.

உலக சமா[illegible]னக் கவுன்ஸிலுக்கு அங்கத்[illegible]ர்களாக இயக்கத்தின் முன்[illegible]யில் நிற்கும் 16 பேர் [illegible] செய்யப்பட்டிருக்கின்றனர்.

# ஸ் கூடியது! கலந்தது

## ாங்கிரஸிற்கு திட்டமுண்டா?

திற்கு உதாரணமாக எடுத்துச் சொன்னார். [illegible]ங்கிரஸின் தலைமையில் மொரார்ஜி தேசாய் போன்ற ‘அமெரிக்க மோஹி’கள் இருப்பதைப் பார்க்க பல பிரதிநிதிகளுக்கே சகிக்கவில்லை. மத்திய பிரதேசத்திலிருந்துவந்த பிரகாஷ் சந்திரசேதி என்பவர் தன் தலைவர்கள் கொண்டுள்ள அமெரிக்க அபிமானத்தின் மீது அணுகுண்டு வீசினார்.

“உலகச் சித்திரம் கூறும் கதைவேறு. இந்தியாவின் காஷ்மீர் கொள்கையை ஐக்கிய நாட்டில் எதிர்த்தது அமெரிக்கா! ஆசியாவிலும், ஆப்பிரிக்காவிலும் உள்ள காலனிமக்களின் சுதந்திர அபிலாஷைகளை எதிர்ப்பது அமெரிக்கா! அங்கெல்லாம் பிரெஞ்சு ஏகாதிபத்தியம் போன்ற ஏகாதிபத்திய அரக்கர்களை ஆதரிப்பது

**கே. முத்தையா**

அமெரிக்கா! ஹிரோஷிமாவிலும் நாகசாக்கியிலும் அணுகுண்டுகளை வீசி அக்கிரமம் புரிந்தது அமெரிக்கா! சீனாவின் ஜனநாயக இயக்கத்தைத் தகர்த்தெறிய சியாங்கே ஷேக்கிற்கு ராணுவ உதவி அளித்தது அமெரிக்கா! இன்றும்கூட சீனாவை ஐ. நா.வில் சேர்ப்பதற்கு பெரும் முட்டுக்கட்டை போடுவது அமெரிக்கா! இன்றும்கூட ஏகாதிபத்திய வல்லரசுகள் ஆதிக்கம் நீடிக்க உதவுவது அமெரிக்கா!” இப்படிப்பட்ட அமெரிக்கா, சுதந்திரப் பாரம்பரியமுடையது என்று காங்கிரஸ் தீர்மானம் பறைசாற்ற வருவது பேதமை” என்றார் பிரகாஷ்சந்திர சேத்தி. பிரதிநிதிகளின் ஆவேசக்கனல் முன்பு மொரார்ஜி தேசாயின் வாயடைத்தது. ஆனால் பண்டிதநேரு குறுக்கிட்டு ‘வெறும் ஆத்திரப்படும் தீர்மானத்தை போடுவதில் பிரயோஜனமில்லை. காரியத்தில் காட்டவேண்டு’மென்று கூறி காங்கிரஸ் தலைமை இன்றும் அமெரிக்காவின் நல்லெண்ணத்தின்மேல் வைத்திருக்கும் நம்பிக்கையை மூடி மறைக்க முயன்றார்.

### மார்க்கம் என்ன?

அமெரிக்க அபாயத்திலிருந்து நாட்டைப் பாதுகாக்கக் காங்கிரஸ் தலைவர் நேரு கூறும் ‘காரிய சாத்தியமான’ அந்த மார்க்கம் தான் என்ன?

‘தேசத்திற்கு ஓர் அறைகூவல்’ என்ற கல்யாணி காங்கிரஸ் நிறைவேற்றிய மற்றொரு தீர்மானம் கூறுகிறது:

‘தன் முன்னுள்ள அபாய நிலைமையைச் சமாளிக்க நம் தேசிய சக்திகள், சாதனங்கள் எல்லாவற்றையும் திரட்டி பலம்வாய்ந்த இந்தியாவைக் கட்டவேண்டும்” என்று.

“இந்தியாவின் பலம் வளர வேண்டும். ராணுவ பலமட்டுமல்ல இந்தியாவின் பலம். நம் தொழில்களை வளர்க்க நம் மக்கள் கடுமையாக உழைப்பதையும், அபாயங்களை எதிர்ப்பதில் மக்களுக்குத் தைரியமும் மன உறுதியும் உரம் பெற்று வளர்வதையும் பொருத்திருக்கிறது இந்தியாவின் பலம். நாம் மிதமாக இருந்துவிடக் கூடாது” என்று கர்ஜித்தார் காங்கிரஸ் தலைவர் நேரு.

ஆம்! நாம் ஒருக்காலும் மிதமாக இருந்துவிடக்கூடாதுதான்! தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் அபாயத்தை மக்களுக்கு எடுத்துச் சொல்லியாக வேண்டும். தேசத்தைப் பாதுகாக்க மக்களுக்கு தைரியத்தையும் மன உறுதியை ஊட்டியாகவேண்டும். ஆம்! நேரு கூறியதுபோல் மக்கள் உறுதிகொண்டால் அணுகுண்டாலும் இந்தியாவை அசைக்க முடியாதுதான்! ஆனால் எந்தச் சூழ்நிலையில்? மக்கள் உறுதிகொள்வது எப்பொழுது? பசிவந்திடப் பத்தும் பறந்து போகும் என்ற பழமொழி வெறும் வார்த்தைகளல்ல. ஒட்டிய வயிறுடன் உறுதிகொள்வது எங்கனம்?

### உற்சாகம் எப்படி வரும்?

100க்கு 80 பங்கு விவசாயிகள் நிலப்பிரபுக்களின் கொடுமையின் கீழ் நிலமிழந்து கடன்சுமை தாங்க முடியாது முதுகொடிபடுகின்றனரே! இவர்கள் உறுதியும் உற்சாகமும் கொளவது எவ்விதம்? முதலாளிகளின் தாக்குதலால் வேலையிழந்து அல்லது தாங்கமுடியாத வேலைப்பளுவால், சம்பள வெட்டால் தவியாய் தவிக்கின்றனரே தொழிலாளர்கள்! தேசத்தைப் பாதுகாப்பதில் இவர்கள் உறுதியும் உற்சாகமும் கொள்வது எவ்விதம்? ‘வேலைகொடு இன்றேல் சோறு போடு’ என்று லட்சோப லட்சக் கணக்கான தொழிலாளர்கள், விவசாயிகள், படித்த மத்தியதர வர்க்கத்தினர் ஊர் ஊராய், தெருத் தெருவாய் அலைகின்றனரே! இவர்கள் உறுதியும் உற்சாகமும் அடைவது எவ்விதம்? வாழ்வதற்கு வழி கோரி, உரிமைக்காகப் போராடும் மக்களின் மேல் துப்பாக்கிக் குண்டும், குண்டாந்தடியும் பொழிகின்றதே காங்கிரஸ் சர்க்கார். துப்பாக்கிக் குண்டும் குண்டாந்தடியும் மக்களின் உற்சாகத்தையும் உறுதியையும் ஊக்குவிக்கின்ற ஆயுதங்களா? இந்திய மக்களுக்கு ஏழாண்டு காங்கிரஸ் ஆட்சி இழைத்துள்ள கொடுமைகளைப் பார்க்காது கண்ணை மூடிக்கொண்டு ஆகாயத்தை பார்த்து வானளாவும் கோட்டை கட்டும் காங்கிரஸ் தலைவர்களே! கீழே பார்த்து பதில் கூறவீர்களா?

மக்களுக்கு உறுதியளிக்க காங்கிரஸ் காட்டுப் பாதை எது?

“வேலையின்மை பிரச்னை நமது வாலிபரிடையே மனச் சோர்வை ஏற்படுத்தி இருக்கிறது. நமது பெரிய பிரச்சினைகளில் இது ஒன்று.......

“இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் சீக்கிரமே உருவாகவேண்டும். நிலப்பிரச்சினையையும், வேலை இன்மைப்பிரச்சினையையும் தீர்க்க அது பெருவாக உதவி செய்ய வேண்டும்.

“மக்களின் பூரண ஒத்துழைப்புடனும் அவர்களின் விசேஷ தேவைகளை மனதில் வைத்தும் இரண்டாவது திட்டத்தை தயாரிக்க வேண்டும். பஞ்சாயத்துக்களும் அது பற்றி சிந்தனை புரிந்து யோசனைகளை சமர்ப்பிக்க வேண்டும். மேலிடத்திலிருந்தே செயல்பட்டுக் கொண்டிருந்தால் போதாது” என்றார் காங்கிரஸ் தலைவர் நேரு தனது தலைமைப் பேருரையில்.

### நேரு ஒப்புக்கொள்கிறார்!

எனவே முதல் ஐந்தாண்டுத் திட்டம் படுதோல்வி அடைந்துவிட்டது என்பதை நேரு பகிரங்கமாக ஒப்புக்கொள்கிறார். காங்கிரஸ் ஆட்சியினர் போட்ட ஐந்தாண்டுத் திட்டம் சகல இன்னல்களுக்கும் சர்வரோக நிவாரணி என்று கூறிய இதே பண்டித நேரு வேலை இல்லாத் திண்டாட்டத்தை போக்கவில்லை; வாலிபரிடையே மனச் சோர்வு ஏற்பட்டுள்ளது; நிலப் பிரச்சினையைத் தீர்க்கவில்லை. என்பதை ஒப்புக்கொள்கிறார்.

ஐந்தாண்டுத் திட்டம்பற்றிய தீர்மானத்தை பிரரேபித்து பேசிய மந்திரி நந்தாவும் “திட்டம் போட்டு நிறைவேற்றுவதில் தெளிவான வழி எது என்று எங்களுக்கு இன்னும் தெளிவாகவில்லை,” என்றார். திட்டமிட வந்தவர்களின் ஐந்தாண்டு குழப்பம் இது!

எனவே இனிமேல் செய்யப் போவது என்ன? திட்டம் தோல்வி அடைந்ததற்குக் காரணமென்ன? கட்டப்போகும் வீட்டை கூரையிலிருந்து ஆரம்பித்தோம்! வௌவால் மாதிரி தலைகீழாகத் தொங்கினோம்! இது முற்றிலும் தவறு! இனிமேல் அஸ்திவாரத்திலிருந்தே கட்டுவோம்! காலைத் தரையில் வைத்தே நடக்கப் பார்க்கிறோம்! இவ்விதம் இரண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்காக இப்பொழுது இருந்தே முயன்றால் நம்மைப்பிடித்த பீடை தொலையும்! காங்கிரஸ் தலைவருக்கும் திட்ட மந்திரிக்கும் ஏற்பட்டுள்ள ஞானோதயம் இதுவே.

ஆங்கிலோ அமெரிக்கப் போட்டியிலிருந்து நம் தேசிய தொழில்களைப் பாதுகாக்கத் தக்க நடவடிக்கை எடுக்க தைரியமில்லாத காங்கிரஸ் சர்க்கார் தொழில் வளருவதற்கு எந்த உதவியைச் செய்ய முடியுமென்று கேட்கிறோம்! தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்யாத சர்க்கார் சகலருக்கும் வேலை கொடுப்போமென்பது வெறும் வெட்டிப் பேச்சல்லாது வேறு என்ன?

### குழப்பம்

நிலப் பிரச்சினையை அடுத்த ஐந்தாண்டிற்குள் தீர்க்கப் போகிறீர்களாம்! எவ்விதம் தெரியுமா? ஒருவர் வைத்திருக்கும் நிலத்திற்கு அதிகபட்ச எல்லை வகுக்கப் போகிறார்களாம்! இந்த அதிகப்பட்ச நிலம் எவ்வளவு என்பதிலே காங்கிரஸ் தலைவர்களிடம் ஒருமித்த அபிப்பிராய மில்லை. ஐந்தாண்டுத் திட்டம் மூன்று குடும்பங்களுக்குத் தேவையான நிலம் ஒருவரின் அதிகபட்ச நிலமாக இருக்கவேண்டுமென்கிறது. ஹைதராபாத் சர்க்கார் ஐந்து குடும்ப நிலந்தான் அந்த எல்லை என்றுமுடிவுகட்டுகிறது. சென்னை சர்க்காரின் முடிவு எவ்விதமிருக்குமோ தெரியாது!

ஒருவரின் அதிகப் பட்ச நிலம் இவ்வளவு என்று வகுத்தபின் அதற்குமேல் ஒரு நிலப் பிரபுவைத் துள்ள நிலத்தை நஷ்டஈடின்றி எடுத்து விவசாயிகளுக்குப் பங்கிடப் போகிறார்களா? இல்லை. அந்த எல்லைக்குமேலுள்ள நிலத்தை மற்றவர்கள் விலைகொடுத்து வாங்கிக் கொள்ள வேண்டும். அல்லது சர்க்காரே அவர்களுக்கு நஷ்டஈடு கொடுத்து வாங்கி பணமுள்ளவர்களுக்கு விற்கும். இதை வாங்கக் கூடியவர்கள் யார்? நிலமில்லா விவசாயிகளா? இல்லை. போதிய நிலமில்லாத ஏழை விவசாயிகளா? இல்லை. கையில் பணமுள்ள பணக்கார விவசாயிகள் வாங்குவார்கள்!

இதுதான் பண்டித நேரு நமக்கு உறுதி கூறும் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நிலச்சீர்திருத்தம். கோடிக்கணக்கான விவசாயிகளின் ‘உறுதியையும், உற்சாகத்தையும், தன்னம்பிக்கையையும்’ திரட்டும் நிலச் சீர்திருத்தம் இதுவல்ல.

### இதுதானா படிப்பினை

பஞ்சாயத்துப் போர்டுகளை முதலாகக்கொண்டு இரண்டாவது திட்டத்தை வகுப்பதின்மூலம் மக்களின் உற்சாகத்தை வளர்த்துவிட முடியுமென்கிறார் நேரு. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் தோல்வியிலிருந்து அவர் படித்த படிப்பினை அவ்வளவுதான்.

இப்பொழுது பஞ்சாயத்துப் போர்டுகளும், நகரசபைகளும் போடுகின்றார்களே வருஷாந்திரத் திட்டங்கள்! இந்த ஊரில் இன்ன ரோடைப் பழுது பார்ப்பது இந்த இடத்தில் விளக்குக்கம்பம் ஊன்றுவது என்று பஞ்சாயத்து ஆபீசர்கள் நிர்ணயிக்கின்றார்களல்லவா!

இவைக[illegible] ஒவ்வொ[illegible] லாம் எ[illegible] தான் இ[illegible] திட்டம்[illegible] றார்கள்! [illegible] களின் ‘ரிட[illegible] லாம் திரட்[illegible] டாவது திட்[illegible] புத்தகங்களை [illegible]

கீழே இரு[illegible] போகும் நேருவ[illegible] தான்!

### மாற்றமில்ல[illegible]

இன்றைய ச[illegible] பின் அடிப்படை[illegible] றமுமில்லாத திட்[illegible] விவசாயிகளுக்கு [illegible] திட்டமல்ல. ஆங்கி[illegible] கப் போட்டியை த[illegible] மல்ல. பிரிட்டிஷ் [illegible] ஆதிக்கத்தை ஒழி[illegible] மல்ல. நமது நி[illegible] மன் தேஷ்முக்-பி[illegible] லாளிகள் இந்த [illegible] தடையின்றி சுரண்[illegible] மளித்துவிட்டார். [illegible] காமன்வெல்த் நிதி மந்[illegible] மகாநாட்டின் கூட்டு அறிக்கை அறிவிக்கும் உண்மை அது.

நம் பொருளாதார இரத்தத்தை உறிஞ்சும் காமன்வெல்த் பங்காளி உறவுக்கு முடிவு கட்டாது, விவசாயிகளுக்கு நிலத்தில் உரிமை உண்டாக்காமல், நசிந்துவரும் நம் தேசத் தொழில்களுக்கு தக்க பாதுகாப்பு கொடுக்க முன் வராது மக்களது ஆழ்ந்த விருப்பமான மொழிவழி மாகாண அமைப்பிற்கு மனப்பூர்வமான ஆதரவளிக்காது நம் மக்களிடையே உற்சாகத்தை உண்டாக்குவது பலம் வாய்ந்த இந்தியாவைக் கட்டுவது என்று பேசுவதெல்லாம் மக்களை ஏமாற்றும் பிரசாரமே தவிர வேறில்லை.

நம் தேசத்திற்கு ஏற்பட்டுள்ள ஆபத்தை காங்கிரஸ் தலைவர்கள் உணருவது உண்மையானால், இந்த உடனடி நடவடிக்கைகளை எடுக்க முன் வருவார்களா? கல்யாணியில் கூடிய காங்கிரஸ் இதற்கு வழி வகை செய்யவில்லை.

---

# ...ள்ளட்டும்

புகழ்பெற்ற புரட்சிக்காரர் சர்தார் பிரீதிவி சிங் ஆ[illegible]பார் சொற்பொழிவாற்றினர்.

சமாதான இயக்கத்திற்கு ஆதரவாக நாட்டில் ஏற்பட்டுவரும் தன்மை மாறுதலையும், சர்வதேச நெருக்கடியைத் தளர்த்துவதற்கும், உலக சமாதானத்திற்கும் ஆதரவாக சகல பகுதி மக்களையும் ஒரு பொதுவான மேடையில் திரட்டுவதற்கான சாத்தியப்பாடுகள் தோன்றியிருப்பதையும் கவுன்ஸில் [illegible]ம் குறிப்பிட்டது.

இந்தியாவின் [illegible]லா பாகங்களிலிருந்தும் பிர[illegible]கள் விஜயம் செய்திருந்தனர். [illegible]க சமாதான கவுன்ஸிலின் [illegible]யை சர்வ ஜனப் பகுதி[illegible]ரிடையேயும் பரப்புவதென்று[illegible] ஏப்ரலில் நடத்த உத்[illegible]சிக்கப்பட்டுள்ள மகாநாட்டில் எ[illegible]ப் பகுதி மக்களும் கலந்து[illegible]ள்ளச் செய்வதென்றும் உ[illegible]ண்டு உற்சாகமுடன் வே[illegible]பியுள்ளனர்.

உலக சமா[illegible]னக் கவுன்ஸிலுக்கு அங்கத்[illegible]ர்களாக இயக்கத்தின் முன்[illegible]ணியில் நிற்கும் 16 பேர் சிப[illegible] செய்யப்பட்டிருக்கின்றனர்.

---

# சென்னை மாணவர் சங்கத்தின் 14-வது மகாநாடு

## கலைகள் மலர, கல்வி சிறக்க, வேலை கிடைக்க,

## சமாதானம் நிலவ கிளர்ச்சி செய்வோம்

“கல்விச் செலவுக்காக மத்திய சர்க்காரின் பட்ஜெட்டில் 10 சதவீதமும், மாகாண பட்ஜெட்டில் 20 சதவீதமும் ஒதுக்கவேண்டுமென கோரியும், அதற்காகச் சமர்ப்பிக்கவிருக்கும் விண்ணப்பத்தில் சென்னை நகரில் 5000 கையெழுத்துகள் பிப்ரவரி 15-ம் தேதிக்குள் வாங்குவதென்றும்” சென்னை மாணவர் சங்கத்தின் 14-வது மகாநாட்டில் முடிவு செய்யப்பட்டது. மகாநாடு ஜனவரி 23ம் தேதியன்று ஸெயின்ட்-மேரீஸ் ஹாலில் நடைபெற்றது. பிரதிநிதிகள் கூட்டம் காலை 10 முதல் 12-30 வரை மஹாஜன சபாவிலும், மாலை 2-30 முதல் 5 வரை ஸெயின்ட்மேரீஸ் ஹாலிலும் நடைபெற்றது. 6 மணிமுதல் தோழர் கோபாலகிருஷ்ணன் தலைமையில் ஸெயின்ட்மேரீஸ் ஹாலில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

23-ம் தேதி 10 மணிக்கு பிரதிநிதிகள் கூட்டம் ஆரம்பமாயிற்று. பச்சையப்பன் கல்லூரி மாணவர் தோழர் குமாரன் உன்னி தலைமை வகித்தார். 40 பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். அகில இந்திய மாணவர் சம்மேளனத்தின் பத்திரிகையான ‘ஸ்டூடண்’டின் ஆசிரியர் தோழர் கோபாலகிருஷ்ணன், சமீபத்தில் அ. இ. மா. ச. கௌன்ஸிலின் முடிவுகள் பற்றிப் பேசினார்.

### கோபால கிருஷ்ணனின் வீரமுழக்கம்

கல்வித்துறையில் இன்றைய ஆட்சியாளர்கள் பின்பற்றும் கொள்கை பிரிட்டிஷ் அரசாங்கம் உருவாக்கிய கல்வி அமைப்பு முறையை அப்படியே பின்பற்றுகிறதாகத்தானிருக்கிறது என்று தோழர் கோபாலகிருஷ்ணன் கூறினார். படிப்புக்காகும் செலவுஉயர்த்தப்படுவது, கல்லூரி, பள்ளிகளில் அனுமதிக்கப்படும் மாணவர் எணணிக்கையை கட்டுப்படுத்துவது, வடிகட்டும் முறைகள் பல கையாண்டு ஆயிரக்கணக்கான மாணவர்களைத் தேர்வுகளிலே நிறுத்திவிடுவது, ஆசிரியர்களுக்கு அரைப் பட்டினிசம்பளமளிப்பதுபோன்றவைகள் யாவும் இக்கொள்கையின் ஒரு பகுதிதான். இவைகளையெல்லாம் தாண்டிபள்ளிகளில் சேர்ந்து படித்துப் பட்டம்பெற்று வருபவர்களுக்கோ வேலையெங்கும் கிடைப்பதில்லை. படித்து முடித்தபின் வேலையின்றி திண்டாடுவோரின் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே போகிறது. ஐந்தாண்டுத் திட்டத்தாலும் இந்நிலையை மாற்ற முடியவில்லை.

ஆனால் மாணவர்கள் இத்தகைய நிலையை பொறுமையுடன் ஏற்றுக்கொள்ளத் தயாராயில்லை. இப்பிற்போக்குக் கல்விக் கொள்கையின் பல்வேறு அம்சங்களை எதிர்த்து நாடெங்கும் போராட ஆரம்பித்துவிட்டனர். இந்தப் போராட்டங்கள் இதுகாறும் மாணவரியக்கம் பலவீனமாக இருந்த இடங்களிலெல்லாம்கூட பரவியுள்ளது என்று கூறினார். இவ்விதம் நாடெங்கும் வளர்ந்துவரும் போராட்டங்களைக் கண்டு அஞ்சிய ஆட்சியாளர்கள், மாணவர்களின் சாதாரண உரிமைகள்மீது கை வைக்க ஆரம்பித்துள்ளனர். கல்லூரி யூனியன்களுக்கிருந்த பல உரிமைகளைப் பறிக்க முயலுகின்றனர். இத்தாக்குதலை எதிர்த்துத்தான் மகத்தான லக்னோ மாணவர் போராட்டம் நடைபெற்றது; மற்றும் அலகாபாத், திருவனந்தபுரம் ஆகிய இடங்களிலும் இத்தாக்குதல்களை எதிர்த்து போராட்டங்கள் நடைபெற்றன.

### மாணவர் சங்கங்களின் கடமை

இந்தப் போராட்டங்களில் காணப்படும் ஒரு முக்கியமான அம்சம், பல்வேறு கருத்துக்களையுடைய மாணவர்க்ள் ஒன்றுபட்டு நின்றதாகும். நடைமுறையில், அன்றாடப் பிரச்னைகளுக்கான போராட்டங்கள் மூலம் கட்டப்படும் இந்த ஒற்றுமையை மேலும் பலப்படுத்தி, ஒன்றுபட்ட மாணவரியக்கத்தை கட்டமுடியும். இதற்கு வெறும் போராட்டங்களை மட்டும் நடத்தினால் போதாது. மாணவர் ஸ்தாபனம், மாணவர்களின் கோரிக்கைகள், உரிமைகளுக்காகப் போராடும் காலத்திலே, மாணவர்களின் இதர அபிலாஷைகள், எண்ணங்கள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கக்கூடிய நடவடிக்கைகளிலும் இறங்கவேண்டும் என்று தோழர் கோபாலகிருஷ்ணன் குறிப்பிட்டார். கலாச்சார, இலக்கிய, விளையாட்டு போட்டிகள் நடத்துவது மாணவர் சங்கங்களின் வேலைகளில் ஒரு பகுதியாகவேண்டும். மாணவர்களின் சகல நடவடிக்கைகளையும் தலைமை தாங்கி நடத்தும் ஸ்தாபனங்களாக மாற வேண்டும் மாணவர் சங்கங்கள்.

### அமெரிக்க-பாக் ஒப்பந்தத்துக்கு கண்டனம்

அதே சமயத்தில் உலக சமாதானத்தை நிலை நாட்டவும், காலனி நாட்டு வாலிபர்களுக்காதரவாகவும் மாணவர்களைத் திரட்ட வேண்டும். பாகிஸ்தான் - அமெரிக்க ராணுவ ஒப்பந்தத்தை எதிர்த்து மாணவர்கள் ஒன்று திரட்டப்பட வேண்டும். இப்படி பல்வேறு நடவடிக்கைகளின் மூலம் பலம்வாய்ந்த மாணவரியக்கத்தைக் கட்டவேண்டும். சென்னை மாணவர் சங்கம் மிகச் சிறந்த பாரம்பரையைக் கொண்டது. அதற்கொப்ப மீண்டும் அதைச் சிறந்த ஸ்தாபனமாக்க இம்மகாநாடு திட்டம் தீட்ட வேண்டுமென்று கூறிக்கொண்டு தன்சொற்பொழிவை முடித்தார் தோழர் கோபால கிருஷ்ணன்.

செயலாளரின் ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. ஆட்சியாளர்களின் கல்விக் கொள்கையைப் பற்றி விமர்சித்தபின், செ. மா. சங்கத்தின் ஓராண்டு நடவடிக்கைகள் பற்றியும், அதனுடைய பலவீனங்கள், மாணவர் சங்கத்தைப் பலப்படுத்துவதற்கான சில வழிகள் ஆகியவற்றைப்பற்றி இந்த ரிப்போர்ட் விரிவாக விளசகியது.

### மாணவர் கஷ்டங்கள்

மாணவர் பிரச்சினைகள் பற்றி

(11-ம் பக்கம் பார்க்க)

# நெசவு அரங்கத்திலே!

## ...பவர் கமிட்டி முன்

## ...என ஆலோசனைகள்

...சவாளர்களுக்கு ...றவப்பட்ட ஹை ...ங்கிக்கொண்டிருந் ...பின் மெம்பரான ...த்தசாரதி 13-1-54 ... மந்திரி கிருஷ்ண ...து கமிட்டி கூட்டம் ...று கேட்டு ஓர் கடித ...த்துள்ளார். அவசர 15-1-54 தேதி கமிட் ...டம் நடைபெற்றது.

### ...ங்கார் திட்டம்

... கூட்டத்தில் சர்க்கார் ...ஒரு குறிப்பு வைக்கப்பட் ... அதில் குறிப்பிட்டுள்ள ...ன விஷயங்கள் என்ன —

... திட்டத்தினுல் பலர் ...சைட்டிகளில் சேர்ந்திருக்கி றார்கள். நெசவு தொழிலாளி களுக்கு ஓர் பொந்து (knot)க்கு 6 அணு கூலி கொடுக்கப்படுகிறது. 12 மாதத்தில் திருப்பி கொடுக்க வேண்டுமென்ற நிபந்தனையுடன் 25 ரூபாய் அட்வான்ஸ் கொடுக்கப் படுகிறது. சொசைடி மெம்பர்க ளுக்கு சென்னை ராஜ்ய கூட்டுறவு பாங்க் மூலமாகவும், ஜில்லா கூட்டு றவு மத்ய பாங்குகள் மூலமாகவும் நூல்வாங்கவும் கூலி கொடுக்கவும் தறிக்கு ரூ. 65 அட்வான்ஸ் கொடுக்கப்படுகிறது. பலரும் சொசைடியில் சேர்ந்துகொண் டிருக்கிறார்கள்.

மத்ய சர்க்கார் செஸ்பண்டி லிருந்து 43,67.915 ரூபாய் கட னாகவும் ரூ. 46,65,359 கிராண்டா கவும் கொடுக்கிறார்கள். அதை நிறைவேற்ற கீழ்க்கண்டவாறு திட்டமிட்டிருக்கிறார்கள் :—

(1) 33,100 தறியாளர்களை மெம்பராக சேர்ப்பது. புது சொசைடியில் சேருபவர்களுக்கு ரூ. 18–12–0ம் பழய சொசைடி யில் சேருபவர்களுக்கு ரூ. 25ம் கடன் கொடுக்கப்படும். மொத்த செலவு ரூ. 34,28,498.

(2) சென்னை ராஜ்ய கூட்டு றவு சொசைடியை விரிவுபடுத்தி உள்நாட்டு மார்க்கட்டை பெருக் குவதற்காகவும், பிரச்சாரத்துக்கா கவும் ரூ. 9,56.745 செலவழிக்கப் படும்.

(3) டிசைன் மாற்றவும், புதிய முறை கண்டுபிடிக்கவும் எடுக் கும் நடவடிக்கைகளுக்காக ரூ. 3,04,884 செலவழிக்கப்படும்.

(4) 5 ரூபாயும் அதற்கு மேலும் சாக்கு வாங்குகிறவர்களுக்கு விலை குறைத்து கொடுக்கும்வகையில் ரூ. 33,10,000 செலவழிக்கப் படும்.

(5) புதிதாக ஆரம்பிக்கவிருக் கும் நூல் மில்லுக்கு (தென் கோடி ஜில்லாவில்) பங்கு 10 லட்ச ரூபாய்.

இதுதவிர சர்க்கார் டெக்ஸ் டைல் இன்ஸ்டிடூட்டுக்கு ரூ. 2,28,380, இந்திய கனடா கார்ப்பரேஷனுக்கு மாதிரி அனுப் பும்வகையில் 6 லட்சமும், மத்திய டிப்போவுக்கு சப்ளை செய்ய ரூ. 1,40,000. மற்றும் சென்னை மாகாண சொஸைடிக்கு கடனும் கிடைக்க மத்திய சர்க்காரின் உத் தரவு கோரப்பட்டுள்ளது.

முதல் திட்டம் 29-12-53ல் உத்தரவானது. இதை 1 மாதத் துக்குள் ஆரம்ப வேலைகளை அமுல் நடத்தமுடியுமென ரிஜிஸ்ட்ரார் அபிப்பிராயப்படுகிறார்.

இதுவே சர்க்காரின் ஆலோ சனை.

### நமது ஆலோசனை

இதையொட்டி கே. எஸ்- பார்த்தசாரதி ஓர் குறிப்பு எழுதிக் கொடுத்திருந்தார். அவர் கூறிய தாவது :

ரயான் திட்டம் வெற்றிபெற வில்லை. சில நிர்வாகஸ்தர்கள் போக்கும் இதற்கு காரணமாக விருக்கிறது. ஸ்டாக் விற்பனை யாவதற்கான உதவிகரமான திட்டம் சர்க்கார் கையில் இல்லை. சாயத்தைப்பற்றி உள் நாட்டில் பரிசீலனை செய்யும் இன்ஸ்டூட்டுகள் ஆரம்பிக்கப்பட வில்லை. இறக்குமதியாகும் சாயத் துக்கு விதிக்கப்பட்டிருக்கும் வரியை ரத்துப்பண்ணவில்லை, 50,000 ரூபாய் செலவில் சில நிபுணர்கள் (கைத்தறி பற்றித் தெரிந்தவர்கள்) வெளிநாடு சென் றுவர ஏற்பாடு செய்யவேண்டும். வெளிநாட்டு தலைநகர்களில் ஸ்டோர்கள் திறக்க வேண்டும். வெளிநாட்டிலிருந்து இறக்குமதி வரியின்றி கோரா வரவேண்டும்.

இப்பகுதிக்கு 20 லட்சம் ரூபாய் ஒதுக்குவது சிலாக்யமாகும்.

ஏற்கெனவே 50 ஆயிரம் புது தறி சேர்ப்பதற்காக இருந்த திட் டம் மாறக்கூடாது. இதற்கு 50 லட்சம் ஒதுக்கலாம். புது மார்க்கட் செலவு 5 லட்சம், டிசைன் மாற் றம் ஏற்பாட்டுக்கு 8 லட்சம்

ஒதுக்கலாம் சாம்பிளுக்கு 6 லட் சம் ஒதுக்குவது சரியல்ல. இத் திட்டம் அமுல் நடத்தும்போதே வேலையில்லாதோருக்கு நிவாரணப் பிரச்னையும் கவனிக்கப்படவேண் டும்.

இவையே பிரதான யோசனை கள்.

சென்னை ராஜ்யத்துக்கு 50 ஆயி ரம் தறிகள் என்று குறிப்பிட்டுள் ளோம் முன்பு. ஆந்திரா பிரிந்த பின் 33,100 ஆகியிருக்கிறது என்று விளக்கம் கொடுக்கப்பட் டது. கனடாவுக்கு பணம் அனுப் புவது சென்னையின் பொறுப்பல்ல மத்ய சர்க்காருடையது என்று சென்னை சர்க்கார் தரப்பில் கூறப் பட்டது.

மற்ற விபரங்கள் அடுத்த கூட் டத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டுள் ளது.

நிவாரணத்துக்கான பணம் சில விடுவதற்கு ஜில்லா ஆலோசனை போர்டுகள் கலெக்டர் தலைமையில் இயங்கும் நம் சம்மேளன பிரதி நிதிகள் அங்கம்வகித்து சம்மேள னம் கொடுத்துள்ள ஆலோசனை களை ஸ்தூலமாக வைக்கவேண்டு மெனவும் மேற்படி கமிட்டிகளில் அங்கம்பெற வேண்டுமெனவும் ஏற்கனவே கே,எஸ். பார்த்தசாரதி வேண்டிக்கொண்டுள்ளார்.

—கே. டி. கே.

## விலைகளை குறைத்துள்ளோம்

## கைத்தறி துணி வாங்குங்கள்!

மதுரை நகர் நெசவாளர் கூட் டுறவு சங்கங்களின் சார்பில் கிருஷ்ணபுரம் நெசவாளர் கூட் டுறவு சங்கத் தலைவர் ஸ்ரீ கே. ஆர். சுந்தரராமன் பொதுமக்களுக்கும் கைத்தறி ஆதரவாளர்களுக்கும் அறிவிப்பதாவது :—

இந்திய சர்க்கார் செஸ் உதவி நிதியிலிருந்து நம் மாகாணத் திற்கு 88 லட்சம் ரூபாய் கைத் தறி அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கியிருக்கிறார்கள். அதில் 33 லக்ஷத்து 10 ஆயிரம் ரூபாயை கூட்டுறவு சங்கங்களில் உற்பத்தி யாகும் கைத்தறி ஜவுளிகளின் விற்பனையை ஊக்குவிப்பதற்காக வேண்டி, சில்லரை விற்பனை விலை யின்பேரில் வாங்கி உபயோகிக்கும் பொதுமக்களுக்கு ரூபாய்க்கு ஒன் றரை அணு வீதம் தள்ளிக் கொடுத்து விற்பனை செய்ய வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள்..

ஆகையால் மதுரை நகரில் உள்ள சுமார் 2 ஆயிரம் நெசவா ளர்கள் வேலை செய்யக்கூடியதும் பல ரகங்கள் உற்பத்தி செய்யக் கூடியதுமான 13 கூட்டுறவு சங் கங்களிலும் உற்பத்தியாகும் ஜவுளி களில் சில்லரை விற்பனை விலை யின்பேரில் ரூபாய்க்கு ஒன்றரை அணு வீதம் தள்ளிக்கொடுத்து விற்கப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த விற்பனை முறை சர்க்கா ரின் அறிக்கைப்படி 15–2–54 தேதி வரையில்தான் அமுலில் இருக்கும். தவிர ரூ. 5 முதல் ரூ. 50 க்குள் வாங்குவோருக்குத் தான் சலுகை காட்டப்படும். ஆகையால் பொதுமக்கள் அனை வரும் இதை பயன்படுத்திக் கொண்டு கூட்டுறவு சங்கங்களில் முடிந்த அளவு கைத்தறி ஜவுளி களை வாங்கும்படி கோருகிறேன்.

## பொங்கல் நாளிலே தமிழர் சபதம்

தமிழ்நாட்டு உழைப்பாளி மக்க ளும் தமிழகத்துக்கு வெளியே சென்று வாழும் தமிழ் மக்களும், உழவர் தம் பெருநாளாம் பொங் கல் நாளன்று;

★ திரு-தமிழகத்தை தாய்த் தமிழகத்தோடு சேர்ப்போம்!

★ பாண்டிச்சேரி காரைக்காலை பிரஞ்சு ஏகாதிபத்தியத்திட மிருந்து மீட்போம்!

★ தமிழ்மொழியை ஆட்சி மொழியாக்குவோம்!

★ அரசியல் கைதிகளை விடு தலை செய்வோம்!

என்று வீரசபதம் ஏற்றார்கள்.

### திருச்சி

கட்சி சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் புதுக்கோட்டை பஞ் சாலைத் தொழிலாளர் சங்கத் தலை வர் ஆர். உமாநாத் ஐக்கிய தமி ழகம்பற்றி பேசினார். டி. பி. நட ராஜன் ஆரசியல் லாவணிக்கச்சேரி வெகு விமரிசையாக நடத்தினார்.

திருச்சி ஜில்லா கட்டிடத் தொழிலாளர்களுக்கு பாக்டரி சட்டம் அமுல் நடத்தப்பட வேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேறின.

### தென்திருப்பேரை

இவ்வூர் மக்கள் கலா மன்றத் தைச் சேர்ந்த வாலிபர்கள் ஐக்கிய தமிழக கோஷங்களை முழக்கிக் கொண்டு ஊர்வலம் சென்றார்கள். தோழர் ஆர். ஹரி செங்கொடி ஏற்றி பொதுக்கூட்டத்தில் பேசி னார். கூட்ட முடிவில் ஐயாப் பிள்ளை என்ற சிறு ஹோட்டல் காரர் ஊர்வலத்தில் கலந்துகொண் டவர்களுக்கு இனமாக சுக்குவெண் ணீர் அளித்து மகிழ்வித்தார்.

### மதுரை

சுப்ரமணியபுரம் ஜீவா படிப் பகத்தில் தலைவர் எஸ். பி. ஆண்டி தலைமையில் நகர மக்கள் கூட் டணி கவுன்சிலர் எம். குருசாமியும் கட்சியின் தமிழ் மாகாண கமிட்டி அங்கத்தினர். ஏ. பாலசுப்ரமணிய, படிப்பக செயலாளர் ஆர். சித்த னும் பேசினார்கள்.

★ பசுமலையில் தமிழ்ப் பெரி யார் திரு. வி. க. வாசகசாலை பொங்கல்தினத்தில் தோழர் கே. எஸ். குமார் தலைமையில் திறந்து வைக்கப்பட்டது. கட்சியின் சார் பாக தோழர்கள் சிவகுருநாதன், ஸ்ரீதரன் அவர்களும், சோஷ லிஸ்ட் கட்சியின் சார்பாக தோழர்கள் மாணிக்கம், சந்தானம், சுப்ரமணியம் முதலியவர்கள் பேசி னார்கள். பசுமலை பைக்காரா ரோடில் உள்ள பாழ்நிலங்களில் வீடில்லாத ஏழை தொழிலாளர் கள் கட்டியிருக்கும் வீட்டடிகளை உடனடியாக சர்க்கார் ஜாரி செய்துகொடுக்கவேண்டு மென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### பம்பாயிலே

மிஞ்சுவனங்கள் நிறைந்துசுகங்கள்
மிதந்துகிடந்திட்ட தமிழகத்தில்
பஞ்சமும்கொள்ளைப் பலவகை
நோய்களும்
மிஞ்சிவிட்டதொருகாரணத்தால்...

நமது தமிழ்மக்கள் பம்பாய்க் கும், கோலாருக்கும், மற்றுமுள்ள இடங்களுக்கு தமிழகத்தைவிட்டுச் சென்றார்கள். தமிழ் மக்கள் அனை வரும் தமது தாயகத்தில் சகல போகத்துடனும் வாழக் கூடிய நன்னாளை அவர்கள் எதிர்பார்த்துக் கொண்டேயிருக்கிறார்கள்.

பம்பாயில் தமிழர் சங்கம் (சயான் பகுதி) ஆதரவில், ரவுளி கேம்பில், சங்கத் தலைவர் ஒப். ராமஸ்வாமி தலைமையில் பொங்கல் தினம் விம ரிசையாகக் கொண்டாடப்பட்டது. திரு. ராமசாமி தலைமையில் பல்லா யிரக் கணக்கான தமிழர்கள் குடும் பம் குடும்பமாக பம்பாய்க்கு வந்து வாழ வழியில்லாமல் அவதியுறும் நிலைமையைச் சுட்டிக் காட்டி, ஒற் றுமையின் அவசியத்தை வலி யுறுத்தினர்.

உழவு, தொழில், வர்த்தகம், கலை, கல்வி ஆகிய அனைத்திலும் செழித்து நிற்கும் ஓர் இன்பத் தமி ழகத்தை, ஐக்கிய புதிய தமிழ கத்தை அமைப்பதற்காக தமிழ் மக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டுமென்று திரு. எம். டி, கிருஷ்ணசாமி, ஈரோடு நாச்சி முத்து, தொழிற் சங்கத் தலைவர் கே. பி. சங்கரலிங்கம், தாரா வி.கே. எம். கோபாலன், திருமதி பத்மா முதலியோர் சொற்பொழிவாற்றி னார்கள். சங்க செயலாளர் சிவசை லம், கனகசபாபதி ஆகியோர் தமி ழகத்தைச் சிறப்பிக்கும் பலபாடல் களைப் பாடினார்கள்.

### தங்கவயலிலே

கோலார் சாம்பியன் பிளாக் கமிட்டிகளின் சார்பில் தங்கவயல் தொழிலாளர்கள் பொங்கல் விழாவை மகத்தான சிறப்புடன் கொண்டாடினார்கள்.

ஜனசக்தி ஆசிரியர் தோழர் கே. முத்தையாவையும், தொழிற் சங்கத் தலைவர்களையும், பிளாக் கமிட்டிகளின் ஆர்கனைசர் தோழர் எஸ். சவரிதாஸ் வரவேற்றார்.

பத்தாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் திரண்டிருந்த பொதுக் கூட்டத்துக்கு சாம்பியன் தொழிற் சங்க உபதலைவர் தோழர் பி. தவமணி தலைமை வகித்தார். சாம்பியன் பிளாக் கமிட்டிகளின் பிரதிநிதிகளுக்கும் தலைவர்களுக் கும் மாலை அணிவிக்கப்பட்டது. சாம்பியன் தொழிற் சங்க காரிய தரிசி தோழர் கே. எஸ். வாசனும், மைசூர் சுரங்க தொழிற் சங்க தலை வர் தோழர் வி. எம் கோவிந்தனும் சாம்பியன் தொழிற் சங்க காரிய தரிசி தோழர் கே. பி. ஜார்ஜும் தங்கவயல் தொழிலாளர்களின் போராட்டங்களைப் பற்றியும், சீர் குலைவு வாதிகளை முறியடித்து, ஒற்றுமையைப் பலப்படுத்துவது பற்றியும் பலத்த கரகோஷத்துக் கிடையே பேசினார்கள்.

தோழர் கே. முத்தையா பேசு கையில் தங்கவயல் தொழிலா ளர்கள் கன்னட மக்களின் மொழி வழி ராஜ்ய கிளர்ச்சியில் பங்கு கொள்ள வேண்டு மென்றும் — தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலப்பிரபுத்வ ஒழிப் பின் மூலமும், தொழில் வளர்ச்சி மூலமுமே விமோசனம் பிறக்கு மென்றும்—மைசூர் சுரங்கம் ஒன் றில் மட்டுமே 60 கோடி ரூபாய் மதிப்புள்ள தங்கத்தை வெள்ளை யன் இங்கிலாந்துக்கு எடுத்துச் சென்றுவிட்டானென்றும், அப் படியிருந்தும் போனஸ், கூலி கிரேடு, சர்வீஸ் போன்ற கோரிக் கைகளைக் கொடுக்க மறுக்கிறா னென்றும்—மற்றும் ஐக்கிய தமி ழகம் பற்றியும், ஜனசக்தி பத்தி ரிகையை அதிகரிக்க வேண்டிய அவசியம் பற்றியும் பலத்த கர கோஷத்துக்கிடையே சொற் பொழிவாற்றினர்.

### காஞ்சிபுரத்திலே

தோழர் கே. தருமலிங்கம் தலை மையில் 18–1–54ல் நடைபெற்ற ஐக்கிய தமிழக பொதுக்கூட்டத் தில் தோழர்கள் முகவை ராஜ மாணிக்கமும், ஏ. வி, சேதுராம னும் ஐக்கிய தமிழக அவசியத் தைபற்றி சொற்பொழிவாற்றினர்.

### பெங்களூரிலே

பெங்களூரில் பொங்கல் தினத் தன்று உழவர்களின் நல்வாழ்வுப் போராட்டங்களை ஆதரிக்கவேண்டு மென்று தோழர் பி. ராமமூர்த்தி பேசினார். அவருக்கு மல்லேஸ் வரம் வாலிபர் சங்கத் தொண்டர் கள் அணிவகுப்பு நடத்தி வாழ்த் துக்கூறினார்கள்.

மற்றும் மைசூர் மில் தொழிலா ளர் சங்கமும், வள்ளுவர் வாலிபர் கழகமும், மற்றும் பல சங்கங்களும் தோழர் ராமமூர்த்திக்கு வரவேற் பளித்தன.



### அறிவிப்பு

தமிழ் நாடு விவசாய சங்கத் தின் நிர்வாகக் கமிட்டிக் கூட் டம் சேலம் ஜில்லா நாமக்கல் அருகிலுள்ள காளப்ப நாயக் கன் பட்டியில் பிப்ரவரிமாதம் 6, 7, 8 தேதிகளில் நடை பெறும். நிர்வாகக் கமிட்டி உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டு மெனக் கேட்டுக் கொள்ளு கிறேன்.

பி. ஸ்ரீனிவாச ராவ்,
பொதுக்காரியதரிசி,
தமிழ் நாடு விவசாயிகள் சங்கம்.

# சிவகங்கை தாலுகாவில

# ஏழை விவசாயிகளின் மீது

## எண் திசைத் தாக்குதல்

இவ்வருடம் அமோகமாக மழைபெய்துவிட்டது. எங்குபார்த்தாலும் வெள்ளம் கரைபுரண்டோடுகிறது. பயிர் பச்சைகளெல்லாம் செழித்தோங்கி, உணவுதானிய உற்பத்தி பெருகி, விலைவாசி குறைந்து எல்லோரும் இவ்வருடம் வயிருரச் சாப்பிடுவார்கள் என்றெல்லாம் திண்ணை வேதாந்திகள் பேசுகிருர்கள். ஆனல், உண்மைநிலை யென்ன?

### 1. பருவமழைக் கோளாறு

ஏதோ மழைபெய்தது உண்மை. வெள்ளம் கரைபுரண்டோடியதும் உண்மைதான். ஆனல், பருவ மழைக்காலங்களான ஆடி, ஆவணி மாதங்களில் மழைபெய்யாததன் காரணமாக, புழுதி விதைப்பு, நெல், கம்பு, கேழ்வரகு, வரகு, குதிரைவாலி அனைத்தும் நாசமாகிவிட்டன.

### 2. ஏமாற்றம்

பருவமழை தவறியதால் இவ்வருடமும் சென்றவருடம்போல் மழையில்லாது போய் விடுமோ எனப் பயந்து நஞ்சை நிலங்களில் புஞ்சை தானியங்களான, கேழ்வரகு, குதிரைவாலி, கம்பு, பயிர் செய்யப்பட்டன. நெல் தானியம் இளம் வித்துக்கள் பயிரிடப்பட்டன. தொடர்ச்சியாகப் பெய்த பின் மழையின் காரணமாக, இந்தப் [illegible]பயிர்களும் பெரிதும் நாசமடைந்துவிட்டன.

### 3. கண்மாய், கால்வாய், கோளாறு

ஒரேயடியாகப் பெருக்கெடுத்தோடிய தண்ணீரைத் தேக்கி வைப்பதற்கான முறையில், கண்மாய், கால்வாய்கள் மராமத்துச் செய்யப்படாததன் காரணமாக, ஒன்று கண்மாய், கால்வாய் உடைப்பின்மூலம் தண்ணீர் நஷ்டம். இரண்டாவது, கண்மாய், கால்வாய் கரைகள் பலவீனத்தால் போதுமான தண்ணீர் தேக்க முடியவில்லை. இதன் காரணமாகத் தண்ணீர் பற்ருக்குறை.

### 4. உரம், எரு, விதை, ஏர்மாடு இல்லை

கிராமங்களில் சென்ற வருடம் ஏற்பட்ட பஞ்சத்தின் காரணமாக, மாட்டுச்சாணம் முழுதும் வரட்டி (எரு)யாக்கி விற்று ஜீவனம் செய்தார்கள். ஆடு, மாடுகளை விற்று ஜீவனம் செய்தார்கள். விதை வித்துக்களையும்கூட சாப்பிட்டு விட்டார்கள். இதன் காரணமாக, நிலங்களுக்கு உரம் வைக்கமுடியவில்லை. பெருவாரியாக விவசாயிகளுக்கு, உழுவதற்கு மாடு, விதைப்பதற்கு விதை இல்லாததன் காரணத்தால் பெருவாரியான நிலங்கள் தரிசு, அல்லது கொஞ்சகஞ்சம் கடன் வாங்கிக் காலம் கடந்து பயிர் செய்யப்பட்டது. இதன்மூலம் சாகுபடி பாதிக்கப்பட்டுள்ளது.

### 5. பயிரில் பூச்சி

எல்லாவற்றிற்கும் மேலாகப் பயிரில் வேர்ப்பூச்சி, குருத்துப்பூச்சி விழுந்து, பயிர்களை நாசப்படுத்தி விட்டன. கதிர்பரியும் வயல்களை நோக்கும்பொழுது, நாணல்பூத்தது போன்று வெண்மையாகத் தோற்றமளிக்கிறது.

### 6. விவசாயி கடன், பயிரிலே அடகு

பயிர்செய்த உடனேயே, விளைந்துவிடும் என்ற நம்பிக்கையில், பயிரையே லேவாதேவிக்காரனிடம் அடகுவைத்து 54 படி கொண்ட கலம் ஒன்றுக்கு ரூ. 10, 12, வீதம் வாங்கி ஜீவிக்கிருர்கள். விளைந்தவுடன் ரூ. 10-க்கு 54படி நெல் அளந்துவிட வேண்டும்.

### 7. தானியவிலை நிர்ணயமில்லை

சர்க்கார் உணவு தானிய விலையை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்வதற்கு பதிலாக, விலை நிர்ணயமும், கொள்முதலும், வியாபாரச் சூதாடிகளிடம் விடப்பட்டு விட்டதால் விவசாயிகள் தங்கள் அவசரத் தேவைகளுக்காக வியாபாரிகள் நிர்ணயிக்கும் குறைந்த விலைக்கு தானியத்தை விற்பனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. இதனல், இதர வாழ்க்கைப் பண்டங்களின் உயர்ந்த விலைக்கு ஈடுகட்ட முடியாமல் விவசாயிகள் திண்டாடும் நிலை ஏற்பட்டுள்ளது.

### 8. வரி வசூல் கெடுபிடி

கதிர் விளைந்து அறுவடையாகு முன்னமேயே அதிகாரிகள், விவசாயிகள்மீது, டிமாண்டு, ஜப்தி நோட்டீஸுகள் அனுப்பி, பழைய பாக்கிகளையும் நடப்பு பசலி வரியையும் நிர்பந்தமாக வசூலிக்கும் பொழுதே தானியத்தைக் குறைந்த விலைக்குப் பேசி வியாபாரிகளிடம் பணம் வாங்க வேண்டிய நிர்ப்பந்தம், இவ்வாருக ஏழை விவசாய மக்கள்மீது நெருக்கடி எட்டுத் திக்குகளிலிருந்தும் தாக்குகின்றன.

### இந்த நிலையிலே

(1) சர்க்காரால் நடத்தப்படும் விவசாய இலாகாவின் மூலம் எல்லா விவசாயிகளுக்கும், விதை, உரம், பூச்சி மருந்து சப்ளை செய்யப்பட்டதா? இல்லை.

(2) சர்க்கார் கடன் உதவி, எல்லா விவசாயிகளுக்குமே கிடைத்ததா? இல்லை.

(3) சகல கண்மாய், கால்வாய்களையும் செப்பனிட சர்க்கார் பொருப்பேற்றுள்ளதா? இல்லை.

(4) எல்லா விவசாயிகளும், சர்க்கார் கடன் உள்பட கடன் தொல்லை, வரிவசூல் கெடுபிடியிலிருந்து மீள கடன் ஒத்திவைப்புச் சட்டம் வழிவகை செய்துள்ளதா? இல்லை.

### நெருக்கடியிலிருந்துமீள தமிழ்நாடு விவசாயிகள் சங்கம் வழி காட்டுகிறது

1. சர்க்காரால் நடத்தப்படும் விவசாய இலாகா மூலம் விவசாயிகளுக்கு உரம், விதை, பூச்சி மருந்து சகாயமாகவும், துரிதமாகவும் வழங்குக!

2. சகல விவசாயிகள் மீதும் உள்ள சர்க்கார் கடன் உள்பட எல்லா விதமான கடன்களையும் 3 வருடத்துக்காகிலும் ஒத்தி வைக்கவேண்டும்,

3. கிராமாந்திர விவசாயிகள் பட்டுள்ள கடன்களை பரிசீலிக்க உடனடியாக ஒரு நிபுணர் கமிட்டியை ஏற்படுத்துக!

4. உடனடியாக எல்லா விவசாயிகளுக்கும் குறைந்த வட்டியில் கடன் வழங்குக!

எனக் கிராமங்கள் தோறும் விவசாயிகள் சங்கங்கள் அமைத்துக் கிளர்ச்சியிலிறங்க வேண்டியது உழைத்திடும் விவசாய மக்களின் உடனடிக் கடமையாகும்.

எஸ். எஸ். ராமன்,
உதவி காரியதரிசி,
விவசாயிகள் சங்கம், கீழ்ப்பசளை.

# அக்கிரம மிராசுதாருக்கு போலீஸின் உதவி

பாபனசம் தாலுகாவைச் சேர்ந்த களத்தூர் கிராமத்தில் உள்ள மிராசுதார் சூரியகாந்தம்மாள் அவருடைய தம்பி சாமிநாத வாண்டையார் இவர்களுக்குச் சொந்தமான 9 ஏக்கர் நிலத்தை களத்தூரில் உள்ள நடராச மழவருயர் என்பவர் பல வருடங்களாக சாகுபடி செய்து வந்தார். இவ்வருடம் சாகுபடி ஆரம்பகாலத்தில் சாகுபடிக்காரரை நிலத்திலிருந்து வெளியேற்றுவதற்கு மேற்படி மிராசுதார் கன்சிலேசன் கோர்ட்டு, ரெவின்யூ கோர்ட் மூலம் நடவடிக்கை எடுத்தார். ஆனல் இரண்டு கோர்ட்டுகளிலும் சாகுபடிதாரரை நிலத்திலிருந்து வெளியேற்றக்கூடாது என்று தீர்ப்பளிக்கப்பட்டது. அதன் பிறகு என்போர்சுமெண்டு ஆபீசர் மேற்படி நிலத்தை சாகுபடிகாரரிடத்தில் வசப்படுத்திக் கொடுத்தார். சாகுபடிக்காரர் இவ்வருடம் சாகுபடி செய்திருந்த நிலத்தை மேற்படி மிராசுதார் கடந்த 9-1-54ல் வெளியூர் அடியாட்களுடன் வந்து 7 ஏக்கர் நிலத்தை பச்சையாகவே அறுவடை செய்து விட்டார். இதைக் கேள்வி[illegible]யுற்றவுடன் சாகுபடிதார் [illegible] மறுநாள் மீதம் உள்ள சுமார் 2 ஏக்கர் நிலத்தில் உள்ள மகசூலை [illegible] அறுவடை செய்தார். மிராசு[illegible]தாரரின் இந்த நடவடிக்கை[illegible] சிலேசன் [illegible] விசாரிக்க கன் [illegible] கோர்ட்டில் சாகுபடிதாரர் [illegible] மனு தாக்கல் செய்துள்ளார். இந்த நிலைமையில் மேற்படி மிராசுதாரர் தான் சாகுபடி செய்த நிலத்தை சாகுபடிதார் கொள்ளை அறுவடை செய்துவிட்டதாக கம்பெளண்டு ஒன்றை வலங்கைமான் போலீசில் தாக்கல் செய்திருக்கிருர். அதன்பேரில் வலங்கைமான் போலீசார் சாகுபடிதார் இல்லாத சமயத்தில் அவர் வீட்டில் புகுந்து சுமார் 6 மூட்டை நெல்லை எடுத்துக்கொண்டு போனதுடன், மிராசுதாரின் நடவடிக்கையைத் தெரிவிக்க போலீஸ் ஸ்டேஷனுக்கு சென்றபொழுது சப் இன்ஸ்பெக்டர் சாகுபடிகாரரை சிறைப்படுத்தி இருக்கிருர்.

குதிரை கீழே தள்ளியதுமின்றி, குழியையும் பறித்ததாம். அதைப்போல அக்கிரமமாக சாகுபடிதாரின் மகசூலை அறுத்துச் சென்ற மிராசுதார்மீது நடவடிக்கை எடுப்பதற்கு பதிலாக, ஏழை சாகுபடிதார்மீதே வலங்கைமான் போலீஸ் வழக்குத் தொடர்ந்துள்ளது. சங்கக் காரியதரிசி, மற்றும் எட்டுப் பேர்மீதும் வழக்கு தொடரப் பட்டுள்ளது.

வலங்கைமான் போலீஸின் அக்கிரமத்தையும், மிராசுதாரின் அட்டூழியத்தையும் கண்டித்து, அதற்கு எதிராக சகல விவசாய மக்களையும் விவசாய சங்கம் ஒன்று திரட்டி வருகிறது.

# ஸ்ரீபெரும்பூதூர் தாலுகா விவசாயிகள் கோரிக்கை

சைதாப்பேட்டை, ஸ்ரீபெரும்பூதூர் தாலுக்கா, விவசாய சங்க ஊழியர்களின் முக்கியஸ்தர்கள் [illegible] கூட்டம் 3-1-5[illegible] [illegible] ம்துரை கோரலில் திரு. கே. எஸ். பார்த்தசாரதி அவர்கள் தலைமையில் தாம்பரம் கந்தசாமித் தேவர் கட்டிடத்தில் கூடியது. 35 பிரதிநிதிகள் கலந்துகொண்டார்கள். தாலுக்காவின் பல பாகங்களில் இருந்து வந்திருந்தனர்.

இரண்டு தாலுக்காக்களிலும் கிராமந்தோறும் விவசாய சங்கங்கள் அமைக்க வேண்டுமென்றும், அவைகள் தமிழ்நாடு விவசாய சங்கத்தின் கீழ் வேலை செய்வதென்றும், மேற்படி சங்கங்களை அமைக்க தாலுக்கா விவசாய சங்க ஆர்கனைஸிங் கமிட்டி 11பேர்களைக்கொண்டு நிறுவப்பட்டது. எஸ். ஆர். நடராசன் தலைவராகவும், கே. பொன்னுசாமி காரியதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இரண்டுமாதங்களுக்குள் தாலுக்கா விவசாயிகள் மாநாடு ஒன்று நடத்த முடிவு செய்தது.

பல ஆண்டுகளாக மழையில்லாமல் இந்த ஆண்டு மழை பெய்தும் விவசாயிகளுக்கு போதிய அளவுக்கு உபயோகப்படவில்லை. ஆகவே, (1) ஏரிகள் மராமத்து செய்ய வேண்டும் என்றும் (2) தூர்ந்துவிட்டிருக்கும் வாய்க்கால்களை செம்மைப்படுத்தி தரவேண்டும் என்றும் மேற்கொண்டு நீர்ப்பாசன வசதி செய்துதர வேண்டு[illegible] றும், விவசாய கடன் [illegible] [illegible] ஒத்திவைப்பு மசோதாவை ஐந்தாண்டுக்குநீடிக்க வேண்டுமென்றும், வார குத்தகைதாரர்களுக்கு இந்தக் கடன் மசோதா உதவி அளிக்கும்படி திருத்த வேண்டுமென்றும், பத்து ரூபாய்க்குமேல் வரி செலுத்துவோருக்குத் தக்காவி கடன் வசதி அளிக்கப்படும் என்ற முறையை மாற்றி ஏனைய பட்டாதாரர்களுக்கும், வார, குத்தகைதாரர்களுக்கும், மேற்படி கடன் வசதியை செய்துதர வேண்டுமெனவும், தஞ்சாவூர் பண்ணையாள் விவசாயி பாதுகாப்புச் சட்டத்தை இந்த தாலுக்காக்களுக்கும் விஸ்தரிக்க வேண்டுமெனவும் சர்க்காரை கேட்டுக்கொண்டது.

இந்த தாலுக்காக்களில் பூச்சி அரிப்பின் காரணமாக விவசாயம் கெட்டுவிட்டது. விவசாய இலாக்காவால் சப்ளை செய்யப்படும் மருந்து இந்த தாலுக்காக்களில் போதிய உதவி அளிக்கவில்லை என்று சர்க்கார் கவனத்திற்கு கொண்டுவந்தது. சர்க்கார் நிர்ணயித்த அளவுக்காவது விவசாயக் கூலியை உயர்த்த வேண்டுமென்றும் தற்போது கொடுக்கப்படும் ஆணுக்கு 8 அணு, பெண்ணுக்கு 4 அணு 6 அணுவால் எந்த மனிதனும் வாழ முடியாது என்பதை இக்கூட்டம் எடுத்துக்காட்டியது.

## விவசாய சங்கக் கூட்டங்கள்

### கள்ளப்புலியூர்

ஜனவரி 10ம் தேதியன்று திரு சதாசிவ படையாச்சியார் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தோழர்கள் ஏ. பாலு, வி. குருசாமி, டி. எஸ். சோமுராவ் முதலியோர் சொற்பொழிவாற்றினர். விவசாய மக்களிடையே ஒற்றுமையைக் கட்டிவளர்த்து, விவசாய சங்கத்தை பலப்படுத்த வேண்டிய அவசியத்தை வற்புறுத்தினர். கே. மாரிமுத்துநயினரைத் தலைவராகக்கொண்ட ஒருவிவசாய சங்க ஆர்கனைஸிங் கமிட்டி அமைக்கப்பட்டது.

## வரப்பெற்ருேம்

காலண்டர்கள்: தோழர்கள் ஏ.கே. கோபாலன், பி. ராமமூர்த்தி, ஜீவானந்தம் ஆகியவர்களின் தனித்தனி போட்டோக்களுடன் அழகான காலண்டர்கள் வரப்பெற்ருேம்.

இவற்றை, உத்தம பாளையம் விவசாய சங்க ஊழியர் பி. உசேன் மீரும், வண்டிப்பெரியார் வி. அப்துல் வஹாதும் வெளியிட்டிருக்கிருர்கள். விலை 4 அணு.

கிடைக்குமிடம்: பீப்பிள்ஸ் புக் ஸ்டால், 29-A, கிளாஸ்கார தெரு, மதுரை.

## பொங்கல் மலர்கள்

சக்தி: அழகான அட்டைப் படத்துடன் வெளிவந்திருக்கிறது இதில் உயிர்பெற்ற தமிழர் பாட்டு என்ற தலைப்புடன், கவிச்சக்கரவர்த்தி சி. சுப்ரமண்ய பாரதியார் எழுதிய இதுவரை வெளிவராத பாடல் ஒன்று வெளியாகியிருக்கிறது. மற்றும் தோழர் பி. ராமமூர்த்தி, மணலி கந்தசாமி, காலக்கோலன், வெ. ராமசாமி, ஜே.சி. குமரப்பா, வையாபுரி பிள்ளை முதலியவர்கள் எழுதிய முக்கியமான கட்டுரைகளும் வெளியாகியிருக்கின்றன.

நீதி: பொள்ளாச்சி விவசாய சங்க ஊழியர் நடராஜன் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து உணர்ச்சி மிகுந்த தலையங்கமும், பிரஞ்சு ஏகாதிபத்தியம் வெளியேறவேண்டும், அமெரிக்க ஆக்ரமிப்பு ஆகியவை பற்றிய சிறந்த கட்டுரைகளும் நீதியில் வெளியாகியுள்ளன.

கைத்தறி: கோவையிலிருந்து வெளிவரும் "கைத்தறி" பொங்கல் மலரில், சேலம் ஜில்லாவை விட்டு 50 ஆயிரம் கைநெசவுத் தொழிலாளர்கள் வெளியேறியிருப்பதாகவும், கூட்டுறவு சொஸைடிகளைப் பற்றியும் பல விபரங்கள் வெளிவந்துள்ளன.

இமயம்: தோழர் ஜீவாவின் ஐக்கிய தமிழக கட்டுரையும், மற்றும் பல்வேறு கட்சித் தலைவர்களின் கட்டுரைகளையும் தாங்கி வெளிவந்திருக்கிறது.

உமா: அழகிய அட்டைப் படத்துடன் நாடறிந்த எழுத்தாளர் பலரின் கட்டுரைகளுடன் வெளிவந்திருக்கிறது.

கிளர்ச்சி: தி. மு. க. எழுத்தாளர்கள் பலர் எழுதிய கட்டுரைகளுடன் வெளி வந்திருக்கிறது.

## வாடியக்காடு

பட்டுக்கோட்டை தாலுக்கா வாடியக்காட்டில் தோழர் பி. மாணிக்கம் தலைமையில் 31-12-53 அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் விவசாய சங்கம் ஆரம்பிக்கப்பட்டது. எம். வைத்திலிங்கம் விவசாய சங்கவேலைகளைப் பற்றி சொற்பொழிவாற்றினர். தோழர்கள் மாணிக்கம் சோழகர் தலைவராகவும், ஆர். கோவிந்தராஜன் காரியதரிசியாகவும், ஆ. சதாசிவம் பொக்கிஷதாராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

# கடனுதவியா? கண்துடைப்பா?

களையெடுப்பு முதலிய செலவுகளுக்காக சர்க்கார் கொடுப்பதாகக் கூறும் தக்காவிக் கடனின் உதவாக்கரைத் தன்மையை நன்கு விளக்க கீழ்வரும் ஒரு உதாரணமே போதுமானது.

பத்து ரூபாய்க்குக் குறைந்த தீர்வை செலுத்துபவர்களுக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 5 வீதம், 4 ஏக்கருக்கு ரூ. 20 தக்காவிக் கடன் கொடுக்கமுடியுமென திருநெல்வேலி ஜில்லா, வாசுதேவநல்லூர் ரெவின்யூ இன்ஸ்பெக்டர், கூட்டம் கூட்டமாக மகஜர் கொடுக்க வந்த விவசாயிகளிடம் அறிவித்தார். கூட்டுப்பட்டாவிற்குக் கிடையாது என்றும், தனிப் பட்டாவிற்குத்தான் கடன் கொடுக்கமுடியுமென்றும் கூறினர்.

ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கூறிய சர்க்கார் சட்டப்பிரகாரம் பார்த்தால் வாசுதேவநல்லூர் பிரதேச விவசாயிகளில் மிகப் பெரும்பாலோருக்கு கடனே கிடைக்காது. ஏனெனில் ஜமீன் பிரதேசமாகிய இங்கு, ஏக்கர் ஒன்றுக்கே ரூ. 35க்குமேல் தீர்வை இருக்கிறது. அதுமட்டுமின்றி தனிப்பட்டாவைப் பார்ப்பதே துர்லபம். எல்லாம் கூட்டுப் பட்டாதான். ஆதலால் 100 பேர் மனுக் கொடுத்ததில் 6, 7 பேருக்குக்கூட கடன் கிடைக்குமோ என்பது சந்தேகமாயிருக்கிறது.

இந்தக் கண்துடைப்பு நிலைமையை மாற்றவேண்டும். தனிப் பட்டா இருந்தாலும் இல்லாவிட்டாலும், மகசூல் செய்திருக்கும் சகல விவசாயிகளுக்கும் உடனடியாகக் களையெடுப்புக் கடன் கொடுத்துதவ சர்க்கார் முன்வர வேண்டும்.

# மொழிவழி மாகாணங்கள் உடனே அமையுங்கள்!

## கவிமணி தேசீக விநாயகம் பிள்ளையின் அறைகூவல்

எங்குப் பார்த்தாலும் மொழிவாரியாக மக்கள் இணைந்திருப்பதைக் காண்கிறோம். பாரதத்தின் தென்னெல்லையில் மூன்று கோடி தமிழர்களும் சேர்ந்தாற்போலவே வாழ்கின்றார்கள் மேல் கடற்கரையில் 120 லட்சம் மலையாளிகளும் அங்ஙனமே வாழ்கிறார்கள். ஆந்திர நாட்டிலும். ஐதராபாதிலுமாக மூன்று கோடித் தெலுங்கர்கள் ஒரே பரவலாக இருப்பதைக்காணலாம். கன்னடர்களும் அப்படி. மராத்தியர், சௌராஷ்டிரர், பஞ்சாபியர், வங்காளிகள் முதலிய அனைவரும் கோடுகீறி அடைக்கத் தகுந்தவாறு இணைந்துதான் வாழ்கிறார்கள். இந்த அமைப்பு யாரேனும் வலுக் கட்டாயமாக கூட்டி வைத்த கூட்டமைப்பா? இல்லவே இல்லை. இவர்கள் நாடும் மொழியின் பேரால்தானே அழைக்கப்படுகிறது! மொழியினடியாக நாடு பெயர்பெற்றதே, அன்றி நாட்டினடியாக மொழி பெயர் பெற்றதாக நாம் அறியோம்; நாடும் மொழியும் மிகமிக நெருங்கிய தொடர்புடையவை என்பது மட்டும் உறுதி. ஆகவே மொழினடிப்படையில் மக்கள்கூடிவாழ வழி வகுத்துக் கொடுப்பது அவர்கள் நலனுக்கும் அதன்மூலம் இந்தியாவின் நலனுக்கும் இன்றியமையாததல்லவா?

மொழிவாரி மாகாணத்தால் பிளவுகள் உண்டாய்விடும் என்று சிலர் சொல்லுகின்றார்கள். இது சுத்தத் தப்பு; வேண்டுமென்று கூறும் சாக்குப்போக்கு மொழி மக்களை ஒன்றுபடுத்துமா, வேறுபடுத்துமா எனபதைப்பற்றிச் சர்ச்சை செய்யும் நிலையிலேதான் நாம் இன்றும் இருக்கிறோம். ஆனால் மொழிப் பொதுமையினால் மக்களை ஒன்றுபடுத்தமுடியுமென்பதையும், மொழிக் குலைவினால் அவர்களுக்குள் வேற்றுமை வளர்க்கலாம் என்பதையும் ஆங்கிலேயர்கள் பன்னூறாண்டுகளுக்கு முன்னரே நன்கு உணர்ந்திருந்தார்கள். அவர்கள் இந்நாட்டிலாண்ட 150 வருட ஆட்சிக்குத் துணைநின்றது ஆங்கில மொழி. அதற்குத்தான் அவர்கள் முதலிடம் கொடுத்தார்கள். நாட்டு மொழிகள் பேணப்படவில்லை; அவை ஒடுக்கப்பட்டன. அவற்றுக்கு இழிவு கற்பிக்கப்பட்டதுமின்றி ஒரு மொழி பேசும் மக்கள் ஒன்றுபட்டிராவண்ணம் அவர்கள் நாடு கைவேறு கால்வேறாகத் துண்டிக்கப்பட்டன. மூன்று மொழி, நான்கு மொழி பேசுவோர்கூட ஒரே கூட்டமைப்புக்குள் இருந்தார்கள். அவர்களை இறுக்கிப் பிணைத்து நின்றது ஆங்கில மொழி. இன்று அந்தக் கட்டு அவிழ்ந்துவிட்டது. என்றாலும் அவர்கள் தம்மவர்களோடு சேர்ந்து வாழ வகையில்லை.

### விந்தை! விந்தை!!

அன்று தேச ஒற்றுமைக்கும், அதன் மூலம் விடுதலைக்கும் பாடுபட்ட காங்கிரஸ், ஆங்கிலேயரின் பிரித்தாளும் சூழ்ச்சி கண்டு உள்ளம் குமுறியது; கசிந்துருகிக் கண்ணீர்விட்டது. சுதந்திரம் கிடைத்தால் முதல் வேலையாக மொழிவழி மாகாணங்கள் அமைக்கப்படும் என்று தீர்மானம் கொணர்ந்து நிறைவேற்றியது. அதன் தொடக்கச் சடங்காக நாடு முழுமையும் மொழிவாரியாகக் காங்கிரஸ் கழகங்களை நிறுவியது. காந்தியடிகளும் மொழிவழி மாகாணத்தின் இன்றியமையாமையைப் பலபடக் கூறியுள்ளார். இவற்றை எல்லாம் மக்கள் மறந்துவிடவில்லை. ஆனால் சில தலைவர்களோ யாவும் மறந்து பேசுகின்றார்கள். மறந்தவர்களுக்கும் மறவாதவர்களுக்கும் சில மோதல்கள்; சந்தி சிரிக்கும்படி மோதல்கள். என்ன விந்தை!

இப்போது மாகாணங்களை மாற்றியமைக்கத் தொடங்கினால் பெரும் கஷ்டங்கள் ஏற்படுமாம். ஆம்; உண்மை. கஷ்டங்களுக்கு அஞ்சிக் செய்யத் தகுந்தவற்றைச் செய்யாமலிருப்பதா? பிள்ளைப்பேறு கஷ்டமானதுதான். அதற்காக மணம் செய்துகொள்ள விரும்பாதவர் உண்டா? ஆட்சி பீடம் ஒருபோதும் ஒரு பூம் படுக்கையாக இருந்ததில்லை; இராது. கஷ்டங்களில்லாத இன்பநிலையமாக அரசாங்கம் இருக்குமானால் அதை நடத்த நம்மூரிலுள்ள குப்பனும் சுப்பனும் போதுமே. அரும்பெரும் தலைவர்கள் எதற்கு? ஆராய்ந்து துணிதலும், துணிந்து துணிந்த செயலில் வரும் துன்பத்தை விலக்குதலும், விலக்கரும் துன்பமுடையதாயின் தம் நுண்ணறிவால் அத்துன்பத்தின் அளவைக் குறைக்க முயலுதலும், இல்லை—இமயமலை போன்ற துன்பமே எதிர்ந்தது எனினும் பின்னிடாது நிற்றலும், மேற்கொண்ட செயலில் வெற்றி காணுதலும் போன்ற அளப்பரும் ஆற்றல்கள் அமையப்பெற்றவரே மாபெரும் தலைவர்கள். நிலமாளும் தலைவர்க்கு அஞ்சாமை, ஈகை, அறிவு. ஊக்கம், தூங்காமை, கல்வி, துணிவுடைமை என்னும் இயல்புகள் இருக்கவேண்டும் என்று கூறுகின்றார் திருவள்ளுவப் பெருந்தகையார்.

### நான் சொல்கிறேன்

நாம் செய்த பாக்கியத்தால் நம் தலைவர்கள் இத்தகைய நல்லியல்புகள் வாய்க்கப் பெற்றவர்கள் என்பதற்கு எள்ளளவும் ஐயமில்லை என்பது மட்டுமல்ல, அவர்கள் தியாகத்தீயில் மூழ்கிக் குளித்தவர்கள்; எத்தனையோ பனிப்புயல்களை எதிர்த்து நின்றவர்கள்; தீயாறுகளைத் தாண்டியவர்கள் இவர்கள் மொழிவாரி மாகாணப் பிரிவினையில் இன்னல்கள் நேர்ந்துவிடும் என்று அஞ்சுவதுதான் மிக்க வியப்பாக இருக்கிறது. என் சொல் இவர்கள் செவிக்கு எட்டுமானால் நான் சொல்வது இதுதான்:

"இன்றைய மாகாண அமைப்பைக் கலைக்கத் தயங்காதீர்கள். நடுநிலை பிறழாத எல்லைக் கமிஷனை நியமித்து, குறைந்த அளவுக் கஷ்டங்களுடன் மொழிவழி மாகாண அமைப்பினை உடனடியாக நடைமுறைக்குக் கொண்டு வாருங்கள். அல்லாமல் பொட்டி ஸ்ரீராமுலு போன்ற தேசபக்தர்களைப் பலிகாணாதீர்கள். ஆந்திர மாகாணப் பிரிவினைக்குப் பின்னும் மொழிவழி மாகாணங்கள் அமைக்கத் தயங்குவது ஏன்? மக்கள் உள்ளங்களில் வேரூன்றிவிட்ட மொழிவழி மாகாண உணர்ச்சியை அடக்க எந்தச் சக்தியாலும் முடியாது. மக்கள் விருப்பத்தை மதித்து அதற்கொரு தீர்வு காண நீங்கள் பிந்தினால் பிற கட்சிகள் இந்தப் பிரச்சினையை எற்றெடுப்பதின்மூலம் மக்கள் ஆதரவைப் பெற முந்துவது இயல்பு. அன்றி நாட்டில் புதுப்புது கட்சிகள் தோன்றுவதற்கும் இடமேற்படும். ஆதலால், பின் விளைவினைக் கூர்ந்து நோக்கி உடனடியாக இதனை நிறைவேற்றி வையுங்கள்."

['கலைக்கதிர்' (ஜனவரி 1949) பொங்கல் மலரில் வந்த கட்டுரையின் ஒரு பகுதி.]

# சங்கத்தைப் பலப்படுத்துங்கள்!

## தங்கவயலிலே தோழர் பி. ராமமூர்த்தி உரை

கோலார் ராபர்ட்சன்பேட்டை ஹைஸ்கூல் மைதானத்தில் 15-1-'54 மாலை 6 மணிக்கு கம்யூனிஸ்டுக் கட்சிப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் வி. எம். கோவிந்தன் தலைமை வகித்தார். தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தைச் சேர்ந்த ஒருசிலர் கூட்டத்தைக் கலைக்க பகீரத முயற்சி செய்தனர். ஆனால் அவர்களது முயற்சியை கூடியிருந்த 15 ஆயிரம் மக்களும் நிர்தூளியாக்கினர்.

பின்னர் இந்திய கம்யூனிஸ்டுக் கட்சியின் பொலிட்பீரோ மெம்பர் தோழர் பி. ராமமூர்த்தி, தங்கவயல் தொழிலாளர்களின் கோரிக்கைகளை விளக்கியும், பிரிட்டிஷ் கம்பெனி இன்னும் இந்தியத் தொழிலாளிகளை சுரண்டிக்கொள்ளையடித்துப் போக காங்கிரஸ் அரசாங்கம் உரிமை அளித்துள்ள தேசவிரோதச் செயலை கண்டித்தும் பேசினார்.

1947ல் பிரிட்டிஷ் நேரடி ஆட்சி தொலைந்தது. ஆனால், தொடர்ந்து பிரிட்டிஷ் மூலதனத்தின் ஏகபோக ஆட்சி இந்தியாவில் நீடித்து வருகின்றது. பல உதாரணங்களில் தங்கவயலில் உள்ள பிரிட்டிஷ் கம்பெனியும் ஒன்று. தொழிலாளர்களின் கோரிக்கைகளைப் பெறுவதில் தங்கவயல் தொழிலாளர்கள் ஒன்றுபட்டுப் போராடியாக வேண்டும். தொழிற்சங்க இயக்கம் விரிந்த ஜனநாயகம் கொண்டதாக நூற்றுக்கணக்கான தொழிற்சங்க ஊழியர்கள் பங்குகொள்வதாக வேண்டும். டிப்பார்ட்மெண்ட் கமிட்டிகள்மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ளும் வழிவகைகளை [illegible]யாகவேண்டும். தொழிற் [illegible] ஏற்படு[illegible]மியில் நடை[illegible] சங்க விவகாரங்[illegible] பெறுவதற்கான கிளர்ச்சியைத் தொழிலாளர்கள் ஆரம்பித்தாக வேண்டும். பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு நேரிடையாக தொழிற்சங்க இயக்கத்தில் ஈடுபட தொழிலாளர்களுக்கு இது பெரும் உதவி செய்யும். தொழிற்சங்க இயக்கத்தின் உறுதியான தன்மையை நிலைநிறுத்த சிறந்த வாலண்டியர் ஸ்தாபனத்தை உருவாக்கியாக வேண்டுமெனக் கூறினார்.

### ஒன்றுபடுவோம்!

ஜாதி, மத வித்தியாசம், அரசியல் வித்தியாசம் மூலம் தொழிலாளர்களைப் பிளவுபடுத்தும் சக்திகளுக் கெதிராகப் போராடியாக வேண்டும். தொழிற்சங்கத் தலைவர்களாக வருவது சுலபமான காரியமல்ல. தொழிலாளர்களின் நம்பிக்கையைப் பெற்றவர்கள் மட்டுமே தலைவர்களாக வரமுடியும். தேர்தல்மூலம் தொழிற்சங்கத் தலைவர்களாக வர முயற்சிப்பதுதான் ஜனநாயகம் வாய்ந்தது. அதை விட்டுப் போட்டி சங்கங்களை அமைப்பது தொழிலாளர்களின் நலன்களை வெள்ளைக்கம்பெனிக்கு அடகு வைப்பதாகும்; தொழிலாளர்களைப் பிளவுபடுத்திப் போராட்டங்களைக் காட்டிக்கொடுப்பதாகும். இவ்விதப் பேர்வழிகள் எவ்வித ரூபத்தில் வந்தாலும், தங்கவயல் தொழிலாளர்கள் முறியடித்தாக வேண்டும். தொழிற்சங்க வயலில் பிளவுபடுத்தும் பேர்வழிகத்தில் இடமில்லாது செய்தாக வேண்டும் என்றபோது கடல் அலைபோல் தொழிலாளர்கள் ஆரவாரம் செய்தனர்.

கம்யூனிஸ்டுகள் நடத்தும் தொழிற்சங்கத் தேர்தல்கள் ஜனநாயக அடிப்படையில் நடத்தப்பட்டு வருகின்றது என்பதைத் தொழிலாளர்களும் ஏனையோரும் அறிவர். இதற்கு மாறாக நடந்துகொண்டால், கம்யூனிஸ்டுக்கட்சி அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கத் தயங்காது, தயங்கியது கிடையாது என்று கூறியபோது பலத்த ஆரவாரம் செய்தனர்.

சுதந்திரம் வந்த ஏழாண்டிற்குப் பின்னும் நம் நாட்டு மக்களின் நலன்களைப் பாதுகாக்க, விவசாயம் செழிக்க, தொழில் வளர, வேலையில்லாத் திண்டாட்டம் ஒழிய, வியாபாரம் அபிவிருத்தியாக, தேசியத்தொழில் வளர திட்டமில்லை. ஆகவே, நாட்டின் நலனைக்கோரும் ஜனநாயக சக்திகள் ஒன்றுபட்டுப் போராடி இந்த ஆட்சி முறையை மாற்றியமைக்க முன்வர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார்.

இன்றைய [illegible] தி. மு. க. [illegible]வின் போக்கு தமிழ்நாட்டு மக்க[illegible] தவறான பாதையில் கொண்டு செல்லும், மக்கள் இயக்கத்தைப் பிளவுபடுத்தும் பாதை. அதற்குத் தமிழ் மக்கள் தீர்ப்புக்கூறி வருகின்றனர். அவர்களின் இயக்கம் தொடர்ந்து, ஜாதித் துவேஷத்தை வளர்த்து, ஜனநாயக இயக்கங்களைப் பிளவுபடுத்தும் வேலைகளையும் செய்துவந்தால், தமிழ்நாட்டுத் தொழிலாளர்களும், விவசாயிகளும், அவர்களின் இயக்கத்திற்குத் தகுந்த பதில் அளிப்பார்கள் என்று கூறி முடித்தார்.

—எஸ். சவுரிதாஸ்

# .... கிருஸ்துவ பாதிரிகள் தலையீடு

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

மென்பதுதான் தங்கள் ஆசையா? "பரமண்டலத்தில் நரகப்படுகுழியில் வீழ்ந்து, சித்திரவதை அனுபவிக்க வேண்டிவரும்" என்று கிறிஸ்தவப் பொதுமக்களைப் பயமுறுத்தி காங்கிரஸ் பக்கம் இழுக்கும் பாதிரிகளின் ஆதரவுடனாவது தேர்தலில் வெற்றியடையவேண்டுமென்பதுதான் தங்கள் நோக்கமா? பொதுமக்களிடம் இழந்துவிட்ட செல்வாக்கை இப்படித்தான் மீண்டும் பெறலாமென உங்கள் கட்சி கனவு காண்கிறதா? இங்கு நடைபெறும் இந்த அக்கிரம நிகழ்ச்சிகள் அனைத்தையும் நீங்கள் அறியாமல் எப்படி இருக்க முடியும்?

### விசாரணை நடத்துங்கள்

"கம்யூனிஸ்ட் எதிர்ப்பு அணியின்" வண்டவாளங்களை அம்பலப்படுத்தி மேத்யூ மஞ்சூரான் ஒரு சிறு புஸ்தகம் எழுதியதற்காக, அவரை மதப் பிரஷ்டம் செய்வதாக ஒரு கதோலிக்கப் பாதிரி, மாதா கோயிலில் நடைபெற்ற தெய்வாராதனையின்போது நூற்றுக்கணக்கான பக்தகோடிகளின் முன்னிலையில் பயமுறுத்தியிருக்கிறார் என்ற செய்தி ஜனவரி 12ம் தேதிய ஜனயுகத்தில் வெளியாகியிருக்கிறது. இது போன்ற எத்தனையோ சம்பவங்கள் நிகழ்ந்திருந்த போதிலும், தக்க ஆதாரங்களுடன் பத்திரிகையில் வெளியாகியிருக்கும் இந்த ஒரு சம்பவத்தைப்பற்றியாவது நீங்கள் விசாரணை நடத்துவீர்களா? திருகொச்சித் தேர்தலில் பெருவாரியான ஸ்தானங்களைக் கம்யூனிஸ்ட்கள் ஜெயித்தாலும் கூட, அவர்கள் வசம் ஆட்சிப் பொறுப்பை ஒருக்காலும் விடப்போவதில்லையென சமீபத்தில் ராஜ்கோட்டில் உங்களுடைய சகமந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி அறிவித்ததை நீங்களும் அங்கீகரிக்கிறீர்களா? மீண்டும் ஆட்சிபீடத்தில் அமருவதற்காக காங்கிரஸ் கட்சி எத்தகைய வழி முறைகளை அனுஷ்டித்தாலும் பரவாயில்லையென்றுதான் நீங்களும் கருதுகிறீர்களா?

### தேசத்துரோக நடவடிக்கைகள்

ராஜ்ய நலன்களுக்கு விரோதமாக சீர்குலைவு வேலைகளில் ஈடுபட்டிருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டு இரண்டு இத்தாலி தேசப் பாதிரிகள் கொச்சியிலிருந்து சமீபத்தில் வெளியேற்றப்பட்டதை உங்களுக்கு மீண்டும் ஞாபகப்படுத்த வேண்டிய அவசியமில்லையென்றே நாங்கள் கருதுகிறோம். திரு-கொச்சியில் கிருஸ்துவப் பாதிரிகள் இன்று காங்கிரஸ் பக்கம் இருக்கிறார்கள். இதற்குக் காரணம் இல்லாமலில்லை. தேர்தல் பிரச்சாரங்களின்மூலம் அவர்களின் அரசியல் அதிகார வெறி மேலும் கூராகத் தீட்டி சாணை பிடிக்கப்படுகிறது. கூடிய விரைவில் அரசியல் ஆதிக்கம்பெற அவர்கள் நிச்சயம் முயர்சிக்கலாம். கடந்தகால சரித்திரம் கூறும் உண்மை இதுதான்.

திருவாங்கூர் கொச்சியில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்த சம்பவங்களை முளையிலேயே கிள்ளியெறியாவிட்டால், இவைகளைத் தடுத்து நிறுத்தாவிட்டால், 'மத சார்பற்ற அரசியல்' வேண்டுமென ஓங்கி ஓங்கி நீங்கள் செய்யும் பிரச்சாரத்தின் உண்மையான அர்த்தம்தான் என்ன? நீங்கள் கூறும் ஜனநாயகத்தின் விளக்கம்தான் ஈதா?

### பாதிரிகளின் பிரச்சாரத்தை நிறுத்துக!

சுபீட்ச சுகவாழ்வு கோரி சாதாரண பொதுமக்கள் வீரநடை போடுகின்றனர். அரசியல் தெளிவுடன் முன்னேறுகிறார்கள். தெய்வம் சபித்துவிடும் என்றோ, அல்லது இகலோக பரலோகத்தில் நற்கதி கிடைக்காதென்றோ கிருஸ்துவப் பாதிரிகள் பயமுறுத்துவதின்மூலம், அரசியல் தெளிவுபெற்ற பொதுஜனங்களின் உறுதியைக் குலைக்கமுடியும் என நம்புவது வீண் முட்டாள்தனமாகும்.

ஆனால் இத்தகைய மதவாதிகளுடன், பிற்போக்குப் பிண்டங்களுடன் ஒன்றுசேருவதின்மூலம் உடனடியாக, தேர்தலில் வெற்றி பெற்றுவிடலாம் என்று உங்கள் கட்சி எதிர்பார்க்கிறது. இதையே நோக்கமாகக் கொண்டு வேலைசெய்கிறது. ஆனால், உங்களுக்கும் இத்தகைய நோக்கங்கள் இருக்குமென நாங்கள் நம்புவது மிகவும் கடினமாயிருக்கிறது.

தேர்தல் பிரச்சாரத்திற்காக நீங்கள் திரு-கொச்சிக்கு செல்லப் போகிறீர்கள். கிறிஸ்துவப் பாதிரிகள் அங்கே செய்துவரும் விஷமத்தனமான பிற்போக்குப் பிரச்சாரத்துடன் எத்தகைய சம்பந்தமும் கொள்ளாமல் தாங்கள் ஒதுங்கியிருப்பீர்களா? அதுமட்டுமின்றி, தேர்தல் பிரச்சாரத்தில் இனி ஒருக்கணமும் ஈடுபடக்கூடாதென பாதிரிகளுக்கு மிக வன்மையான எச்சரிக்கை விடுப்பீர்களா? தாங்கள் இவ்விதம் செய்வீர்கள் என்ற லேசான நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது.

### மக்களை ஏமாற்ற முடியாது

ஆனால், மதவாதிகளின் பிற்போக்குப் பிரச்சாரங்களிலிருந்து ஒதுங்கி நின்று, அவைகளை வன்மையாகக் கண்டிக்க நீங்கள் தவறினால், காங்கிரஸ் லட்சியங்களின் வண்டவாளம் மக்களிடையே மேலும் அம்பலமாகும். எவ்வளவு வாக்கு சாதுர்யமாகப் பேசியபோதிலும், பொதுமக்களை என்றென்றைக்கும் நீங்கள் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது. இறுதியாக, உங்களை மீண்டும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறோம். தேர்தல் பிரச்சாரத்தில், அரசியல் இயக்கத்தில் நியாயமும், நேர்மையும் நிலவ வேண்டுமெனில், திருவாங்கூர் கொச்சியில் கிறிஸ்துவப் பாதிரிகளின் அபாயகரமான நடவடிக்கைகளை உடனடியாக தடுத்து நிறுத்துங்கள். அவர்களின் விஷமப் பிரச்சாரத்திற்கு முற்றுப் புள்ளி வையுங்கள்.

## வாங்குவோர்-விற்போர் சொஸைடி

கூட்டுறவு சங்கங்களின் ரிஜிஸ்திரார் ஸ்ரீ. ஜே. வி. ரயான் 17-1-54ல் காஞ்சீபுரத்துக்குச் சென்றிருந்தார். அப்பொழுது பட்டு நெசவாளர் கூட்டத்தைக் கூட்டி, வாங்குவோர் விற்போர் சொஸைடியை அமைத்தார்.

இம்மாதிரியான சொஸைடியை ஏற்படுத்தியது இதுதான் முதல் தடவை என்று தெரிகிறது.

# பெப்சு தேர்தலிலே!

## காங்கிரஸ் அபேட்சகர்கள் யார்?

### மன்னர்களும் அதிகாரிகளுமே!

திரு-கொச்சி போன்றே, பெப்சுவிலும் தேர்தல் நடக்கப் போகிறது. அங்கு காங்கிரஸும், ஜனநாயக முன்னணியும், மாஸ்டர் தாரா சிங் தலைமையிலுள்ள அகாலிதால் என்ற சீக்கிய வகுப்புவாத ஸ்தாபனமும் போட்டியிடுகின்றன.

எனவே அங்கு முக்கோணப் போட்டி நடக்கிறது.

**ஜனநாயக முன்னணி**

கம்யூனிஸ்ட் கட்சியும், பார்வர்டு பிளாக்கும், அகாலிதாலின் வகுப்புவாதப் போக்கை எதிர்த்து வெளியேறிய ராமா கோஷ்டியினரும், மற்றுமிரு முற்போக்கு ஸ்தாபனங்களும் ஜனநாயக ஐக்கிய முன்னணி ஏற்படுத்தியிருக்கின்றன. ஐக்கிய முன்னணி சார்பில் 41 பேர் போட்டியிடுகிறார்கள். அதில் 9 பேர் கம்யூனிஸ்டுகள்.

**அகாலிதால்**

தாராசிங்கின் அகாலிதால் காங்கிரஸை எதிர்த்துப் போட்டியிட்டாலும், அதில் ஜெயிக்கக் கூடியவர்கள், தேர்தலுக்குப் பின் காங்கிரஸுடன் சேர்ந்து, காங்கிரஸ் ஆட்சிக்கு முட்டுக் கொடுப்பார்கள் என்பதை அவர்களது பிரசங்கங்களிலிருந்தே தெரிகிறது.

**காங்கிரஸ்**

காங்கிரஸ் நிறுத்தியிருக்கும் அபேட்சகர் ஜாபிதாவைக் கண்டவுடனே பெப்சு மக்கள் காரி உமிழ்கிறார்கள். சாம்பிள் வேண்டுமா? படித்துப்பாருங்கள்!

1. ராஜா சுரீந்திரசிங் இவர் பெப்சு ராஜப்பிரமுக்கின் அக்காள் புருஷன்.

2. ராஜா மகேஷிந்தர் சிங்! இவர் ராஜப் பிரமுக்கின் தாய் மாமன்.

கூத்து இத்தோடு நின்றதா? கேளுங்கோ சமாச்சாரத்தை:

3. கன்வார் மஞ்சித் இந்திர்சிங்! இவர் பரீத்கோட் ராஜாவின் தம்பி.

4. ஹீராசிங் பீரார்! இவர் மேற்படி ராஜாவுக்கு அத்தான்.

5. மாலெர்கோட்டா நவாப்.

விஷயம் ராஜாக்களோடு நிற்கவில்லை! இன்னும் படியுங்கள்!

6. கர்னல் ரக்பீர்சிங்! இவர் முன்பு போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனராலாயிருந்தவர். இப்போது பெப்சு காங்கிரஸ் தலைவர்.

7. கர்னல் குர்தியல்சிங் திலான்! இவரும் முன்னாள் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலே!

8. இக்பால்சிங்! மேற்படியாருக்கு மருமகன்!

9. ஜெனரல் ஸ்ரீதேவ்சிங்! இவர் சர் சி. பி. மாதிரி. முன்பு நாபா சமஸ்தான மந்திரியாயிருந்து விவசாயிகளைச் சுட்டுக் கொன்றவர்.

விஷயம் என்னவென்றால், ராஜப்பிரமுகருக்கு காங்கிரஸ் பேரால் 8 டிக்கெட்டுகள்! பரீத்கோட் ராஜாவுக்கு 3 டிக்கெட்டுகள் அவற்றை இந்த இஸ்பேட்டுகள் தம் இஷ்டப்பட்டவருக்குக் கொடுத்து தேர்தலில் காளைமாடுகளின் பேரால் நிறுத்தியிருக்கிறார்கள்.

**ஏ. கே. கோபாலனுக்கு மகத்தான வரவேற்பு**

பெப்சுவில் ஏ. கே. ஜி. ஆயிரம் மைல் தூரம் ஒருவாரமாக சுற்றுப் பிரயாணம் செய்தார். விவசாயிப் பெரியோர்களெல்லாம் மலர்கள் தூவி, காசுகள் இறைத்து ஏ. கே. ஜி. யை வரவேற்றார்கள்.

பெப்சு, பாகிஸ்தான் எல்லையில் இருக்கிறது. அமெரிக்க ஆக்ரமிப்பு இங்கு பயமுறுத்துகிறது. இந்தச் சமயத்தில்தான் "ஜனநாயகத்துக்காகவும், சுதந்திரத்துக்காகவும் போராடிய நீண்டகால பாரம்பரை அமெரிக்காவுக்கு இருக்கிறது" என்று மான வெட்கமில்லாமல் தீர்மானம் போடுகிறது காங்கிரஸ் இதைக்கண்ட பெப்சு மக்கள் காளைமாட்டுப் பெட்டிக்கு மண்ணடிப்போம் என்று கர்ஜிக்கிறார்கள்.

---

**நாகயகோட்டையில்**

## கிஸ்தி வஜா மோசடி

### பண்ட பாத்திரங்கள் ஜப்தி

திண்டுக்கல் தாலூகா நாயககோட்டை கிராமத்தில் சென்ற வருஷம் கிஸ்தி வஜா செய்யப்பட்டது. ஆனால் கிராம அதிகாரிகள் செலவு பணம் போய்விடுமே என பயந்து, தவணை முக்கால் ரூபாய்க்குமேல் எழுதிவிட்டனர். இதன் விளைவாக எட்டணா தவணைக்கு கீழ் வஜாஆன கிஸ்தியை விவசாயிளுக்கு பிரயோஜனமின்றி ஆகிவிட்டது.

சென்ற வருஷத்தில் இவ்வட்டாரத்தில் கடுமையான பஞ்சநிலைமை ஏற்பட்டிருந்ததால், பெரும்பகுதி விவசாயிகள் கிஸ்தி போடவில்லை. இவ்வருடம் சிறிதளவு தானியமே கிடைத்தது சென்ற வருட கிஸ்தியை போடாத விவசாயிகளின் ஆடுமாடுகளையும், பண்ட பாத்திரங்களையும் ஆக்ரமித்து எடுத்துச்செல்லுகிறார்கள். உதாரணமாக செண்டுவழி ராமசாமி கவுண்டர் கிஸ்தி போட செலவு பணம் கொடுக்காமல் ரசீதில் வரவு வைக்கமுடியாது என்று மறுத்து செலவு பணம் வாங்கியபின், வரவு வைத்துக் கொடுத்திருக்கிறார். கல்கோட்டையில் ப. முத்துச்சாமிக் கோனார் என்பவரின் மாட்டையும், க. ஆண்டியப்பக் கோனாரின் வீட்டில் புகுந்து பண்ட பாத்திரங்களையும், மருதைக் கோனார் வீட்டில் செம்பு, பாத்திரங்களையும் கிராம முனுசீபு எடுத்துச் சென்றிருக்கிறார். செலவு பணம் கொடுக்க மறுக்கும் விவசாயிகளின் பணத்தை பெற்றுக்கொள்ள முடியாது என்கிறார்.

கஷ்டம் தாங்கமுடியாத விவசாயிகள் காங்கிரஸ் சர்க்காரை சபிக்கிறார்கள்.

**பி. முத்துச்சாமி**

---

## சென்னை மாணவர் சங்க மகாநாடு

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிய ஞானம் மாணவர் சங்க ஊழியர்களுக்கு வேண்டும். அத்துடன் கலாச்சார, இலக்கிய, விளையாட்டு போட்டிகளிலும் விசேஷ கவனம் செலுத்தவேண்டும் என்று எல்லா பிரதிநிதிகளும் வற்புறுத்திப் பேசினர். இந்த விவாதங்களின் அடிப்படையில் செயலாளரின் அறிக்கையை திருத்தி எழுதுவதென்றும், சென்னை மாணவர்களின் பிரச்னைகளைப்பற்றிய ஒரு விரிவான ரிப்போர்ட் தயாரிக்க, ஒரு விசேஷ குழு அமைக்கப்படவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு கல்லூரியிலுமிருக்கும் கஷ்டங்கள், ஊழல்கள் பற்றி எல்லா பிரதிநிதிகளும் பேசினர். உதாரணமாக பச்சையப்பன் கல்லூரியில் சின்னஞ்சிறு காரியங்களுக்கெல்லாம் 5 ரூபாய் அல்லது 10 ரூபாய் என்று கொடூரமான முறையில் அபராதம் விதிக்கப்படுகிறது. இது மாணவர்களிடையே எதிர்ப்பை உண்டாக்கியுள்ளது. இதுபோன்ற பல பிரச்னைகள் உள்ளன. அவற்றை எதிர்த்து சென்னை மாணவர் சங்கம் போராட வேண்டும் என்று கோரினர். பிரதிநிதிகள் எல்லோரும் நேரடியாக ஏற்பட்டுள்ள அனுபவங்களின் அடிப்படையில் பேசினர்.

**தயார்!**

பின்பு பாகிஸ்தான்-அமெரிக்க ராணுவ ஒப்பந்தத்தை கண்டித்து நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பாகிஸ்தான்—இந்திய மாணவர்கள் ஒன்றுபட்டு இந்த ஆபத்தை எதிர்த்துப் போராடவேண்டுமென்றும், வகுப்புவாதிகளின் பிரச்சாரத்திற்கு இரையாகக்கூடாதென்றும், மாணவர்கள் நாட்டு பாதுகாப்பு விஷயத்தில் இதர சக்திகளுடன் சேர தயங்கமாட்டார்கள் என்றும் கூறுகிறது. சமாதானமும், காலனி நாட்டு வாலிபர் போராட்டமும் என்பது பற்றிய தீர்மானம், சென்னையில் இந்திய சமாதான காங்கிரஸை நடத்துவதென்று அகில இந்திய சமாதான கௌன்ஸில் செய்துள்ள முடிவை வரவேற்று, எல்லா மாணவர்களும், போதிய ஒத்துழைப்பையளிக்க வேண்டுமென்றும், பிப்ரவரி 21ம் தேதியை காலனி வாலிபர் போராட்ட ஆதரவு தினமாக விரிந்த முறையில் கொண்டாடுவதென்றும் கோருகிறது.

**வடிகட்டல் ஒழிக!**

வடிகட்டும் முறையையும், இறுதித் தேர்வுகளில் பெரும்பகுதி மாணவர்கள் நிறுத்தப்படுவதையும் கண்டித்தும், ஆந்திர சர்க்கார் பள்ளிகளில் வடிகட்டும் முறையை நீக்கியதைப் போல் சென்னை சர்க்காரும் நீக்கவேண்டுமெனக்கோரியும், எல்லா மாணவர்களும் ஒன்றுபட்டு இதற்காகப் போராடவேண்டுமெனக் கோரியும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்திய சர்க்கார் பட்ஜெட்டில் கல்விக்காக 10 சதம் ஒதுக்கக் கோரும் மகஜரில் 5000 கையெழுத்துக்கள் வாங்குமாறு கோரி மற்றொரு தீர்மானமும், வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதைப்பற்றிக் கவலை தெரிவித்து, சர்க்கார் ஆவன செய்ய வேண்டுமெனக் கோரும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

தோழர் லீலாவை தலைவராகவும், ராதாகிருஷ்ணனை பொதுச் செயலாளராகவும் கொண்ட புதிய நிர்வாகக்குழு தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், பிரதிநிதிகள் கூட்டம் முடிந்தது.

**பொதுக்கூட்டம்**

மாலை 6 மணிக்கு ஸெயின்ட் மேரீஸ் ஹாலில் தோழர் கோபாலகிருஷ்ணன் தலைமையில், ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. இன்றைய கல்விநிலை பற்றியும், மாணவர்கள் ஒன்றுபட்டு போராடுவதன் அவசியம்குறித்தும் தோழர் கோபாலகிருஷ்ணன் பேசினார். மாணவர் சம்மேளனம், எந்த ஒரு அரசியல் கட்சியையயும் சார்ந்ததல்லவென்றும், மாணவர்கள் நலன்கள், உரிமைகள் ஆகியவற்றைப் பாதுகாக்கும் ஸ்தாபனமே மாணவர் சம்மேளனம் என்றும் விளக்கி வெகு விரிவாகப் பேசினார்.

பின்பு பேசிய பச்சையப்பன் கல்லூரி பேராசிரியர் திரு. சி. டி. ராஜேஸ்வரன் ஆசிரியர்களின் அவலநிலையை விளக்கியும், இன்றுள்ள கல்வி அமைப்பின் கோளாறுகள்பற்றியும் விரிவாகப் பேசினார்.

"சகல நாடுகளிலும், சுற்றுப்புற சூழ்நிலைகளில் ஏற்படும் மாறுதல்களின் காரணமாக மாணவர்கள் அரசியலில் பங்கெடுத்துக் கொள்ளுகிறார்களென்றும், இதை யாரும் தடுக்க முடியாதென்றும், யாருடைய தூண்டுதலாலும் இது வந்துவிட முடியாதென்றும்", இறுதியாகப் பேசிய தோழர் மோகன் குமாரமங்கலம் கூறினார். வேலையில்லாத் திண்டாட்டம் வளர்ந்து வருவதை புள்ளி விவரங்களோடு விளக்கி, விரிவான முறையில், இந்தியாவை தொழில் மயமாக்கும் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டால் தவிர, இந்த பிரச்னையை தீர்க்க முடியாதென்றும் கூறினார்.

**வாழ்த்துக்கள்**

திருவாளர்கள் A. K. கோபாலன், R. K. காஞ்சியா, டாக்டர் குமரப்பா, D. D. கோசாம்பி, கவி வள்ளத்தோல் ஆகியோரிடமிருந்து வந்த வாழ்த்துக்களை தோழர் வெங்கட்ரமணா படித்தார். மகாநாட்டு முடிவுகளை விளக்கி தோழர் கார்த்திகைவேலு பேசினார். சில மாணவர்களின் இசை நிகழ்ச்சிகளுடன் மகாநாடு முடிந்தது.

இந்த மகாநாடு சென்னை மாணவர் சங்க சரித்திரத்தில் மிக முக்கியமானதாகும். சென்னை நகர மாணவர்களின் ஒன்றுபட்ட பிரதிநிதியாக செ. மா. சங்கத்தை மாற்ற இம்மகாநாடு ஓரளவு வழி காட்டியுள்ளது. இந்த மகாநாட்டு முடிவுகளை புதிய நிர்வாகக் குழு நிறைவேற்றுவதன்மூலம் ஒரு மகத்தான ஐக்கிய மாணவர் ஸ்தாபனத்தை கட்ட முடியும். ஒன்றுபட்ட மாணவரியக்கத்தை கட்டுவோம் என்ற உறுதியுடன் பிரதிநிதிகள் ஹாலை விட்டு வெளியேறினர்.

**கார்த்திகைவேலு.**

---

## விஜயகுமார் மில்லிலே

பழனியிலே அத்திபூத்தாற்போல ஒரு மில் இருக்கிறது. அதற்கு விஜயகுமார் மில் என்று பெயர். பழனி தாலூகா முதல் பொள்ளாச்சி தாலூகா வரை 45 மைல் நீளத்திலே திட்டுத் திட்டாய் படர்ந்திருக்கும் 14,000 (பதினாலாயிரம்) ஏகரா நஞ்சை புஞ்சை நிலங்களைப் பட்டா போட்டு கவ்வி நிற்கும் நெய்க்காரபட்டி மைனருக்கு இந்த மில்லின் பெரும்பகுதி சேர் சொந்தம்! பட்டத்து யானை மேலே பவனி வரக்கூடிய அளவுக்கு, அவ்வளவு பெரிய செல்வச் சீமான், இந்த மைனர்.

சர்க்கார் சட்டம் சொல்லுகிறது மில் தொழிலாளர்களுக்கெல்லாம் அடிப்படைச் சம்பளம் 26 ரூபாய் கொடுக்க வேண்டுமென்று! ஆனால் இங்கு வேலை செய்யக்கூடிய 500 பேர்களில் 400 பேருக்கு இவர்கள் போட்டதுதான் கூலி! 100 பேருக்குதான் 26 ரூபாய் கிடைக்கிறது. பஞ்சப்படி புள்ளிக்கு $2\frac{1}{2}$ அணாதான்! இரவு அலவன்ஸ் கிடையாது! ரீலிங் பெண்களுக்கு இதர மில்களில் கிடைப்பதைக் காட்டிலும் ரூ. 23-11-0 குறைவாக உள்ளது. லீவ் நாட்களுக்கு சம்பளம் கிடையாது. பிரசவ சகாய நிதி, பிராவிடெண்ட் பண்டு, வைத்திய வசதி, ஸ்டோர் வசதி, கேன்டீன் வசதி... இப்படியெல்லாம் பேச்செடுக்கக் கூடாது! மூச்சு விடக்கூடாது!

இந்தக் கொடுமைகளைக் கண்டித்து தொழிலாளர்கள் அதிகாரிகளுக்கு மகஜர் அனுப்பி விட்டார்கள். பழனி தாலூகா விவசாய சங்கமும், பொது மக்களும் தொழிலாளர்களை ஆதரித்து நிற்கிறார்கள்.

---


**ஜனசக்தி**

(வார இதழ்)

**சந்தா விபரம்:**

| | |
|---|---|
| தனிப்பிரதி (12 பக்கம்) | 0-3-0 |
| 3 மாதம் | 2-4-0 |
| 6 மாதம் | 4-8-0 |
| 1 வருடம் | 9-0-0 |

குறிப்பு:—சந்தாதாரர்கள் தாங்கள் எழுதும் கடிதங்களில் சந்தா நம்பரை அவசியமாகக் குறிப்பிடவேண்டும். சந்தா நம்பர் குறிப்பிடப்படாத கடிதங்களை கவனிப்பதற்கு வீண் கால தாமதம் ஏற்படும்.


---

## கோதண்டராம் ஸ்பின்னிங் மில் மூடப்பட்டது

### 400 தொழிலாளர்கள் உள்ளிருப்பு போர்

மதுரை கோதண்டராம் ஸ்பின்னிங் மில் நிர்வாகம் 21-1-54 முதல் மில்லை மூடிவிட்டது. இந்த மில்லின் கேஸ் தொழில் அப்பீல் கோர்ட்டில் இருக்கும் போதே, செக்ஷன் 22-க்கு விரோதமாக கதவடைப்பு செய்திருக்கிறது.

இதனால் வேலையிழந்த 400 தொழிலாளர்கள் மில்லுக்குள்ளே இருக்கிறார்கள். இது சம்பந்தமாக தலையிடுமாறு மதுரை பஞ்சாலைத் தொழிலாளர் சங்க நிர்வாகிகள் கலெக்டரிடம் தெரிவித்திருக்கிறார்கள். ஏற்கெனவே 15-1-54ல் சங்க காரியதரிசி வி. கார்மேகம் தலைமையில் 100 தொழிலாளர்கள் கலெக்டரிடம் சென்று, சட்ட விரோதமாக கதவடைப்பு செய்வதைத் தடுக்கவேண்டுமென்று முறையிட்டார்கள்.

தமிழ்நாடு தொழிற்சங்கம் கதவடைப்பு விஷயத்தைப்பற்றி தொழில் மந்திரிக்கு தகவல் தெரிவித்திருக்கிறது. தமிழ்நாடு தொழிற்சங்க உபதலைவர் எஸ். கிருஷ்ணமூர்த்தி, சட்ட விரோதமாக மில்லை மூடிய முதலாளிகள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும், உடனடியாக மில்லைத் திறக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் தொழில் மந்திரி கிருஷ்ணாவிடம் வற்புறுத்தினார்.

வேலை உரிமைக்காகப் போராடிக்கொண்டிருக்கும் தொழிலாளர்களுக்கு ஆதரவாக, சகல தொழிலாளர்களும், தொழிற் சங்கங்களும், ஜனநாயக ஸ்தாபனங்களும், பொது மக்களும் திரண்டெழவேண்டுமென்றும், தலையிடுமாறு சர்க்காருக்கு மகஜர்களும் கடிதங்களும் எழுதுமாறும் பஞ்சாலைத் தொழிற்சங்கம் வேண்டுகோள் விட்டிருக்கிறது.

---

## சென்னையில் தொழிற்சங்க வகுப்பு

தமிழ்நாடு தொழிற்சங்க காங்கிரஸ் சார்பில் சென்னை தொழிற்சங்க ஊழியர்களுக்கு தொழிற்சங்க வகுப்பு எடுக்கப்பட்டு வருகிறது. ஜனவரி 17-ல் தொழிற்சங்க வேலையைப்பற்றி தோழர் கே. முருகேசனும் 24ம் தேதி தொழிற்சங்க சட்டங்கள் பற்றி தோழர் கே.டி.கே. தங்கமணியும், 26ம் தேதி இந்திய தொழிற்சங்க இயக்கம் பற்றி கே. முருகேசனும் வகுப்பு எடுத்தார்கள். பல்வேறு தொழிற்சங்கங்களிலிருந்து 30க்கும் அதிகமான ஊழியர்கள் தொழிற்சங்க வகுப்பில் உற்சாகமாகப் பங்கு கொண்டார்கள்.

# அஜாய்கோஷின் சவுக்கடி

## அமெரிக்க கூலிகளின் புளுகுகளுக்கு பதில்

**இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆயுதந்தாங்கிய கலகத்திற்கு ஏற்பாடுகள் செய்துகொண்டிருப்பதாக ஜனநாயக ஆராய்ச்சிக் கழகமும், புருஷோத்தம தாஸ் திரிகம்தாசும் கிளப்பிவிட்ட மிகக் கேவலமான அவதூறுப் பிரச்சாரத்திற்கு ஆப்பு அறைந்து இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுக் காரியதரிசி தோழர் அஜாய் குமார் கோஷ் ஜனவரி 23-ம் தேதியன்று பத்திரிகைக்கு அறிக்கை விடுத்துள்ளார்.**

"இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி ஆயுதந் தாங்கிய போராட்டம் நடத்துவதற்கான சகல தயாரிப்புகளும் செய்து வருவதாகவும், இது சம்பந்தமான விபரங்களடங்கிய ஒரு 'ரகசிய சுற்றறிக்கை'யைத் தான் கண்டுபிடித்திருப்பதாகவும் ஜனநாயக ஆராய்ச்சிக் கழகத்தின் சார்பில் புருஷோத்தம்தாஸ் திரிகம்தாஸ் பத்திரிகைகளுக்கு விடுத்திருக்கும் அறிக்கை என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது.

ஜனநாயக ஆராய்ச்சிக் கழகம் என்றால் என்ன? அதற்கு நிதி உதவுவது யார்? எத்தகைய இழிவான பொய் புளுகு, ஆத்திரமூட்டும் செய்கைகளில் இது ஈடுபடுகிறது முதலிய சகலவற்றையும் பொதுமக்கள் நன்கறிவார்கள். எனவே, அந்த 'ரகசிய சுற்றறிக்கை'க்குப் பத்திரிகைகள் பிரமாதமான விளம்பரம் கொடுக்காதிருந்திருந்தால் ஆராய்ச்சிக்கழகத்தைத் தாங்கி திரிகம்தாசும் அறிக்கை விடுக்காமலிருந்திருந்தால், நான் இந்த பொய்ப்பிரசாரத்திற்கு எத்தகைய பதிலும் அளிக்காமல் அவென்று தப்பியிருப்பேன்.

### கலப்படமற்ற பொய்

குறிப்பிடப்பட்ட இந்த தஸ்தாவேஜு ஒரு மட்டரகமான கள்ளக் கடிதம் என்பது சகலருக்கும் தெளிவாகியிருக்கும். எனவே, இதன்மீது ஆதாரப்பட்டு திரிகம்தாஸ் விடுத்த அறிக்கையும் மதுரையில் நடைபெற்ற கட்சி காங்கிரசில் நடைபெற்றதாகக் கூறப்பட்டுள்ள நடவடிக்கை விபரங்களும் கலப்படமில்லாத பொய்களாகும். கம்யூனிஸ்ட் கட்சியின், ஜனநாயக இயக்கத்தின் வளர்ந்துவரும் சக்தியைக் கண்டு குலைநடுக்கம் கொண்ட இந்தியப் பிற்போக்குப் பிண்டங்களும், அவர்களின் போஷகர்களான அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளும், அமெரிக்க கைக்கூலி ஸ்தாபனமான ஜனநாயக ஆராய்ச்சிக் கழகமும் இத்தகைய அவதூறுப் பிரச்சாரத்தில் இறங்கியுள்ளனர். கம்யூனிஸ்ட் கட்சியின்மீது அடக்குமுறையை ஏவிவிட்டு அதை நசுக்கி அழிப்பதற்கு இதன்மூலம் அவர்கள் நியாயம் கற்பிக்க முயலுகின்றனர்.

சட்சிக் காங்கிரசில் சகோதரப் பிரதிநிதியாகக் கலந்துகொண்ட தோழர் ஹாரிபாலிட் சம்பந்தமாக வெளியான அறிக்கைகளும் இதே போல முற்றிலும் பொய்யானவை. மிகவும் அவதூறானவை.

உச்சியிலிருந்து உள்ளங்கால் வரையிலும் கம்யூனிஸ்ட் கட்சி பிளந்து கிடப்பதாக திரிகம்தாஸ் பூரிக்கிறார். கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர், இவரைப் போன்றே கம்யூனிஸ்ட் கட்சியிலுள்ள 'பிளவு'களைப் பற்றி இவருடைய குருவான அசோக மேத்தா தம்பட்டமடித்தார். பொதுத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி நிர்மூலமாக்கப்படும் என்று குருவி ஜோஸ்யம் கூறினார். அவருடைய ஜோசியத்திற்கு நேர்ந்த கதி அனைவருக்கும் தெரிந்ததே. மதுரையில் நடைபெற்ற கட்சிக் காங்கிரசுக்குப் பின், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி இதற்கு முன் எப்போதுமிருந்ததைக் காட்டிலும் மிகவும் உறுதியாக ஒன்றுபட்டிருக்கிறது. திரிகம்தாசும், அவருடைய ஆசை நண்பர்களும் கஜகர்ணம் கோகர்ணம் போட்டாலும் இந்த உண்மையை மட்டும் அழிக்கவே முடியாது.

# திரு-தமிழக மக்களுக்கு...

(முதற் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு உடனடி நிவாரணங்கள் காண்பதற்காகவும், ஐக்கிய தமிழகம், ஐக்கிய கேரளம் அமைக்க பாடுபடுவதற்காகவும் திரு-கொச்சியின் ஜனநாயக அடிப்படையில் ஒரு மாற்று சர்க்கார் நிறுவ உறுதி பூண்டுள்ள கட்சிகளுக்கும் குரூப்களுக்கும் வோட்டளிக்கப் போகிறீர்களா?

### ஒற்றுமையே மீட்சி வழி

திரு-தமிழகத்தைத் தாய்த் தமிழகத்துடன் சேர்த்து ஐக்கிய தமிழகம் அமைக்க வேண்டும் என்று திரு-தமிழகப் பெருங்குடி மக்களாகிய நீங்கள் துடித்துக் கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய உள்ளத் துடிப்பை தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியும் தமிழ்நாட்டிலுள்ள எல்லா ஜனநாயகவாதிகளும் பூர்ணமாக உணர்கின்றனர், வரவேற்கின்றனர். இந்த லட்சியம் அதிவிரைவில் கைகூடுவதற்காக உங்களுடன் 'தோளோடு தோள் நின்று போராட உறுதி பூண்டிருக்கின்றனர். ஆனால் திரு-தமிழகமக்கள் ஒரு விஷயத்தை உணரவேண்டும் என்று நாங்கள் விரும்புகிறோம். காங்கிரஸையும் அதன் ஜனவிரோத கொள்கைகளையும் முறியடிக்க இந்தியா முழுவதும் ஜனநாயக இயக்கம் ஒன்று நடந்துகொண்டிருக்கின்றது. இந்த இயக்கத்தின் ஒரு பகுதியாக திரு-கொச்சி முழுவதிலுமுள்ள தமிழர்களும் மலையாளிகளும் ஒன்றுபட்டு போராட்டங்கள் நடத்தி இங்கேயும் காங்கிரஸையும் அதன் ஜனவிரோத கொள்கைகளையும் முறியடித்தால்தான் ஐக்கிய தமிழகம் அமைக்க முடியுமென்பதைத் திரு-தமிழகமக்கள் உணர வேண்டும்.

### காங்கிரஸ் கமிஷன் ஒரு மோசடி

ஆந்திர மாகாணம் அமைந்த விதம் இதற்கொரு ஜீவாதார உதாரணமாகும். மாகாணங்களை புனர் நிர்மாணிக்கும் பிரச்னை குறித்து ஆராய்ந்து அபிப்பிராயம் தெரிவிப்பதற்காக காங்கிரஸ்காரர்கள் நியமித்துள்ள உயர் அதிகார கமிஷனனது, மாகாணங்களின் எல்லைகள் குறித்து பரிசீலனை செய்து மொழிவழி மாகாணங்கள் அமைப்பதற்காக நிறுவப்பட்ட கமிஷனல்ல என்பதைத் திரு-தமிழக மக்கள் உணர வேண்டும். மொழிவழி மாகாணங்கள் அமைக்கும் பிரச்னையை எவ்வளவுதூரம் தள்ளிப்போட முடியுமோ அவ்வளவுதூரம் தள்ளிப் போடவும், இப்போது நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலில் அடங்கியுள்ள பிரச்னையை-அதாவது காங்கிரஸை முறியடித்து திரு-கொச்சியில் மறுகட்சிகளின் ஜனநாயக சர்க்கார் நிறுவும் பிரச்னையை-மூடி மறைப்பதற்காகவுமே இந்த உயர் அதிகார கமிஷன் நியமிக்கப்பட்டிருக்கின்றது என்பதைத் திரு-தமிழக மக்கள் உணரவேண்டும்.

காங்கிரஸ்காரர்கள் செய்துள்ள இந்த சூழ்ச்சியின் மர்மத்தைப் புரிந்துகொள்வதற்குப் பதிலாக தி. த. நா. காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸ்காரர்களின் இந்த தந்திரத்தை உண்மையென்று கருதி அதில் தங்கள் நம்பிக்கையை ஊன்றி நிற்கிறார்களே என்பதை அறிந்து வருந்துகிறோம். தி. த. நா. காங்கிரஸ் தலைவர்களின் இந்த நம்பிக்கைதான் இரண்டு வருஷங்களுக்கு முன்பு மைனாரிட்டி காங்கிரஸ் ஆட்சிபீடத்தில் ஏறியிருந்து மக்களுக்கு சொல்லொணா இன்னல்கள் விளைவிப்பதற்கு துணை புரிந்தது என்பதையும் எடுத்துரைக்க விரும்புகிறோம்.

### அனுபவம் என்ன?

காங்கிரஸை முறியடித்துவிட்டு திரு-கொச்சியில் ஒரு மாற்று சர்க்கார் நிறுவ இதர ஜனநாயக சக்திகளுடன் சேரும்படி நாங்கள் பன்முறை தி. த. நா. காங்கிரஸை அணுகி முயன்றோம். இந்த முயற்சிகளை எல்லாம் தி-த-நா. காங்கிரஸ் தலைவர்கள் உதாசீனப் படுத்தி உதறித்தள்ளிவிட்டனர். என்பதைத் திரு-தமிழக மக்கள் உணரவேண்டுமென்று நாங்கள் விரும்புகின்றோம். திரு-தமிழகம் தாய்த் தமிழகத்துடன் சேர்க்கப் படவேண்டிய, அடிப்படை பிரச்னையிலேயே அபிப்பிராய வித்தியாசம் இருப்பதாகவும் அதனால்தான் நாங்கள நடத்திய பேச்சுவார்த்தைகள் முறிந்துவிட்டதாகவும் தி-த-நா காங்கிரஸ் தலைவர்கள் கூறுகின்றனர் இது உண்மையல்ல. ஜனநாயக கட்சிகளுடன் சேர்ந்து காங்கிரஸை முறியடித்து ஒரு மாற்று சர்க்கார் நிறுவுவதற்கு தி. த. நா காங்கிரஸ் தலைவர்கள் தயாராக இல்லை. எனவேதான் நாங்கள் நடத்திய பேச்சுவார்த்தைகள் முறிந்தன என்று எண்ணுகிறோம். கடந்த பொதுத் தேர்தலுக்குப்பின் தி. த. நா. கா. தலைவர்கள் எடுத்த நிலையும், மந்திரி சபையிலே வகித்த பங்கும், திரு-தமிழக மக்களின் பிரச்னைகளுக்கு (மொழிவழி மாகாணம், ரைஸ் மில், ஹைக்கோர்ட் முதலியவைபற்றிய தீர்மானங்களை எதிர்த்தது. கரிந்துபோன நிலங்களுக்கு வரிவஜா மறுத்தது, உப்பளத் தொழிலாளர், மின்சாரத் தொழிலாளர், தோட்டத் தொழிலாளர், கைத்தறி நெசவு பாக்டரி தொழிலாளர் பிரச்னைகளைப் புறக்கணித்தது. விவசாயிகளுக்குக் கஷ்ட நிவாரணம் அளிக்க மறுத்தது, முதலிய பிரச்னைகளுக்கு) தீர்வுகாண்பதிலேநடந்துகொண்ட விதமும் அவர்கள் எந்த முகாமில் நின்றார்கள் என்பதைத் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன.

### போட்டியிடுவது ஏன்?

ஜனவிரோத காங்கிரஸை முறியடித்து திரு-கொச்சியில் மாற்று சர்க்கார் அமைக்க திரு-தமிழகம் தாய்த்தமிழகத்துடன் விரைவில் சேர வழிகாண ஒத்துழைப்போம் என்று நாங்கள் நீட்டிய அன்புக்கரத்தை, தி. த. நா. காங்கிரஸ் தலைவர்கள் தட்டி எறிந்துவிட்டதனால் திரு-தமிழகத்திலே சில தொகுதிகளில் மும்முனைப் போட்டியைத் தவிர்க்க முடியாமற் போயிற்று. இந்நிலையில்தான் நாகர்கோவில் பத்மனுபபுரம், விளவங்கோடு ஆகிய மூன்று தொகுதிகளிலும் காங்கிரஸையும் தி. த. நா. காங்கிரஸையும் எதிர்த்து கம்யூனிஸ்ட்கட்சி தோழர்களை ஐக்கிய முன்னணி அபேட்சகர்களாக நிறுத்திப் போட்டியிடவேண்டியதாயிற்று.

### நமது ஆதரவு

இதைப்போலவே தோவாளை, அகஸ்தீஸ்வரம் ஆகிய இரண்டு தொகுதிகளிலும் காங்கிரஸையும், தி.த.நா. காங்கிரஸையும் எதிர்த்து பி. எஸ். பி அபேட்சகர்கள் போட்டியிடுகின்றனர். செங்கோட்டைத் தொகுதியில் ஐக்கிய முன்னணி ஆதரவாளராக சுயேச்சை அபேட்சகர் ஒருவர் காங்கிரஸை எதிர்த்து போட்டியிடுகிறார். இத்தொகுதிகள் நீங்கலாக நீண்டகரை, குளச்சல், திருவட்டாறு, கிள்ளியூர் கொல்லங்கோடு ஆகிய தொகுதிகளில், தி. த. நா. காங்கிரஸும் காங்கிரஸும் ஒன்றையொன்று எதிர்த்துப் போட்டியிடுகின்றன. இந்நான்கு தொகுதிகளிலும் இந்திய தேசீய காங்கிரஸை முறியடிப்பதற்காக தி. த. நா. காங்கிரசுக்கு ஓட்டளிக்கும்படி அத்தொகுதிகளிலுள்ள வாக்காளர்களிடம் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி கேட்டுக்கொள்கிறது. இவை நீங்கலாக இதர தொகுதிகளில் காங்கிரஸையும், தி. த. நா. காங்கிரஸையும் முறியடிப்பதற்காக தோவாளை அகஸ்தீஸ்வரம் தொகுதிகளில் பி. எஸ் பி. அபேட்சகர்களுக்கும், நாகர்கோவில் பத்மனுபபுரம், விளவங்கோடு தொகுதிகளில் ஐக்கிய முன்னணி அபேட்சகர்களுக்கும் செங்கோட்டைத் தொகுதியில் முற்போக்கு சுயேச்சை அபேட்சகர்களுக்கும் வோட்டளிக்கும்படி அந்தந்த தொகுதி வாக்காளர்களிடம் தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி பணிவன்போடு கேட்டுக்கொள்கிறது.

தேவிகுளம், பீர்மேடு, நெய்யாற்றங்கரை தாலுக்காக்களிலுள்ள தொகுதிகளில் காங்கிரஸையும், திரு-தமிழ்நாடு காங்கிரஸையும் எதிர்த்துப் போட்டியிடுகின்ற ஐ. மு., பி-சோ. கட்சி அபேட்சகர்களுக்கு பொதுமக்கள் ஓட்டளிக்கவேண்டுமென்பது தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சியின் வேண்டுகோள்.

### முன்னேறுவோம்!

மேற்கூறிய முறையை கையாள்வதன்மூலமே திரு-தமிழகத்தில் மிகப்பெரிய ஜனநாயக ஐக்கியத்தைக் கட்டி வளர்த்து ஐக்கிய தமிழகம் அமைக்க போராட்டங்கள் நடத்தி வெற்றிகாண முடியும் என்று தமிழ்நாடு கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது.

★ காங்கிரஸை முறியடித்து திரு-கொச்சியில் ஐக்கிய ஜனநாயக சர்க்கார் அமைப்போம்.

★ மக்களின் உடனடி பிரச்னைகளுக்கு தீர்வுகாண மாற்று சர்க்கார் அமைப்போம்.

★ ஜனநாயக சர்க்கார் நிறுவி இந்திய மக்களின் ஜனசக்தியைத் திரட்டி இந்திய யூனியனில் ஐக்கிய கேரளம் அமைக்க முன்னேறுவோம்.

**இந்திய கம்யூனிஸ்ட் கட்சி**
**தமிழ்நாடு மாகாண கமிட்டி**

சென்னை, 23-1-54

### சென்னை மின்சார தொழிலாளர்கள் வெற்றி

சென்னை மின்சார சர்வீஸ் தொழிலாளர்கள் போனஸ் வேண்டுமென்று நிர்வாகத்துக்கு கடிதங்கள் எழுதினார்கள். மனு போட்டார்கள். பேட்டி கண்டார்கள். நிர்வாகம் கல்லுப் பிள்ளையார் மாதிரி இருந்தது. எனவே, 6-1-54ல் கட்டுப்பாடாக அத்தனை பேரும் உள்ளிருப்பு ஸ்ட்ரைக் அடித்தார்கள்.

அவ்வளவுதானே! வரமாட்டேனென்ற போனஸ், தொழிலாளர்களின் கைக்கு வகையாக வந்துவிட்டது.

ஒற்றுமையும் கட்டுப்பாடும் வெற்றி கண்டது.

## இராமநாதபுரம் ஜில்லா
# சதிவழக்கை வாபஸ் வாங்குக!
### தோழர் ஆர். எச். நாதன் அறிக்கை

ராமநாதபுரம் ஜில்லா கம்யூனிஸ்ட் சதி வழக்கு விசாரணை ஹைகோர்ட்டில் முடிந்துவிட்டது இன்னும் சில தினங்களில் தீர்ப்பு வெளியிடப்படும்.

இந்த சதிவழக்கில் ஈடுபட்டுள்ள தோழர்கள் எம்.வி. சுந்தரம், எம். கிருஷ்ணன், பி. ராமச்சந்திரன், கே. ஷண்முகம் போன்ற தலைவர்கள் 1949ம வருடத்தில் கைது செய்யப்பட்டவர்கள். 1952ம் வருட இறுதியில்தான் ஜாமீனில் விடுதலை செய்யப்பட்டார்கள். அதாவது 3, 4 வருஷங்களுக்கு மேலாக, ஜாமீனில் விட மறுத்து சிறையிலேயே பூட்டிவைக்கப்பட்டார்கள்.

ஏற்கெனவே இவர்கள் நீண்டகால சிறைத் தண்டனை அனுபவித்திருப்பதாலும்-அரசியல் நிலைமையில பெரும் மாறுதல் ஏற்பட்டிருப்பதாலும் இவர்கள் அனைவரையும் விடுதலைசெய்யவேண்டுமென்று சென்னை சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

## சர்வதேச...

(1-ம் பக்க தொடர்ச்சி)

களைப்பு வரும். இப்பொழுது களைப்பு கிடையாது. கைத்தடி ஊன்றாமல் நடக்கிறேன். 3 அடுக்கு மாடியில்கூட தடியின் உதவியின்றி என்னால் ஏறமுடியும்.

என்னைப்போல், எத்தனையோ தேசத்து தொழிற்சங்க தலைவர்கள் அங்கு சிகிச்சை பெறுகிறார்கள். தொழிலாளிவர்க்க தலைவர்களைப் பாதுகாக்க சர்வதேசத் தொழிலாளர்கள் எவ்வளவு உதவி செய்கிறார்கள் பாருங்கள்! ரஷ்யாவும், ஹங்கேரியும் எனக்கு அளித்த உபசாரமும் உதவியும், இந்திய தொழிலாளிவர்க்கத்துக்கும் இந்திய மக்களுக்கும் அளிக்கப்பட்ட மகத்தான மரியாதையாகும்" என்று முகமலர்ச்சியோடு தெளிவாகப் பேசினார்.

★

### ஏ. கே. கோபாலன் வரவேற்பு

கட்சி ஆபீஸில் மத்திய கமிட்டி அங்கத்தினர் தோழர் ஏ. கே. கோபாலனும், மாகாண கமிட்டி அங்கத்தினர்களும் தோழர் கல்யாணத்தை வரவேற்றார்கள். தோழர்கள், ஏ. கே. ஜி.யும், கல்யாணமும் தத்தம் ரஷ்ய அனுபவங்களைப்பற்றி சம்பாஷித்தார்கள். ஏராளமான தொழிலாளர்கள் வந்து வாழ்த்துக்கூறிச் சென்றார்கள்.

ரஷ்ய அனுபத்தைப் பற்றி தோழர் கல்யாணம் ஜனசக்திக்கு பல கட்டுரைகள் எழுதுவார்.

Regd. No. M. 5934

Edited, Printed & Published by G. ALAVANDAR, at Janasakthi Press, Subodhaya Buildings, 38, Mount Road, Madras-6.
OFFICE : 3, Anthony Street, Madras-14.